
www.tamilarangam.net

இதழ் 94 ஏப்.04-ஏப்.17, 1996 விலை 7.00





# தமிழர்களின் மௌனம்...

.........................................

................................

தென் இலங்கை என் மன அரங்கில்
போர் தொடுத்த ஓர் அந்நிய நாடாய்
ஒரு கணப் பொழுதில் சிதைந்து போனது.
ஒருமைப்பாடு என்பது என்ன,
அடிமைப்படுதலா?
இந்த நாடு எங்கள் சார்பாய்
இரண்டுபட்டது என்பதை உணர்ந்தேன்.
நாம் வாழவே பிறந்தோம்.

...............................

..........................

.....................................

எமது இருப்பை
உயர்ந்தபட்சம் உறுதி செய்யும்
சமூக புவியியல் தொகுதியே தேசம்:
எங்கள் இருப்பை உறுதி செய்திடும்
அடிப்படை அவாவே தேசப்பற்று:
நாடுகள் என்று இணைதலும் பிரிதலும்
சுதந்திரமாக,
மானிட இருப்பை உறுதி செய் திடவே
இதோ எம் இருப்பு வழமை போலவே
இன அடிப்படையில்
இந்த வருடமும் நிச்சயமிழந்தது.

....................

......................................

○

-வ.ஐ.ச.ஜெயபாலன்
(மரணத்துள் வாழ்வோம்)

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே-பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புதிய தகவல்:

# லலித் கொலையாளி புலி அல்ல!

லலித் அத்துலத் முதலி அவர்கள் படுகொலை செய்யப்பட்டது புலிகள் இயக்கத்தினரால் என்றும், அதற்காக பயன்படுத்தப்பட்ட நபர் முகலன் வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட ரகுநாதன் என்றும் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட பொய்யை, பொய்யாக்கிவிட்டு, லலித்தை கொலை செய்த உண்மையான கொலைஞன் விசாரணைக் குழு மூலம் கொலன்னாவயில் வைத்து கைது செய்யப்பட்டார்.

வெல்லம்பிட்டியவில் சுது மஹத்தயா என்ற பெயர் கொண்டவன் பணத்துக்காக கொலை புரிபவன், முகலன் வீதியில் கண்டெடுக்கப்பட்ட ரகுநாதனைப் போன்ற முக அமைப்புக் கொண்டவன். லலித்தை சுட்ட கொலைஞனின் உடம்பில் லலித்தின் பாதுகாப்பு அதிகாரி சுட்ட அடையாளம் இருக்க வேண்டும். இந்நபரின் உடலில் இவ் அடையாளம் இருப்பதாக அறியக் கிடைக்கின்றது. லலித்தை கொன்ற நபரை சமீபமாக பார்த்த நபர்கள் ஐவர் உள்ளனர். இதில் மூவர் (நிஹால் ரணதுங்க, பிமல் கவிந்திர, அஜித் சில்வா) மேடைக்கு தேவையான ஒலிப்பெருக்கிகளையும் ஜெனரேட்டர்களையும் வழங்கும் நிறுவனத்தின் சேவையாளர்கள். அத்துடன் சுட்ட நபர் இம்மூவருடன் மேடைக்கு கீழ் இருந்தவர் எனவும் கூறப்பட்டது. லலித்தின் பாதுகாப்பு அதிகாரி, திலக் சாந்த அந்நபரை கண்ட நான்காவது நபராகும். அத்துடன் லலித்தின் உதவியாளர் சலில முனசிங்க ஐந்தாவது நபராகும்.

இவர்களில் சிலர் கைது செய்யப்பட்ட நபரை அடையாளங்காட்டியுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சுது மஹத்தயா, மற்றும் ரகுநாதன் ஆகிய இருவருக்குமிடையில் முக ஒற்றுமை அதிகளவில் இருப்பதாக கூறப்படுகின்றது.

சுது மஹத்தயா சிறை வைத்தியசாலையில் சிந்தக என்பவரை சந்தித்துள்ளார். வாழ்நாளில் தான் செய்த மிகப் பெரிய தவறு லலித் அத்துலத்முதலி அவர்களை கொலை செய்தது தான் என சிந்தகவிடம் அவர் கூறியுள்ளார். சிந்தக மரணமடைவதற்கு சில நாட்களின் முன் விசாரணை அதிகாரிகள் இதைப் பற்றி விசாரித்தபோது, சிந்தக சுது மஹத்தயா இவ்வாறு கூறியதை ஒத்துக்கொண்டுள்ளார் என அறியக் கிடைக்கின்றது.

சூழ்ச்சியின் பங்குதாரர்களாக தற்போது பல நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் சொத்தி உபாலி, அவரின் நெருங்கிய உறவினரும் ஐ.தே.க. மாகாண சபை அமைச்சருமான யூ.எல்.செனவிரத்னவும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர். சூழ்ச்சியின் பிரதான நபர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இப் படுகொலை ஜனாதிபதி பிரேமதாசவின் மூலமாகவோ, அல்லது ஜனாதிபதிக்கு நெருக்கமான சக்திகள் மூலமாகவோ மேற்கொள்ளப்பட்டது என்பது தற்போது வெளிபடையாகத் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிநபரை முன்னரே தெரிவு செய்துள்ளமையும், குற்றத்தை புலிகளின் மேல் சுமத்திவிடவும் இதற்கு உதவியாக துப்பாக்கி நபரைப் போன்ற தோற்றமுடைய தமிழ் இளைஞன் ஒருவனை சில காலமாக தடுப்புக் காவலில் வைத்திருந்தமையும் தெரியவருகின்றது.

முழு சூழ்ச்சியையும் புலிகள் மேல் சுமத்திவிட பொலிஸ் மற்றும் இரகசிய பொலிஸ் அதிகாரிகள் உதவி புரிந்துள்ளமையும் அறியக் கிடைக்கின்றது.


லலித் படுகொலை தொடர்பாக தோன்றிய பிரதான சந்தேகங்களை தவிர்த்தவராக அரசாங்கப் பரிசோதகர் காணப்படுகின்றார். லலித்தின் உடம்பில் இருந்த குண்டு ரகுநாதனின் துப்பாக்கியில் இருந்தது என்றும், ரகுநாதனின் உடலில் இருந்த குண்டு லலித்தின் பாதுகாப்பு அதிகாரியின் துப்பாக்கியில் இருந்தது என்றும் கூறியது, அரசாங்கத்தின் பரிசோதகர் ஆகும். இவரின் அறிக்கை ஏற்பட்ட சந்தேகங்களை புறந்தள்ளி உண்மையையும் மறைக்க உதவியது. இவ்வறிக்கையை வெளியிட்ட இவர் குறைந்தது ரகுநாதனின் துப்பாக்கியைக் கூடப் பரிசோதிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

லலித் படுகொலை புலிகளால் மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்திய பொலிஸ் அதிகாரிகள் இன்னும் உயர் பதவியை வகித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நபர்களை இவ்விடங்களில் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் விசாரணைகளுக்கு குந்தகம் ஏற்படும் நிலை தோன்றும்.

ஜனாதிபதி பிரேமதாச, லலித் கொலையை மேற்கொண்டவர்களாலேயே கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இக்கருத்தின் உண்மை பொய், கூடிய விரைவில் தெரிய வரும் என நம்புகின்றோம்.

(31031996 ராவய)



## ஒரு அறிவித்தல்

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் (MIRJE) தலைமையகம் இல.4 ஜயரத்ன மாவத்தை கொழும்பு-5 என்ற முகவரியில் செயற்பட்டு வருகின்றது.

இ.நீ.ச. இயக்கம் இதுவரை இலங்கையின் எப்பகுதியிலாவது காரியாலயம் அமைப்பதற்கோ, அல்லது வேறு ஏதாவது நிறுவனம் இதன் முகவரியையோ, அல்லது இதன் தொலைபேசி இலக்கத்தையோ ஏனைய நிலையத்தின் நடவடிக்கைகளுக்கு உபயோகிப்பதற்கு அனுமதித்ததில்லை.

குறிப்பாக இன்டர்நஷனல் இளைஞர் நற்பணிச்சங்கம் (I.Y.W.S. - நோர்வே) என்ற பெயரில் இயங்கி வரும் நிறுவனத்திற்கும் மோர்ஜ் இயக்கத்திற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லையென மோர்ஜ் நிறுவனத்தின் தலைவர் சார்ள்ஸ் அபேசேகர தெரிவித்துள்ளார்.

ஆகையால் ஏதாவது நிறுவனமோ, அல்லது தனிநபர்களோ, இ.நீ.ச. இயக்கத்தின் விலாசம், தொலைபேசி இலக்கத்தைப் பாவித்து எவருடனும் நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டால் அத்தகைய நிதி நடவடிக்கைகளுக்கு இ.நீ.ச. இயக்கம் பொறுப்புக் கூறவேண்டிய அவசியம் இல்லையெனத் தெரிவித்துக்கொள்கிறது.

# கந்தசாமியும் ஒரு புலி!
-கோட்டைப் பொலிஸ்

மோர்ஜ் நிறுவனத்தின் ஸ்தாபக உறுப்பினரும் அவ்வமைப்பின் தேசிய கமிட்டி உறுப்பினருமான கந்தசாமி அவர்கள் மார்ச் மாதம் 30ம் திகதி கோட்டை பொலிசாரால் காலிமுகத்திடலில் வைத்து கைது செய்யப்பட்டார். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் செயலணிக் குழு, வழக்கறிஞர்கள் மற்றும் இன்னும் சில மனித உரிமைகள் அமைப்புகள் தலையிட்டதன் பின் இறுதியாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் தனிப்பட்ட பிணையின் மீது இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் இவர் வெளிநாட்டவர் ஒருவருடன் முச்சக்கரவண்டியொன்றில் சென்று கொண்டிருந்தபோதே புலிச்சந்தேகநபர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார். இவரை விடுவிக்க பொலிஸ் நிலையம் சென்ற சட்டத்தரணி விநாயக மூர்த்தியையும் புலிக்கு வக்காலத்து வாங்க வந்த இன்னொரு புலி என பொலிசார் திட்டி விரட்டினர்.

மனித உரிமை செயலணிக்குழு (HRTF Human Rights Task Force) வினர் அவ்விடத்துக்கு விஜயம் செய்திருந்தபோது கூட அவர்களையும் அக்கைது செய்த அதிகாரி திட்டித் தீர்க்கவே HRTF இன் பொறுப்பதிகாரி இது பற்றி ஜனாதிபதியிடம் தாம் முறையிடப்போவதாக எச்சரிக்கை செய்தார். இதன் பின்னரே அவர்களுடன் முகம் கொடுத்துப் பேசியுள்ளார் அப் பொலிஸ் அதிகாரி.

கந்தசாமி அவர்கள் மோர்ஜ் அமைப்பின் கீழ் இயங்கி வரும், சரிநிகரின் சகோதர நிறுவனமான மனித உரிமைகள் பிரிவின் (HRD-Human Rights Desk) இன் இணைப்பாளருமாவார். கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் கைது செய்யப்படும் பல இளைஞர்களின் விடுதலைக்காக செயற்பட்டு வந்த மனித உரிமையாளர் கந்தசாமிக்கே இந்த நிலையென்றால் ஏனையோர் கதிதான் என்ன?

1990 ஒகஸ்டிலும் மோர்ஜ் நிறுவனத்தின் தேசிய கமிட்டி உறுப்பினரும் ரூபவாஹினியில் கடமையாற்றி வந்தவருமான குக மூர்த்தி அவர்களும் கல்கிஸ்ஸையில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் சில



அமைப்புகளின் தலையீட்டின் பின் விடுதலை செய்யப்பட்ட போதும் ஓரிரு வாரங்கள்ளின் பின் செப்டம்பர் 06ம் திகதி ஜாவத்தை வீதியில் வைத்து கடத்தப்பட்டிருந்தார். அவரது மோட்டார் சைக்கிள் கறுவாக்காட்டு பொலிஸ் நிலையத்தில் இருப்பது தெரிந்து அது பற்றி விசாரித்தபோது அவ்விடத்தில் அவரது மோட்டார் சைக்கிளை தாம் அநாதரவான நிலையில் கண்டெடுத்ததாக குறிப்பிட்டார்கள் கறுவாக்காட்டு பொலிசார். . இவரைத்தேடி பல மனித உரிமைகள் குழுக்கள் முயற்சி செய்த போதும் நாட்டில் எந்தவொரு பகிரங்க அல்லது இரகசிய தடுப்பு முகாம்களிலேயோ சிறைக்கூடங்களிலேயோ இவர் இல்லை எனத் தெரிய வந்தது. இவரது கடத்தல் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தும் இதுவரை இவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

ஐ.தே.க. ஆட்சியில் மட்டுமல்ல இந்த அரசாங்கத்திலும் இத்தகைய கடத்தல்கள் நடந்து வரும் ஒரு சூழலில், இச்சம்பவம் மீள நினைவு கூரத்தக்கதாகும். பிணையில் விடுவிக்கப்பட்டு வந்த கந்தசாமி அவர்களிடம் நடந்தது என்ன என்று சரிநிகர் விசாரித்தபோது அவர் சொன்னார்: 'இப்போதுதான் எனக்குத் தெரிகிறது வெள்ளைக்காரனுடன் கதைப்பதும் இந்த நாட்டில் குற்றம் என்று''.

## இராணுவ கைதிகள்

விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலின் கீழ் 400க்கும் மேற்பட்ட படையினர் இருப்பதாக சில இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளின் பல்வேறு சமர்களின் போது பிடிக்கப்பட்ட லெப்டினன்ட், கோப்ரல், போன்ற பதவிகள் வகித்த இராணுவத்தினர் மற்றும் பொலிசார் உட்பட பல உயரதிகாரிகளும் இந்த 400 பேரில் அடங்குவர் எனத் தெரியவருகிறது.

இந்தப் படையினரை விடுவிக்கும் முயற்சியில் தற்போது அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியான ஜோன் கிளோட் என்பவருடன் பாதுகாப்புத் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'புலிகள் ஒரு போதுமே சிறைக்கைதிகளை வெளிக்காட்டாத, எந்த ஒழுங்குமுறைகளையும் பின்பற்றாத சர்வதேச சட்டங்களைக் கூட கருத்திற்கொள்ளாத அமைப்பு' என்று இவ்வதிகாரிகள் குழு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு புகார் செய்துள்ளது.

இதே வேளை ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலர் வெறும் புலிச் சந்தேக நபர்களாகவே பல ஆண்டுகாலமாக ஸ்ரீலங்கா சிறைகளில் தடுப்பில் இருந்து வருகின்றார்கள். இவர்கள் தொடர்பான விசாரணைகள் நடாத்தப்படவோ அன்றி விடுதலை செய்யபடவோ இல்லை என்பதை அரசு ஒரு போதும் கவனத்தில் எடுத்ததில்லை.

## ஒலிப்பதிவு நாடாக்கள்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியின் போது பல சந்தர்ப்பங்களில் இரகசியமாக நடத்தப்பட்ட சந்திப்புகள் கலந்துரையாடல்கள் பற்றிய பதிவு செய்யப்பட்ட நாடாக்களை முன்னாள் தகவல் தொடர்பு இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க அப்போதே சிங்கப்பூரில் ஒரு வங்கியில் பாதுகாத்து வைத்துள்ளதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்காலத்தில் இவை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படக்கூடும் என்கின்ற காரணத்தால் இவற்றைத் தொடர்ந்தும் பாதுகாக்கப் போவதாக ஏ.ஜே.ரணசிங்க கருத்து வெளியிட்டிருக்கிறார்.

# மு.த ஒரு நினைவு நாள் குறிப்பு

மு. த. என அழைக்கப்பட்ட மு. தளையசிங்கம் 1935 ஒக்ரோபர் 20ல் பிறந்தார். மு.த வெறும் 37 ஆண்டுகள் மட்டுமே எம் மத்தியில் வாழ்ந்து தமக்கேயுரிய கூரிய சிந்தனையாற்றலுடன் ஆளுமையுடன் தனது பதிவுகளை பல தளங்களிலும் விட்டுச் சென்றுள்ளார். இதனை நாம் மறுக்க முடியாது. எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும் சுபாவம். அதேவேளைதான் நம்புபவற்றில் தீவிரப்போக்கு. தனது கருத்துக்கு எதிர்ப்புக் கிழம்பும் போது அதைச் சந்திப்பதில் அலாதிப் பிரியம். இளமைக் காலத்திலிருந்தே இது அவரோடு கூட வந்தது. பள்ளிக்கூட மேடையில் 'கடவுள் என்ற ஒருவர் இல்லை' என்ற தி.மு.க. பாணியில் அமைந்த பேச்சுக்காக தண்டனைக்குள்ளானவர்.

1957ல் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்தபோது, இவர் எழுதிய 'தியாகம்' என்ற முதல் சிறுகதை சுதந்திரனில் வெளிவந்தது. இந்தக் கதையின் தலைப்பும் அதன் உள்ளடக்கமும் அவரது இறுதிக் காலத்தைக் கோடிட்டுக் காட்டுவதாகவே அமைந்தது. சமஷ்டி ஆட்சிக்கான தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தில் கோபாலன் என்ற இளைஞன் பங்குபற்றி இறந்து போவதே கதை. ஆனால் இத்தனைக்கும் தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகப் போராட்டத்தை அக்காலகட்டத்தில் இன்னும் ஆரம்பிக்கவில்லை. அதனால் இப்படி நடைபெறாத ஒன்றை நடைபெற்றதாக ஒருவர் எழுதலாமா என்று அ. முத்துலிங்கம் என்னும் சிறுகதை எழுத்தாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

1960க்குப் பின்னர் வாசிப்பு, எழுத்து, சிந்தனை என்று ஒரு தீவிரப்போக்கு உருவானது. கிழக்கத்தேய சிந்தனைகளில் ஊறித் திளைத்தல் ஒரு போக்கானது. கிழக்கத்தேய சிந்தனைகள் எப்போதும் தமது வெற்றிதோல்வியை (உண்மையை பொய்யை அறிய) அறிய அதை வாசிப்பவனையே பரிசோதனைக்கு கோரிநிற்பதால் மு. தவும் அப்பரிசோதனைக்குரியவராக தன்னை ஆக்கிக்கொள்பவரானார்.

மு.தவின் முக்கிய பண்புகளில் ஒன்று தான் வரித்துக் கொள்ளும் கொள்கைகளுகளுக்கேற்ப வாழ முனைவது - அதன் மூலம் அதன் உண்மை. பொய்களை பரீட்சிக்க முனைவது.

இதன் பின்னணியிலேயே அவரது சாதிப் போராட்டம், அவரது சத்திய தத்துவம், அதன் உள்ளீடான மெய்முதல் வாதம் போன்றவற்றைப் பார்க்க வேண்டும்.

அவரோடு நண்பர்களாகவும், ஆத்மீகர்களாகவும் முற்போக்கு வாதிகளாகவும் சர்வோதயவாதிகளாவும் பழகியவர்கலெல்லாம் உண்மையானவர்களா? இவர்களது உண்மைக் கோலத்தை அறிய சந்தர்ப்பம் வரும் போது 'சுரண்டிப்' பார்க்க வேண்டும் என்று மு.த. கூறுவதுண்டு.

அப்படி ஒரு சுரண்டிப் பார்க்க கூடிய சந்தர்ப்பத்தை அவரது சாதிப்போராட்டம் ஏற்படுத்தியது.

அவருக்கு சர்வோதயவாதிகளாக ஆத்மீகர்களாக முற்போக்கு வாதிகளாக காட்டிக் கொண்டவர்கள் இப்போராட்டத்தின் போது பின்வாங்கிக் கொண்டார்கள். இவர்கள் அவருக்கு எதிராகவும் நடந்து கொண்டார்கள். அவர் எதிர்பாராத இடங்களில் இருந்த பலர் அவருக்கு உதவ முன்வந்தார்கள்.

சாதிப்போராட்டம் அவருக்கு அத்மீகர்கள், முற்போக்குவாதிகள் என்று சொல்வபர்களின் குறையை வெளிப்படுத்திய ஒன்றாக அமைந்தது. அவரது மெய்முதல்வாதக் கோட்பாடு இதன் அடிப்படையிலேயே போடப்படுகிறது.

மு.த இறக்கும்போது (1973 ஏப்.02இல்) அவருக்கென இருந்த சொத்துக்களையும் காணிவீடுகளையும் பொதுஸ்தாபனம் ஒன்றுக்காகவே எழுதிவிட்டுச் சென்றார்.

அவர் எழுதிய புத்தகங்கள்:-

புதுயுகம் பிறக்கிறது - சிறுகதைகள் (1965)
ஒரு தனி வீடு
போர்ப்பறை 1970

இறந்த பிறகு வெளிவந்தவை:-

மெட்டிகள் - 1974
ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி
முற்போக்கு இலக்கியம்.

இவை தவிர இன்னும் பல்வேறு எழுத்துக்கள் படைப்புக்கள் தொகுக்கப்படாமல் உள்ளன.

மு.த. எழுப்பிய, முன்வைத்த கருத்துக்களும் சரி, இதற்கு இடதுசாரி அணியினர் மத்தியிலிருந்து வெளிப்பட்ட கருத்துக்கள் மதிப்பீடுகளும் சரி இன்னும் முழுமையான பரிசீலனைக்கு மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படவில்லை.

இவ்விரு கருத்து நிலைப்பட்ட சிந்தனைப் பாங்குகள் குறித்தும் இதுவரை மேற்கொள்ளப்படாதுள்ள ஒரு கோட்பாட்டு நிலைப்பட்ட ஆய்வு ஈழத்தின் இலக்கிய புத்தாக்கத்துக்கு வளம் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

அது ஆகப்போவது எப்போது?

*மாலின்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





> சந்திரிகா அரசாங்கம் முன்பொருதடவை இப்பத்தியில் குறிப்பிட்டது போல அதன் ஸ்திரமான அரசியல் நிலைப்பாடுகளின் உறுதி காரணமாக ஆட்சியைக் கைப்பற்றியது என்பதை விடவும் முன்னைய ஐ.தே.க ஆட்சியின் ஊழல் மனிதப்படுகொலை ஜனநாயக விரோத நடவடிக்கைகள் என்பவற்றின் மீதான எதிர்ப்புணர்வுகள் எழுந்ததன் காரணமாக எழுந்த ஒரு எதிர்ப்பலைக்கான வடிகாலாக உருவான ஒன்றுதான். இந்த அரசாங்கம் அதன் அமைப்பிலும் வடிவிலும் முன்னைய அரசாங்கத்தை விட அழகாக தோற்றம் காட்டிய போதும் அதன் உள்ளடக்கத்தில் இரண்டும் ஒன்றே என்று ஏற்கனவே எழுதியிருந்தோம். இத்தகைய ஒரு விமர்சனம் மிகவும் காரமானதாக காலத்தை முந்தியதாக பலருக்கு-அதுவும் குறிப்பாக இந்த அரசாங்கத்தினை தமது நம்பிக்கை ஒளியாக கொண்டிருந்தவர்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாக அமைந்திருந்தது. ...ஆனால்......

அண்மையில் அடுத்தடுத்து வெளிவந்த ஜனாதிபதி சந்திரிகா அவர்களது இந்தியப் பத்திரிகைகட்கான பேட்டிகள் பல பலத்த சர்ச்சைகளை எழுப்பிவிட்டுள்ளன. குறிப்பாக தமிழ் மக்கள் தரப்பில் இருந்து பல எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன. இலங்கையின் ஜனாதிபதிகளின் வரிசையில் இவ்வாறான கருத்துக்களை ஒரு ஜனாதிபதி தெரிவிப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. ஆனாலும் 'சந்திரிகாவுமா?' என்ற அதிர்ச்சி அலை வழமையை விடப் பலமான எதிர்ப்பு அலைகளை கிளப்பி விட்டுள்ளது....

அப்படி என்னதான் சந்திரிகா சொல்லிவிட்டார்?

தமிழ்க் கட்சிகள் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. அவை புலிகளுக்கு எதிராக பகிரங்கமாக அறிக்கையிட வேண்டும். தமிழ் மக்கள் சமாதானத் தீர்வுக்காக புலிகளை நிர்ப்பந்திக்க வேண்டும். சமாதானத் தீர்வும் பொதியை ஏற்றுத் தமிழ்க் கட்சிகள் அதை தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும்... தமிழ் மக்கள் மௌனமாக இருப்பதன் மூலமாக புலிகளுக்கு ஆதரவு வழங்குகிறார்கள்... புலிகளது சிங்களக் கிராமங்கள் மீதான தாக்குதல்களினால் சலிப்படையும் சிங்கள மக்கள் வன்முறையை நோக்கி தூண்டப்படுவதிலிருந்து தடுப்பது சாத்தியமில்லாமலும் போகலாம்'' இவை தான் அந்த சர்ச்சைக்குரிய கருத்துக்கள். இந்து நாளிதழ், பிஸினஸ் வீக் சஞ்சிகை, மற்றும் ஸ்டார் ரிவி என்பவற்றுக்கு அளித்த பேட்டிகளின் போது இக்கருத்துக்களை ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போதும், பின்னர் வரலாறு காணாத பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் ஜனாதிபதி சந்திரிகா தேர்தலில் தெரிவு செய்யப்பட்டபோதும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம் தான் சிறுபான்மை இனங்களின் வாக்குகள் இந்த வெற்றியில் கணிசமான பங்கை ஆற்றியிருக்கின்றன என்பதாகும். ஆனால்,

வெகுவிரைவிலேயே வழமைபோல இந்த விடயம் மறுக்கப்பட்டது மட்டுமல்லாமல் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான போக்குகள் வெளிப்படவும் தொடங்கின. இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு, புலிகளுடனான யுத்தம் வெடித்தபின், யுத்தமூலம் சமாதானம் என்பதாக உருமாறிப் போய்விட்டது. பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனையாக இருக்கவேண்டிய பரஸ்பர நம்பிக்கை அங்கீகாரம், கௌரவிப்பு என்பன கைவிடப்பட்டு இராணுவ மேல்நிலை முன்நிபந்தனையாகிப் போய்விட்டது. இலட்சக்கணக்கில் மக்களை அகதிகளாக்கிய பின்னும், இம் முன்நிபந்தனை பூர்த்தியானதாகத் தெரியவில்லை. புலிகளை முற்றாக ஒழித்து விட்டு பின்னர் பேசலாம் என்ற அபிப்பிராயம் கூட அரச தரப்பில் வலுவாக இருக்கத்தான் செய்கிறது.


புலிகளை அடக்கிய பின் பேசுவது என்பது அரசாங்கம் தனது மனதுக்கு பிடித்த ஒரு தீர்வை ஒரு சில ஏஜன்டுகள் மூலமாக தமிழ் மக்கள் தலையில் கட்டிவிட முடியும் என்ற எதிர்பார்ப்பில் இருந்து எழும் ஒன்றாகும். சுயநிர்ணய உரிமை கிடையாது; பாரம்பரிய தாயகக்கோட்பாடு பற்றிப் பேசவே வேண்டாம்; அதிகாரப்பரவலாக்கல் விவகாரம் பற்றி தெரிவுக்குழுவுடன் பேசுங்கள்; பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பது ஒன்றும் பிரச்சினையே அல்ல என்பன போன்ற பதில்களால் கிட்டத்தட்ட அரசியல் தீர்வு முயற்சியில் அரசாங்கம் தமிழ் மக்களது அபிலாஷைகளை அவ்வளவாக கணக்கிலெடுக்கவில்லை; மாறாக எப்படியாவது ஒரு தீர்வை உருவாக்கினோம் என்று ஆகிவிட்டால் போதும் என்ற நிலைக்கு வந்துள்ளது தெளிவாகிறது.


சந்திரிகா அரசாங்கம் முன்பொருதடவை இப்பத்தியில் குறிப்பிட்டது போல அதன் ஸ்திரமான அரசியல் நிலைப்பாடுகளின் உறுதி காரணமாக ஆட்சியைக் கைப்பற்றியது என்பதை விடவும் முன்னைய ஐ.தே.க. ஆட்சியின் ஊழல், மனிதப்படுகொலை, ஜனநாயக விரோத நடவடிக்கைகள் என்பவற்றின் மீதான எதிர்ப்புணர்வுகள் எழுந்ததன் காரணமாக எழுந்த ஒரு எதிர்ப்பலைக்கான வடிகாலாக உருவான ஒன்றுதான். இந்த அரசாங்கம் அதன் அமைப்பிலும் வடிவிலும் முன்னைய அரசாங்கத்தை விட அழகாக தோற்றம் காட்டிய போதும் அதன் உள்ளடக்கத்தில் இரண்டும் ஒன்றே என்று ஏற்கெனவே எழுதியிருந்தோம். இத்தகைய ஒரு விமர்சனம் மிகவும் காரமானதாக காலத்துக்கு முந்தியதாக பலருக்கு - அதுவும் குறிப்பாக இந்த அரசாங்கத்தினை தமது நம்பிக்கை ஒளியாக கொண்டிருந்தவர்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாக அமைந்திருந்தது.

ஆனால், காலம் இந்த அரசாங்கத்தின் முகமூடியைத் தூக்கி அதன் உள் அழகை தெளிவாகக் காட்டத் தொடங்கியுள்ளது. அதிலும், குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் ஏனோதானோத்தனம் இதனை வேகமாகவே வெளிக் காட்டி வருகிறது.



# இது எச்சரிக்கை அல்ல அம்மணமான உண்மை!





இலங்கை அரசு, 1977ல் உருமாற்றம் பெற்ற பின் வளர்ந்து வந்தவிதத்தில் அது ஒரு இராணுவ மயப்படுத்தப்பட்ட ஜனநாயக விழுமியங்களின் சமாதியில் தனது அத்திவாரத்தை கொண்டுள்ள ஒன்றாகவே இன்று உள்ளது. அதன் அரசாங்கத்தின் தலைவராக வருபவர் ஜே.ஆராக இருந்தால் என்ன சந்திரிகாவா இருந்தால் என்ன அதன் அடிப்படை மாறாக இருக்கும் வரை அரசாங்கத்தின் குணாம்சரீதியில் மாற்றங்கள் ஏற்படுவதில் சாத்தியமில்லை. தனிநபர்களது செயலாற்றும் பாணி சில சில வேறுபாடுகளைக் காட்டலாம்.

ஆனால் அடிப்படை ஒன்றாகவேதான் இருக்கும் என்பது மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட ஒரு கூற்றாகத் தோன்றலாம். ஆனால், இது ஒரு அழுத்தமான உண்மை என்பதை இன்றைய சம்பவங்கள் திரும்பவும் வலியுறுத்திக் காட்டுகின்றன.

ஒற்றை ஆட்சி முறையை மாற்றி சமஷ்டி முறையிலான ஒரு அரசியலமைப்பை தோற்றுவிப்பதன் மூலமே நாட்டில் இன சௌயன்யத்தை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பினை ஓரளவுக்காவது உருவாக்கலாம் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் - குறிப்பாக சந்திரிகா நன்கு அறிவார். இது பற்றி அவர் நிறையவே பேசியுள்ளார். ஆனால் சமஷ்டி ஆட்சிக்கும் இன சௌயன்யத்துக்கும் தேவையான மதச் சார்பற்ற தன்மையை கொண்டு வருவது போன்ற அடிப்படை விடயங்களில் கைவைப்பதற்கே இவர்களுக்கு இன்று முடியாமல் உள்ளது. புலிகளின் நடவடிக்கைகளால் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சலிப்புற்றுள்ளார்கள் என்று கூறினாலும், உண்மையில் சலித்துப் போய்விட்டது அவரே என்பதையே அவரது பேச்சுக்கள் காட்டுகின்றன. இந்தச் சலிப்புணர்வும் தனது இயலாமை காரணமாக ஏற்படும் எரிச்சலும் சேர்ந்து அவரை இம்மாதியெல்லம் பேச வைக்கிறது.

உண்மையில் இன்றைய கட்டம் சந்திரிகா என்ற அரசியல் வாதிக்கு ஒரு மாறும் கட்டமாகும். ஒன்றில் அவர் தேர்ந்த ஒரு அரசியல் வாதியை போல், இந்த அரசுக்கேற்ற ஒருவராக தன்னை உருமாற்றிக்கொள்ள வேண்டும். அல்லது அதன் முழு அமைப்பையுமே மாற்றியமைக்கும் துணிவுடன் தனது பதவியைப் பற்றிக் கவலைப்படாது செயற்படத் தயாராக இருக்க வேண்டும். அவர் பேசிய, செயற்பட விரும்பிய சகல முதலாளித்துவ அம்சங்களையும் உடைப்பில் போட்டு விட்டு முன்னைய ஜனாதிபதிகள் வரிசையில் ஒருவராக மாறுவதா அல்லது தான் பேசிய கொள்கைக்காக நிற்பதா என்பதை அவர் இன்னமும் தீர்மானித்ததாகத் தெரியவில்லை. இந்த நிலை அவரை முன்னுக்குப் பின் முரணான, நேர் எதிரான விடயங்களை பேசும் ஒருவராக மாற்றி விட்டுள்ளது.

இலங்கை மக்களைப் பொறுத்தவரையில், அதுவும் குறிப்பாக சிறுபான்மை இன மக்களைப் பொறுத்தவரையில் சந்திரிகா முழங்கிய ஜனநாயக முழக்கங்களைக் கேட்டு அவரை நம்பியவர் என்பதால் அவரது இன்றைய பேச்சுக்கள் அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் இன்றைய சூழலில் இவருக்கு முந்திய எந்த ஜனாதிபதி இருந்திருந்தாலும் கூட இவ்வாறான ஒரு பேச்சைத்தான் பேசியிருப்பார் என்பதில் சந்தேகப்பட ஒன்றுமில்லை.

தமிழ் மக்களும் சரி, அவர்களது தலைவர்களாக தம்மைக் கூறிக்கொள்பவர்களும் இன்றைய கட்டத்தில் சரி தீர்மானிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் உண்டு. அதுதான் இந்த நாட்டில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வது என்பது ஜனாதிபதி எதிர்பார்ப்பது போல மகஜர் எழுதிக் கொடுக்கும் விவகாரம் அல்ல. அது தமது உரிமைக் கோரிக்கைக்கான போராட்டத்தை நடாத்துவதுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகும்! பேச்சுவார்த்தைகள், இன ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படும் சக்திகளிடையே மட்டுமே வெற்றிபெற முடியும். ஆனால், இங்கோ யுத்தபலம் தான் பேச்சுவார்த்தையை தீர்மானிக்கிறது என்ற போக்கு இருப்பதால் அது வெற்றிக்கு இட்டுச் செல்லுமா என்பது சந்தேகமே.

எனவே, அரசாங்கம் தான் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுப்பொதியை நடைமுறைக்கு கொண்டு வருவது உள்ள தடைகளை அகற்றும் முயற்சியில் அக்கறையாக ஈடுபடுகிறதா அல்லது அந்தத் தடைகளில் இருந்து பழியைப் போட்டுவிட்டு நல்லபெயருடன் பண்டாரநாயக்காப் பாணியில் பின்வாங்க விரும்புகிறதா என்பதை முதலில் தமிழ்க் கட்சிகள் உணர்ந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் தாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

இனக்கலவர பூச்சாண்டி போன்றவைகள் மூலமாக தமிழ் மக்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்கலாம் என்று இந்த அரசாங்கமும் எதிர்பாக்குமானால் அது இந்த நாட்டை பாரிய அழிவுக்கே இட்டுச்செல்லும். இதை அரசாங்கத் தரப்பு விளங்கிக் கொண்டுள்ளதோ என்னவோ தெரியவில்லை. அரசியல் தீர்வுப் பொதி உள்ளடக்கியுள்ள விடயங்கள் இன்னமும் வெறும் எழுத்துக்களாகவே உள்ளன என்பதை மறந்து விட்டு அது தமிழ் மக்களை அதற்காக இயங்கச் சொல்லி கேட்கிறது.

அரசனை நம்பி புருசனைக் கைவிட எந்தப் பெண்தான் சம்மதிப்பாள்?

தமிழ் மக்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன?

முதலில் அவர்களுக்கு தேவை நம்பிக்கை. பிறகுதான் மற்றவையெல்லாம். இதை உருவாக்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் தான் இருக்கிறது. அதை உருவாக்காமல் யார் மீதும் எரிந்து விழுவதில் பயனில்லை. பயனில்லை மட்டுமல்ல, அது இருக்கும் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் சிதறடித்து விடும்.

இது எச்சிரிக்கை அல்ல. அம்மணமான உண்மை!.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மூன்றாவது தரப்பு அவசியமில்லை!



**இம்முறை நம் பத்திரிகைக்கான செவ்வியில் கலந்து கொள்கிறார் பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளை அவர்கள். செவ்வியில் கலந்து கொள்வதற்கு முன்னர் ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளை அவர்கள் கோரிக்கை ஒன்றை விடுத்தார். அதாவது அரசின் தீர்வு யோசனைகள் மற்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பான கேள்விகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே அக்கோரிக்கையாகும்.**
**ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளை அவர்களை தெரிவுக்குழுவுக்கு தேர்ந்தெடுக்காமையே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார். அதனால் வாசகர்களுக்காக நாம் கேட்கவிருந்த பல கேள்விகள் தவிர்க்கப்பட்டு விட்டன.**

நேர்காணல்: அநுரந்த
தமிழில்: ரத்னா







நிதி திட்டமிடல் மற்றும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்க பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ பிள்ளை

**இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை அபிவிருத்தி செய்யும் அபிலாஷையோடு பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தால் அமைச்சு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை வலுப்படுத்த மேற்கொண்டுள்ள படிமுறைகள் எவை?**

இவ்வமைப்பிற்குப் பொறுப்பு வகிப்பது ஜனாதிபதி அவர்கள். இந்த நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் அவர் முன் வந்துள்ளார். தற்போது கூட இது தொடர்பான பாரிய அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசியல் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டு சமாதானத்தை மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அது போலவே இடம் பெயர்ந்த மக்களுக்கு ஆறுதல் அளித்தல், யாழ்ப்பாணத்தில் ''கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில்'' மக்கள் நலன்புரி சேவைகளை மேற்கொள்ளல் போன்ற திட்டங்கள் எங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக செயலாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஆனால் பத்திரிகைகள் வாயிலாக அறியக் கிடைப்பது என்னவெனில், வடக்கில் நலன்புரிச் சேவைகளை மேற்கொள்ள அரசாங்கம் அதிகாரிகளைத் தேடுகின்றனர். உதாரணமாக அரசின் வைத்தியர்கள் யாழ் வைத்தியசாலைக்கு செல்ல மறுக்கின்றார்கள். இது தொடர்பாக உங்களுக்கு குறிப்பிட எதுவும் உள்ளதா?**

என்னால் அது தொடர்பாக எதுவும் கூற முடியாது. ஏனெனில் வைத்தியர்கள் மறுக்கின்றார்கள் எனில், எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் நாட்டைப்பற்றிச் சிந்தித்து யாழ்ப்பாணத்தில் கைப்பற்றிய பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை செயற்படுத்தவும் நாட்டுப் பிரச்சினையை தீர்க்கவும் உணர்ந்து செயற்படுவதுதான் நல்லது. ஆனால் அவர்கள் பாதுகாப்பு இருந்தால் மட்டுமே செல்வார்கள் என்று கூறியிருப்பதை நானும் பத்திரிகைகளில் கண்டேன். எனவே அரசு பாதுகாப்பை வழங்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

**யாழ் குடாநாட்டின் ஒரு பகுதியை இலங்கை இராணுவம் கைப்பற்றியபின் தமிழ் மக்கள் அப்பிரதேசங்களுக்கு வருவார்கள் என நம்பினர். இன்னும் முறையாக தங்கி வாழ தமிழ் மக்கள் செல்லவில்லை அல்லவா?**

எங்களுக்கு தெரிந்த அளவில் தமிழ் மக்கள் அங்கு தங்கி வாழத் தடையாக இருப்பவர்கள் புலிகள். தமிழர்கள் அங்கிருந்து அரசினால் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை பாவிக்கத் தொடங்குவர். அப்பொழுது இம்மக்களுக்கு அரசின் மேல் ஒருவித விருப்புணர்வு ஏற்படும். இவற்றை நிறுத்தவே புலிகள் முயற்சி செய்கின்றனர்.

அரசின் மேல் விருப்புணர்வு ஏற்படுவது புலிகளுக்கு பாதகமானதாகும். அப்படியில்லாவிட்டால் மக்கள் வராமல் இருக்கமாட்டார்கள். நாங்கள் செல்லத் தயார். ஆனால் புலிகள் தடை விதிக்கின்றனர் என்றே மக்கள் சொல்கின்றனர்.

**தமிழ் மக்கள் கூறுகின்றார்களே பௌதீக ரீதியான சொத்துக்களை விட அரசியல் உரிமைகள் தாம் தமக்கு வேண்டும் என்று?**

இப்பொழுது தெற்கைப் பாருங்கள். அரசியல் பற்றி யார் அக்கறை கொள்கிறார்கள் நாம் மக்களை அக்கறைப்படுத்துகிறோமே தவிர மக்களில் எத்தனைபேர் அரசியல் பற்றி அக்கறை கொள்கிறார்கள்.

**தமிழ் மக்களுக்கு அரசியல் கோரிக்கை தொடர்பான விருப்பு இல்லை என்பது தானே உங்கள் பேச்சின் தொனி...?**

இல்லை, இல்லை நான் அப்படிக் கூறவில்லை. தெற்கில் உள்ள நிலைமையும் வடக்கில் உள்ள நிலைமையும் வேறுபடுகிறது. வடக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குதல் வேண்டும். அதனால்தான் அரசியல் தீர்வு யோசனைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

**யுத்த நிலவரத்தை மேலும் வலுப்படுத்தவென புலிகள் இயக்கம் பொருளாதார கேந்திர நிலையங்களை தாக்குதலுக்கு உள்ளாக்கியது. புலிகளின் இந்த யுத்த தந்திரம், பொருளாதாரக் கொள்கையை தயாரிப்பதில் அரசாங்கத்துக்கு கஷ்டத்தை ஏற்படுத்தவில்லையா?**

இல்லை, இப்பொழுது பாருங்கள்; அனைவரும் நினைத்தார்கள், மத்திய வங்கித் தாக்குதலினால் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து விடும் என்று. ஆனால் அப்படியொன்றுமே நடைபெறவில்லை. அண்மைக்காலத்தில் பங்குச்சந்தையில் விலை அதிகரிப்பை காணக்கூடியதாகவிருந்தது. வியாபாரச் செயற்பாடுகள் நூறுவீதம் இல்லாவிட்டாலும் யதார்த்த நிலைக்குத் திரும்பியுள்ளது.

**அப்படியெனில் புலிகள் இயக்கத்தின் தந்திரோபாயங்கள் தோல்வி அடைந்துள்ளன எனக் கருதலாமா?**

புலிகள் இயக்கம் எப்போதும் நம் நாட்டின் பொருளாதாரத்தை தாக்க தயாராகவே உள்ளது. அவர்கள் பொருளாதாரத்தை தாக்கினாலும் அவற்றைக் கட்டுப்படுத்தி முன்னேறும் சக்தி அரசாங்கத்திற்கு உள்ளது என்பதையே நான் கூறுவேன்.

**ஆனால் பெற்றோலிய கூட்டுத்தாபனம் கொண்டு வந்த வெளிநாட்டு செலவாணியில் பெருமளவினை புலிகள் அழித்தார்கள் என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாரில்லையா?**

தாங்கிகளைத் தாக்கி அழித்தார்கள் ஆனால், முழு பொருளாதாரமும் அழிந்து விட்டது என்று நம்மால் கூறமுடியாதே.

**அண்மையில் தமிழ் கட்சிகள், அரசின் அரசியல் தீர்வு யோசனைகள் புலிகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளன. இதைப்பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

நன்று. யாராவது கொண்டு போய் கொடுக்கத்தானே வேண்டும்! தமிழ் கட்சிகளுக்கு முடியுமென்றால், தீர்வு யோசனைகளை புலிகளின் கைகளில் அல்ல, பிரபாகரனின் கைகளில் கொண்டு போய் கொடுக்கலாமே. அப்படிக் கொடுக்க முடிந்தால் நான் அதிகம் சந்தோஷமடைவேன்.

**அப்படியெனில், நீங்கள் தமிழ் கட்சிகள் தீர்வு யோசனைகள் தொடர்பாக நல்ல நம்பிக்கையுடன் செயற்படுகிறார்கள் என்று கருதுகிறீர்களா?**

ஆம், அப்படித்தான் நான் நம்புகிறேன். ஆனால் அரசாங்கம் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று நான் கூற மாட்டேன். யுத்தத்தை ஆரம்பித்தது புலிகள் இயக்கமாகும். புலிகள் தாக்கும் போது எம்மால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. எங்கள் மக்களைத் தாக்கும் போதும், ஏழைக் கிராமங்களைத் தாக்கும் போதும், அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருக்காது. அரசாங்கம் என்ற ரீதியில் தாங்கிக் கொண்டும் இருக்க முடியாது. யுத்தத்தில் நம்மை இறக்கியது அவர்கள்தாம்.

**அப்படியெனில், ஐ.தே.க. அரசாங்கம் நடாத்திய யுத்தம் சரியானது எனக் குறிப்பிடுகின்றீர்களா?**

இருங்கள் சொல்கின்றேன். அடிக்கும் போது திருப்பி அடிக்கவும் வேண்டும். அத்தோடு பேச்சுவார்த்தைகள் சமாதானம் போன்றன தொடர்பாகவும் நாம் கரங்களை நீட்டியுள்ளோம். நான் நினைக்கின்றேன். யுத்தம் செய்து கொண்டே சமாதானத்துக்காக கரங்களை நீட்டும் ஒரு அரசாங்கம் முழு உலகத்திலும் நாமாகத்தான் இருப்போம். பிறர் கூறுவார்கள், யுத்தம் முடிவடையாமல் சமாதானத்துக்கு நாம் வரமாட்டோம் என்று.

கடந்த ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் போது, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அப்பொழுது வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரும்படி அவ் அரசாங்கத்தின் அமைச்சர்கள் கூறினார்கள். நாம் அப்படிக் கூற மாட்டோம். நாம் கூறவில்லை யுத்தத்தை முடித்து விட்டு, பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று. யுத்தம் புரிந்துகொண்டே பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நாம் தயார்.

**புலிகள் இதனை வேறு கோணத்தில் பார்க்கிறார்கள். அவர்கள் கூறுகின்றார்கள். அரசாங்கம் துப்பாக்கியை நீட்டிக்கொண்டு பலாத்காரமாக சமாதானப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது என்று?**

முதலில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிராக துப்பாக்கியை நீட்டியது யார்? புலிகள் இயக்கம் தான் முதலில் துப்பாக்கியை நீட்டியது. மக்களுக்கு எதிராகவே தவிர அரசாங்கத்துக்கு எதிராக அல்ல. அரசாங்கம் முடியாதபட்சத்தில்தான், துப்பாக்கியை நீட்டியது புலிகளின் மேற்கூறிய கருத்து பிழையான கருத்தாகும். அவர்கள் தான் மிலேச்ச காரியங்களை செய்கின்றனர்.

**புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களை கையில் எடுப்பதற்கு வழியமைத்துக் கொடுத்தது இந்த நாட்டை ஆட்சிபுரிந்த கட்சிகள் தான் என இடதுசாரிகள் கூட சொல்கின்றனர். இது தொடர்பான உங்கள் கருத்து முரண்படுகின்றது அல்லவா?**

இடதுசாரிக் கட்சிகளில் இன்று எத்தனை பேர் இருக்கின்றார்கள். அவர்கள் கூறுவதை இன்று கவனத்தில் எடுக்கக் கூடாது.

**பொ.ஐ.மு. அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபோது சமாதானத்துக்கான வழிமுறைகள் இருந்தது. ஆனால் குறுகிய காலத்தில் இவ் வழிமுறைகள் ஆட்டம் கண்டுள்ளதே?**

ஆட்டம் கண்டது யாரால்? ஆட்டம் காட்டியது யார்? நாமில்லை. புலிகள்தான் ஏப்ரல் 19ம் திகதி படகுகளைத் தாக்கி யுத்தத்தை தொடங்கினர். ஆனால் அரசாங்கம் சமாதானத்துக்கான முயற்சியை விட்டுக்கொடுக்கவில்லை. இப்பொழுது நாம், பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் யோசனைகளை முன் வைத்திருக்கிறோம். பேச்சுவார்த்தை நடாத்த கால அவகாசம் பெற்றுக்கொடுத்துள்ளோம். எனவே அரசாங்கம் தடைவிதிக்கவில்லை.

**மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் மலையகம் தொடர்பான மாவட்ட சபை அவசியம் என்ற யோசனையை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைத்திருப்பதாக பத்திரிகைகள் எழுதியுள்ளனவே?**

அது பொய். சந்திரசேகரன் இவ்வாறான கீழ்த்தர எண்ணங்கள் கொண்டவர் என நான் நினைக்கவில்லை.

**அவ் யோசனைகளின் ஒரு பிரதி எம்மிடம் உண்டு. அதில் மேற்கூறிய கருத்து இருக்கிறதே?**

இருக்கின்றதா? சிலவேளைகளில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மாவட்ட சபைகள் வழங்கினால் மத்திய பிரதேசங்களில் மக்களுக்கு அநீதி ஏற்படும் என அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால் இது சந்திரசேகரன் மட்டுமல்ல அனைவரும் ஆலோசிக்க வேண்டிய விடயம். ஆனால் மலையகத்துக்கு பிரதேச சபைகள் கிடைக்கும்.

**கிடைக்கும் தான். கிடைக்கும் பிரதேச சபைகளுக்கு நிர்வாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என அறிக்கை விடப்பட்டுள்ளது. குறிப்பாக மலையக தமிழ் மக்களுக்கிடையே.....**

அப்படியெனில், மலையக தமிழர்களுக்கு அநீதி ஏற்படும். வடக்கில் உள்ள தமிழ் மக்களையும், மலையகத்தின் தமிழ் மக்களையும் ஒப்பிடமுடியாது ஒப்பிடின் அது வானுக்கும், நிலவுக்கும் இடையான ஒப்பீடாக அமையும். அங்குள்ள தமிழர்களை சிங்களவர்களிடமிருந்து பிரித்து வேறு பிரதேச செயலகம் வழங்கினால் மிகவும் வறுமை நிலைக்கு மலையகத் தமிழர் உள்ளாகுவார்கள். அவர்கள் எழுச்சிபெற அரசின் உதவியும் அது போலவே பொருளாதார ரீதியான உதவிகளும் அவசியம்.

**கொழும்பில் உள்ள தமிழ் மக்களை கைது செய்வதன் மூலம் அவர்களின் உளவியல் பாதிப்புக்குள்ளாகின்றது. இந் நிலைமை இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்துகின்றது அல்லவா?**

புலிகள் உறுப்பினன் ஒருவன் கொழும்பில் உள்ள வீடொன்றுக்கு வந்துள்ளான் என்று நாம் வைத்துக் கொள்வோம். பத்து வருடங்களுக்கு முன்னரே அவன் அறிமுகமானவராக இருக்கலாம். இப்பொழுது அவன் புலிகள் உறுப்பினன் என்று பழைய நண்பர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். நண்பன் இவனுக்கு இருப்பிட வசதி செய்துக் கொடுக்கிறான். இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது, பொலிஸ் வந்து கைது செய்து விசாரிப்பது தவறாகுமா?

எமக்கு எப்படித் தெரியும். வரும் நபர் நல்லவரா? கெட்டவரா? என்று. நாட்டு நிலைமையை கருத்திற்கொண்டு வேற்று நபர் குறித்து அறிந்து கொள்வது அரசின் கடமையாகும். சிற்சில துரதிர்ஷ்ட நிலைகள் ஏற்படும் அது இனவாத அடிப்படையில் புரியப்படுவதில்லை.

**எமக்குத் தெரிந்த சந்தேகநபரை நீதிமன்றத்தில் குற்றவாளி என நிரூபிக்கும் வரை அவன் குற்றமற்றவன் ஆவான். ஆனால் தொடர்பூடகங்கள் மூலம் சந்தேக நபர் குற்றவாளியாக்கப்படுகிறான். இதன் மூலம் அவளை அல்லது அவனை சித்திரவதைக்கு உள்ளாக்குகின்றனர். இந்த நிலைமையையே நான் குறிப்பிட்டேன்.**

பத்திரிகைக்காரர்கள் என்ற அடிப்படையில் இதனைச் செய்யக்கூடாது. நான் உதாரணம் ஒன்று கூறுகின்றேன். வவுனியாவில் பிடித்த கத்தோலிக்க குருமார் பற்றிய சம்பவம் ஞாபகம் உள்ளது தானே. அவர்கள் கைது செய்யப்பட்டதன் பின் மிகப் பெரிய செய்திகள் பத்திரிகைகள் வாயிலாக வெளியாகின. புலிகள் என்றே இவர்கள் கருதப்பட்டனர். இவ்வாறான ஒழுங்கற்ற தொடர்பூடகவியலே இங்குள்ளது. பத்திரிகைகள் இவ்வாறு செயற்பட்டால் இனபேதம், மதபேதம் என்பன ஏற்படும். தொடர்பூடகவியலாளர்கள் இலாபம், சம்பாதிக்கவே இதனைச் செய்கின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் நிகழ்கின்றன என நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

**இவ்வாறான நிகழ்வுகளை கட்டுப்படுத்த அரசு என்ற முறையில் தலையிட முடியாதா?**

இவ்வாறு தலையிட்டதும் அவர்கள் தமது சுதந்திரத்துக்கு பாதகம் என்கின்றனர். தொடர்பூடகங்களுக்கென ஒழுக்கநெறி ஒன்று இருக்க வேண்டும்.

**நீங்கள் பத்திரிகைகளை நேரடியாக குற்றம் சாட்டுகின்றீர்கள்; நல்லது. பெந்தோட்டையில் நடைபெறவிருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தை ரத்துச் செய்ய உதவியது அரசாங்க தொடர்பூடகங்கள் தானே?**

எனக்குத் தெரியாது. அரசாங்கம் தான் பத்திரிகைகளை வழிநடத்தியது என்று. அக்கூட்டத்தை மக்கள் நடத்தவிடவில்லை என்று தான் பத்திரிகைகள் குறிப்பிட்டன.

**மக்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைளுக்கு பின்புலமாக இருந்தது அரசாங்கத்தின் மக்கள் தொடர்பு சாதனங்களின் செயற்பாடுகள்...**

அரசாங்கத்தின் மக்கள் தொடர்பு சாதனங்கள் என்றால் என்ன?

**தினமின பத்திரிகைகள் மற்றும் லேக்ஹவுஸ் பத்திரிகைகள்...**

எனக்கு அவை பற்றி ஒன்றும் தெரியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அச்சந்தர்ப்பத்தில் குறைந்தது அரசாங்கம் பொறுப்புடன் பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட முன்வராதது ஏன்?**

எனக்கு அந்நிலைமை பற்றி சரியாகத் தெரியாது. உண்மை நிலவரம் தெரியாமல் அவ்வாறான அறிக்கைகளை என்னால் வழங்க முடியாது.

**யுத்தத்தை மீண்டும் முடிவுக்குக்கொண்டு வர மூன்றாவது மத்தியஸ்தம் தொடர்பான உரையாடல்கள் பற்றி கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

நான் கூறுவது என்னவெனில் வெளிநாட்டைச் சேர்ந்த மூன்றாவது தரப்பினர் இதற்குள் தலையிடத் தேவையில்லை. சிங்கள தலைவர்களுக்கும், வடக்கு தமிழ்த்தலைவர்களுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைக்கான வழிமுறைகளை ஏற்படுத்தல் வேண்டும். இதற்குள் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை நான் விரும்பவில்லை. பிற தலைவர்கள் போன்றவர் அல்ல சந்திரிகா அவர்கள். இனரீதியான சமாதானத்துக்கு வாய்ப்பைப் பெற்றுத் தந்துள்ளார். சந்திரிகா அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது இலகுவானது; மற்றவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் பார்க்க.



“வெளிநாட்டைச் சேர்ந்த மூன்றாவது தரப்பினர் இதற்குள் தலையிடத் தேவையில்லை. சிங்கள தலைவர்களுக்கும் வடக்கு தமிழ்த் தலைவர்களுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைக்கான வழிமுறைகளை ஏற்படுத்தல் வேண்டும். இதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை நான் விரும்பவில்லை”

**அப்படியாயின் மூன்றாவது மத்தியஸ்தம் ஒன்று தேவையில்லை என்றா குறிப்பிடுகின்றீர்கள்?**

மூன்றாவது மத்தியஸ்தம் என்பது வெளிநாடு தானே. வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையில்லை.

**நீங்கள் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை விரும்பா விட்டாலும் தீர்வு யோசனைகளின் பின்புலத்தில் இந்தியாவின் கரம் உள்ளதாக கூறப்படுகின்றதே?**

இல்லை! நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

**அதைப்போலவே புலிகள் இயக்கத்தினரும் குற்றம் சாட்டுகின்றனர், அவர்களின் ஆயுதக் கப்பலைத் தாக்குவதற்கு உளவறிந்து கூறியது இந்திய புலனாய்வுத்துறை தான் என்று?**

அது பற்றி எனக்குத் தெரியாது.

**எதிர்க்கட்சி இதுவரை, பொ.ஐ.மு. அரசாங்கம் மூலம் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக அபிப்பிராயங்கள் தெரிவிப்பதை தவிர்ப்பதை நீங்கள் எவ்வாறு இனம் காண்கிறீர்கள்?**

அவர்கள் பார்த்தது இலாபம் பெறவே ஆகும். மக்கள் வீதிக்கு வருவார்கள் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். உதாரணத்துக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம். அக்காலத்தில் எதிர்க்கட்சி வீதிக்கு வரும் போது மக்களும் அவர்கள் பின்னால் வந்தனர். இப்போது எதிர்க்கட்சி வீதிக்கு வரவில்லை. மக்கள் வீதிக்கு வரும்வரை பார்த்துக் கொண்டிருந்தனர். இவ் யுத்தத்தினால் மக்கள் துன்பமடைந்துள்ளனர். அவர்கள் நம்பியது மக்கள் இறங்கினால் நாமும் இறங்குவோம் என்று. பிரதான செயற்பாடாக ஐ.தே.க இப்பொழுது பிக்குகளை அணி திரட்டுகின்றது. அவர்களுக்கு ஐ.தே.க. கூறுகின்றார்கள்; பொ.ஐ.ஐ.முன்னணியினர் இந்நாட்டைப் பிரிக்கப் போகின்றார்கள், இதனால் பாரிய அழிவுகள் ஏற்படும், என்று தினேஷ் குணவர்த்தனா போன்றவர்கள் மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து ஐ.தே.க. பிக்குகள் மூலம் இத்தீர்வு யோசனைகளை எதிர்க்கின்றனர்.

மக்களுக்கு தேவை தெளிவான தீர்வு. ஆனால் ஐ.தே.கவுக்கு தீர்வு தேவையில்லை போலும், அவர்களுக்கு தேவை அரசியல் இலாபம். இதன் மூலம் அதிகாரத்தைப் பெறவே ஐ.தே.க. முயற்சிக்கின்றது.

**ஆனால் நடுநிலையான விமர்சகர்கள் இதற்கு எதிரான கருத்தை முன்வைக்கின்றனர். 1987ல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக ஸ்ரீ.ல.சு.க. மற்றும் ம.வி.மு. மக்களை அணி திரட்டியது. ஆனால் ஐ.தே.க. இப்பொழுது சூட்சுமமான முறையில் வேறு அமைப்புக்களூடாக எதிர்க்கின்றதே?**

ஐ.தே.க. என்ன செய்தாலும் மக்கள் ஆதரவு அரசியல் தீர்வுத்திட்டத்துக்கு கிடைக்கும் என்பது உறுதி.

**பழைய ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக செயற்பட்டார்கள். அதே போலவே இப்போதும் எதிர்ப்பின் மத்தியில் இவ் யோசனைகளை வெற்றி கொள்ளச் செய்வது ஜனாதிபதிக்கு சவாலாக அமையாதா? இதன் மூலம் அவர் கட்சிக்குள்ளேயே பொறிக்குள் மாட்டப்பட்டுள்ள நிலை ஏற்பட்டுள்ளதா?**

ஏன் அவ்வாறு?

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ள எதிராக இருந்தவர்களில் ஒரு பகுதியினர் இச்சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பார்களா?**

இல்லை, இனி அப்படித்தான். முன்பு யார் தான் திறந்த பொருளாதாரத்தை விரும்பினார்கள். 56ல் இருந்து ஸ்ரீ.ல.சு.கட்சியில் இருக்கும் ஒருவரைப் பார்த்தால் அந்நபரின் தலையில் ''தேசிய மயமாக்கம்'' பற்றிய கருத்தே உள்ளது. இப்பொழுது அவ்வாறானதொரு கருத்தை ஏற்படுத்த முடியுமா? இல்லையே?

காலத்துடன் நாமும் மாற்றமுற வேண்டும். அன்று பலர் பல கருத்துக்களைக் கொண்டிருந்தனர். நாமும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அன்று எதிர்த்தோம். இப்பொழுது எமக்கு புரிகின்றது. தீர்வு இல்லாவிடின் இப்பொழுது நடைபெறும் யுத்தம் நிரந்தரமாகி விடும் என்று.

**அதாவது உங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கான அத்தியாவசியம் அதிகாரத்திறகு வந்தபின்னரா விளங்கியது.**

அதிகாரத்திற்கு வந்தபின்னர் விளங்கியது என்றுகூறுவது தவறு. சிற்சில நிகழ்வுகளை கண்டவுடன் தான்; 83 நிகழ்வுகளை நாம் கண்டோம். நாம் அவ்வாறான நிகழ்வுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கமாட்டோம். 83 நிகழ்வு நடைபெற்றிருக்காவிடின் அவ்வாறான நிகழ்வின் பாரதூரத்தன்மை விளங்கியிருக்காது. இதன் மூலம் தான் நாம் பாடம் படித்தோம். அதிகாரத்துக்கு வந்ததன் பின் தான் தீர்க்க முயற்சிக்கின்றோம் என்று இல்லை.

## மலையகத்தில் நவீன விவசாயக்கூலிகளும் பண்ணையடிமைகளும் — 2

# வேலை வாங்கிவிட்டு கூலி தராத நாட்களும் இருந்தன!

**— பீனிக்ஸ்**

நுவரெலியாவின் ஹவாஎலிய, சீத்தா எலிய, பிப்பிலாமான, கந்தப்பளை, மாகஸ் தோட்ட பகுதிகளில் மட்டும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் முழுநிலையில் பண்ணையடிமைகளாக்கப்பட்டுள்ளார்கள். விவசாய பண்ணைகளின் உடமையாளர்களின் கொடிய ஒடுக்குமுறைகளுக்கு கீழ் சிறைக்கைதிகளை விட மோசமாக நடாத்தப்பட்டு வருகிறார்கள். நீண்டுயர்ந்த மதிற்சுவர்கள், முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் நிலவுடமையாளர்களின் மண் கொட்டில்களில் குடும்பம், குடும்பமாக அடிமைப்பட்டுள்ள இத்தொழிலாளர் குடும்பங்களுக்கு, கூலிபற்றியோ, ஓய்வுபற்றியோ வாழ்க்கை வசதிபற்றியோ, உரிமைபற்றியோ பேசுகின்ற எவ்விதமான உரிமையும் இல்லை. இவர்கள் தம் பண்ணையுடமையாளர் விரும்பும் வரை, அல்லது திருப்திப்படும் வரை அவரது பண்ணையில் அடிமையாக இருக்கலாம். உணவு, தங்குமிடம் என்பன அவரால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. இவர்கள் 24 மணி நேரமும் வேலை செய்ய தயாராக இருத்தல் வேண்டும்.

இக்குடும்பங்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர் அனைவரும் அதிகாலையிலேயே நித்திரை விட்டு எழுகின்றனர். கடும் குளிர் களைப்பு என்பவற்றுக்கு மத்தியிலும் காலை ஐந்து மணிக்கெல்லாம் எழும்பும் இவர்கள் பண்ணையின் பயிர்களுக்கு தண்ணீர் உற்றுவது களை பிடுங்குவது, பசளையிடுவது, நாற்று நடுவது, வடிகால் செப்பனிடுவது, கால்நடைகளை பராமரிப்பது போன்ற வேலைகளில் பொழுது சாய்ந்து நிலவு மங்கும் வரை வேலைசெய்கின்றார்கள்.

ஆண், தொழிலாளர்கள் இரவு நேரக் காவல் கடமையையும் மேற்கொள்ளவேண்டும். பெண்கள் அவர்களுக்கு உணவு சமைத்தல், ஆடைகளை கழுவுதல், பிள்ளைகளைப் பராமரித்தல் என்பவற்றோடு, கணவன், அயலவன், எஜமானின் பாலியல் தேவையையும் கவனிக்க வேண்டிய துர்பாக்கியம் நிலவுகின்றது.

சிறுவர்கள் கிழங்கு பறித்தல் களைபிடுங்குதல், புல் அள்ளுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இவர்கள் பெற்றோருடன் அல்லது உறவினருடன் வேலை செய்தாலும் கூட கூலி மிக மிகக் குறைந்ததாகவே வழங்கப்படுகின்றது.

இப்பண்ணையடிமைகளின் கூலி நாளொன்றுக்கு ஆண்களுக்கு 75-100ரூபாவையும் பெண்களுக்கு 40-60ரூபாவையும் சிறுவர்களாயின் 25-40ரூபாவையும் தாண்டுவதில்லை. இக்கூலியில் பெண்களதும், சிறுவரதும் கூலியும் ஆண்களின் கைககளில் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் தமது செலவு போக மிகுதியில் நினைத்தால் உணவுக்கு ஏதாவது கொண்டு வருகின்றார்கள் அல்லது வயிறுமுட்ட குடித்துவிட்டு கடையில் சாப்பிட்டுவிட்டு தூங்குகிறார்கள். மனைவியும் பிள்ளைகளையும் திட்டியும், அடித்தும் வதைக்கின்றார்கள். இதனால் பெண்களும் சிறுவர்களும் பெரும்பாலும் பட்டினி கிடப்பதோடு மிகவும் சீரழிவுக்குள்ளாக வேண்டிய சூழ்நிலையும் காணப்படுகின்றது.

இப்பண்ணையடிமைகள் பண்ணையை விட்டு வெளியே உறவினர், நண்பர், வீடுகளுக்கு போகவும் பண்ணையுடமையாளர் அனுமதித்து பணம் கொடுத்தால் தான் சாத்தியமாகும். இது பெரும்பாலும் சாத்தியமானதேயில்லை. ஒரு பண்ணையில் இருந்து இன்னொரு பண்ணைக்கு மாற வேண்டுமானால் பண்ணையார் காட்டும் கடன் கணக்குகளை தீர்க்கவும், அடிஉதைகளை வாங்கவும், மனைவியையோ, பிள்ளைகளையோ விட்டு விட்டுப் போகவும் கூடத் தயாரச இருத்தல் வேண்டும்.

குடியிருப்புகள் கரடும் முரடுமாக மண்ணையும், கற்களையும், காட்டுத் தடிகளையும், கோரைப்புற்களையும், பொலிதின்களையும், சிலவேளை பலகையையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பசளைகள், பூச்சி, மற்றும் களை கொல்லிகள், விவசாய உபகரணங்கள் என்பனவும் வைக்கப்படுகின்றன. இதன் பாதுகாப்பும், பராமரிப்பும் பண்ணையடிமைக் குடும்பங்களின் பணி தான்.

இதற்கான எவ்வித கூலியும் வழங்கப்படுவதில்லை. பண்ணையடிமையொருவன் எவ்வளவுக்கு எவ்வளவு பணிந்து போகின்றானோ அவ்வளவு தூரம் அவன் சலுகைகளையும் நற்பெயரையும் பண்ணை உடமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

பண்ணையடிமைகளாகிப் போனவர்கள் அதில் இருந்து மீள முயன்றால் நிலவுடமையாளர்கள் அவர்களை தாக்கவும், வதைக்கவும் திருட்டு குற்றம் சுமத்தவும் கூட தயாராக இருக்கின்றார்கள். இச்சந்தர்ப்பங்களில் எல்



லாம் முழு அரச இயந்திரமும் பண்ணையுடமையாளர்களுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றது.

சில பண்ணையுடமையாளர்கள் ஒன்று முதல் பத்து பதினைந்து வரையான குடும்பங்களை வைத்திருக்கின்றார்கள். இவ்வாறான பண்ணையடிமைகளாக குடும்பங்களை வைத்துக் கொள்வதன் மூலம் விவசாய கூலிகளுக்கு கொடுப்பதை விட குறைவான கூலி வழங்கவும், அல்லது கூலியே வழங்காமல் இருக்கவும் உச்ச அளவில் உழைப்பை சுரண்டவும் முடிகின்றது. மேலும் விவசாயப் பண்ணைக்கு நிரந்தரமான கண்காணிப்பும் காவலும் செய்பவர்களாக பண்ணையடிமைகள் இருக்கின்றார்கள்.

பண்ணையுடமையாளர்கள் அடிமைகளைப் பயன்படுத்தி காட்டு மரங்களை தறிக்க முயலும் போது காட்டிலாக்கா அதிகாரிகளிடமோ, பொலிசாரிடமோ, அகப்பட்டுக் கொள்ளும் போது அவர்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அவர்களது குடும்பங்களோ, சீரழிந்து விடுகிறது. இவ்விக்கட்டான சூழலில் அப்பெண்களை தங்கள் தேவைக்கு இலகுவாகப் பயன்படுத்தி விடுகிறார்கள் இந்தப் பண்ணையாளர்கள்.

நுவரெலியாவில் சீத்தா எலியா என்னுமிடத்திலும் பசுமலையிலும் ஹவாஎலியவிலும், ஒருவருட காலம் பல்வேறு விவசாயப் பண்ணைகளில் பல்வேறுபட்ட பண்ணையுடமையாளர்களிடம் பல கூலி திட்டங்களில் வேலைசெய்த எனது அனுபவங்களோடு பத்து வருடங்களுக்கும் மேலாக பண்ணையடிமைகளாக விருந்த என் தந்தை எனது தம்பி ஆகியோரின் அனுபவங்களும் நாங்கள் நேரடியாக அனுபவித்த அந்த விவசாயக் கூலிகளின் வாழ்க்கையும் பண்ணையடிமைகளின் வாழ்க்கை பற்றி எழுதுவதற்கான கருவூலமாக அமைந்தன.

1985ம் ஆண்டின் இறுதியில் நுவரேலியா மாவட்டத்தின் அக்கரப்பத்தனை, பசுமலை பகுதியில் இருக்கின்ற விவசாய நிலவுடமையாளர்களிடம் நானும் என் தந்தையும் வேலைக்கு சேர்ந்தோம். நாள் ஒன்றுக்கு 25/= கூலி வழங்கப்பட்டது. அக்காலத்தில் வேலைக்கோ கடுமையான கிராக்கி நிலவியதோடு, சிபாரிசுகளும் தேவைப்பட்டது. எங்களை சிபாரிசு செய்ய யாருமே இல்லாத நிலையில் பலநாட்கள் விவசாயப் பண்ணைகளை சுற்றிவிட்டு வெறுமனே எங்களது கொட்டிலுக்குத் திரும்புவோம். பலகையிலான அக்கொட்டில்கள் ஒரு தையற்காரருக்கு சொந்தமானது. அவரது மூன்று பிள்ளைகளுடன் நாங்களும் தங்கினோம். கடும் குளிர். அப்பாவின் கைகால்கள் விறைத்து விடும். காலை ஏழு மணிக்கு கிளம்பினால் தான் வேலை தேடலாம். எனவேதான் 6 மணிக்கு நித்திரை விட்டு மிகவும் சிரமப்பட்டு எழும்புவேன். அப்பாவிற்கு நெருப்பு மூட்டப்பட்ட தகரத்தை காட்டி சூடேற்றி கைகால்களை நிமிர்த்த வேண்டும். அதற்கு ஒரு மணிநேரம் போய்விடும். பிறகு 50 சதத்திற்கு தேயிலை சாயம், அரை இறாத்தல் பாணும் வாங்கி அப்பாவும் நானும் உண்போம்.

அந்த உணவோடு வேலைத் தேடி செல்வோம். எங்காவது வேலைக் கிடைத்தால் தான் எங்களது நாளைய பொழுதுக்கு உணவு தேட முடியும். கடும் வறுமைப்பட்ட எங்களது அம்மாவையும் தங்கைகளையும் பார்க்க வேண்டுமானால் 30 கி.மீ தூரம் கால் நடையாக செல்வோம். நடக்கவும் வேலை செய்யவும் சாப்பிட வேண்டும். வேலை செய்யுமிடத்தில் பாணும் பருப்பும் கிடைப்பதே அரிது. சோறு கிடைக்குமானால் குதூகலம்தான். கிடைப்பதற்கு உத்தரவாதமேயில்லை. அங்கும் மனிதர்கள் இருந்தார்கள். களைப்பால் விழும் நிலையிலும் தம் துயரங்களைப் பகிர்ந்துகொள்ளும் மனிதர்கள், எனக்கு முன்மாதிரியாகப்பட்டார்கள். பல நாட்கள் எங்களுக்கு வேலை கிடைப்பதேயில்லை. ஒரு முறை உருளவள்ளித் தோட்டத்தில் வெட்டி வேர் செடிகளைப் பறித்து ஒரு கிலோ வேர் கொண்டு வந்தால் ரூ3/= தருவதாக கூறப்பட்டது. நானும் அப்பாவும் நாங்கள் தங்கியிருந்த தையல்காரரிடம் ஒரு பறிமுள் இரவல் வாங்கிக் கொண்டு வெட்டி வேர் தோண்டப் போனால் ஒரு செடியை தோண்டினால் 100 கிராம் வேர் கூட சேரவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு 11 கிலோ தோண்டினோம். ஆனால் அதை வாங்க மறுத்துவிட்டார்கள். அதனால் பலநாள் பட்டினி கிடக்க நேர்ந்தது. ஒரு முறை சதுப்பு நிலம் ஒன்றை விவசாயத்திற்காக வாங்கியிருந்தவர்களிடம் வேலைக்குப் போனோம். எங்களோடு வந்த 10 அல்லது 15 பேர் மறுநாள் வரவில்லை. ஆனால் தினசரி வேலை என்பதால் நானும் அப்பாவும் பற்றிப்படாந்த கோரைப்புற்களையும் சதுப்பு நிலத்தையும் பண்படுத்தினோம். எங்களுக்கு 30/= தான் கூலியாக தந்தார்கள். ஒரு முறை வீட்டில் அம்மாவையும், தங்கையையும் பார்க்கப் போவதற்காக எப்படியோ 40/= மீதப்படுத்திவிட்டோம். மாலை 6மணிக்கு பசுமலையில் இருந்து எல்பியன் வழியாக வீட்டுக்கு தன்னம் தனியாக 30 கி.மீ. நடந்து வந்தேன். வீட்டில் நான் வந்தபின்புதான் மாவு வாங்கி இரவு 12 மணிக்கு ரொட்டி சுட்டோம். அன்று நான்வராவிட்டால் எனது தந்தையினதோ தாயினது நிலை என்ன மாதிரியாக இருந்திருக்கும்?

அங்கு எங்களை வீரையா என்ற பெயர் கொண்ட டொறிங்டன் தோட்ட கணக்குப் பிள்ளை 3 மாதம் தனது வீட்டில் த்ங்க இடம் கொடுத்து நல்ல உணவளித்தார். இதற்காக நாங்கள் எதையுமே இன்றுவரை அவருக்கு கொடுக்கவும் இல்லை. வளரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசு_புலிகள்_தமிழ்க்கட்சிகள்

# இனப்பிரச்சினைத்தீர்வும் அரசியல் வங்குரோத்தும்

ராம்பிரகாசு

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள்ளத் தொடங்கியதும், யுத்தநிறுத்தம் அல்லது தாக்குதல் நிறுத்தப்பட்டதும் தெரிந்ததே. அவை விரைவாக முறிவடைந்தன. தாக்குதல் நிறுத்தத்தினை மீறுவதற்கான நடவடிக்கையை விடுதலைப்புலிகளே ஆரம்பித்தனர். ஆனால் பேச்சுவார்த்தை தரப்புக்களாக இருந்த அரசாங்கமும் சரி, விடுதலைப் புலிகளும் சரி தத்தமது சொந்த அக்கறைகளிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். ஒருவரையொருவர் எவ்வாறு ஏமாற்றுவது யார் வெற்றியடைவது என்ற எண்ணங்களே அவர்களிடையே நிலவின. இதற்கு ஆதாரங்களை நுண்ணியதாக தேடிப்பார்க்க வேண்டிய அவசியமில்லை. இரு தரப்பும் அரசியல் தீர்வுக்காண்பதனை விட இராணுவத் தயாரிபுக்களைச் செய்வதிலேயே முழுமூச்சாய் இருந்தன. யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் முறிவடைந்தவுடன் புலிகள் தொடர்ச்சியாக பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

அரசாங்கமோ ரிவிரச என்ற இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. அதற்குப் பிறகு அரசியல் தீர்விற்கான ஆலோசனைகளை முன்வைத்து விட்டு தொடர்ச்சியாக யுத்தத்தை முன்னெடுத்தது.

இந்த இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிர் உடைமை இழப்புகளுடன் வரலாற்றில் என்றுமில்லாதவாறு 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழிடத்தை விட்டு, வெளியேறியுள்ளனர். இடம் பெயர்ந்தவர்கள் சகல விதமான பாதிப்புகளுக்கும் உள்ளாகியுள்ளனர். அரசாங்கமும் வேண்டுகோள் விடுத்தபோதும், தூண்டுதல் செய்தபோதும், அகதிகளாக இடம் பெயர்ந்தவர்கள் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்கு செல்வதாக இல்லை.

இது இவ்வாறிருக்க அடுத்து ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் வடக்கில் மேற்கொள்ளவிருக்கின்றது. கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

கொழும்பில் கொலன்னாவை, ஒறுகொடவத்தை எண்ணெய்க் குதங்கள் மீதான குண்டு வெடிப்பு, மத்திய வங்கி குண்டு வெடிப்பு போன்றன எதிர்காலத்தில் இடம் பெறாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. கொழும்பில் மறைவிடங்களிலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக அரசாங்கமும் அறிக்கை செய்து வருகிறது.

இந்நிலைமையில் மக்கள் தரப்பில் யுத்தம் நிறுத்தம் வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன; அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றினால் எந்தப் பயனும் இல்லை. மாறாக யுத்தநிறுத்தத்தை கோருபவர்களை புலிகளாகவோ அவர்களின் ஆதரவாளர்களாகவோ அரசாங்கம் அடையாளம் காட்டுகிறது.

எனவே யுத்தநிறுத்தத்தை ஏற்ப்டுத்த இரு தரப்பும் மனதார விரும்புவதாகத் தெரியவில்லை. அவ்வாறு யுத்தநிறுத்தம் ஏற்பட்டால் அரசியல் தீர்வை காணும் நோக்குடன் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படுமா என்பது கேள்விக்குரியாகவே இருக்கும்.

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தைகள் குழம்பிய பிறகு அப்பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டிருந்தவர்களுக்கிடையே நம்பிக்கையீனமும், சந்தேகமும் மேலோங்கியுள்ளது. இன்று இந்த நம்பிக்கையீனமும் சந்தேகமும் அந்த இரண்டு தரப்புகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாகவின்றி சிங்கள, தமிழ் மக்களுக்கிடையேயும் இவை வேம்பாக வளர்கின்றன. வளர்க்கப்படுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அண்மையில் பொதுசன தொடர்பு சாதனங்களுக்கு கொடுத்த செவ்விகள் மிகவும் பாரதூரமாகவே அமைந்து வருகின்றன. தொடர்ந்து குண்டுகள் வெடிக்குமானால் சிங்கள மக்களை தன்னால் கட்டுப்படுத்த முடியாமல் போகும் என்றும் புலிகளுக்கு எதிராக குரலெழுப்பாதபடியால் தெற்கில் வாழ்கின்ற தமிழர்கள் புலிகளின் ஆதரவாளர்களாவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளமையை ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அன்றைய நிலைப்பாட்டிற்கு குறைந்ததாகக் கொள்ளமுடியவில்லை.

ரிவிரச இராணுவ நடவடிக்கைக்கு பிறகு அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களுக்கும் நம்பிக்கை தளரத் தொடங்கியது.. கொழும்பு போன்ற இடங்களில் நடைபெறும் கைதுகள் தேடுதல்கள் பாதுகாப்பு படையினரினதும் கண்காணிப்புக் குழுவினரதும் கெடுபிடிகள் போன்றவற்றால் மேலும் மேலும் தமிழ் மக்கள் விரக்திக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இன்று முன் மொழியப்பட்ட அரசியல் தீர்வு யோசனைகள் சட்டவரைவாக வெளிவந்த போது அவை எவ்வாறு வெட்டிக் குறைக்கப்பட்டன என்பதை நாம் அறிவோம். பெரும்பான்மையின் வெறியாக கொள்ளப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன. அந்தளவுக்கே மட்டுமே இந்த அரசிடம் தமிழ் மக்கள் எதிர்பார்ப்புகளை கொண்டிருக்க முடியும் என்பதும் தெளிவாகின்றது.

மேலும் ஜனாதிபதியின் பேட்டியில் தமிழ் மக்களுக்கு எதிராக சொல்லப்பட்ட கருத்துக்களுடன் தமிழ் மக்களின் மிச்சசொச்ச எதிர்பார்ப்புகளும் சிதைந்து விட்டன.

அரசாங்கம் இலங்கையை ஒரு மத சார்பற்ற, மொழி சார்பற்ற, பல்லினப்பாங்கான நாடாக காண்பதற்கு தடையாக அதனுடைய அரசியல் வங்குரோத்து தனமே காரணமாக இருக்கின்றது. அரசாங்கம் அதனது சட்ட வரைவிலேயே மேற்படி விடயங்களை ஏற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது கூட அரசாங்கம் தமிழ் மக்களுக்கு 'எதையாவது வழங்கும்' ஒரு நிறுவனமாகவே நினைத்து செயற்பட்டது. அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதனை விட யுத்தத்தை நிறுத்துவதில் அக்கறை கொள்வதாக காட்டிக் கொண்டுள்ளது. இறுதியில் யுத்தத்தை தானே மனமார தழுவிக் கொண்டது.

அரசியல் தீர்வு ஆலோசனைகள் விட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு யோசனைகளாக அன்றி வெறும் அதிகாரப் பரவலாக்கமாகவே வெளியிட்டது. சட்டவரைவை வெளியிட்ட போது தமிழ் மக்கள் அது தமக்கு போதுமானதாக இல்லையென்று அரசாங்கத்தைக் குறை கூறத்தொடங்கினர். தமிழ் மக்களுக்கு கூடுதலான சலுகைகளை அத்திட்டம் கொடுப்பதாக சிங்கள மக்களிடம் பேரினவாதிகள் பிரசாரம் செய்ததால் கணிசமான சிங்கள மக்கள் அரசிற்கு எதிரான போக்கை எடுத்துள்ளனர். இது அரசாங்கத்தின் ஒளிவுமறைவு நடவடிக்கையினால் ஏற்பட்டதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளோ பொ.ஐ.முன்னணியை அரசியல் தந்திரோபாயத்துடன் அணுகவே இல்லை. பேச்சுவார்த்தை சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொ.ஐ.மு.யின் இயலாமையை அரசியல் தீர்வை முன்னெடுக்க முடிவை சந்திரிகாவின் இயலாமையை அம்பலப்படுத்த தவறிவிட்டது. சரியான அரசியல் தந்திரோபாயங்களை முன்னெடுக்காமல் இராணுவரீதியாக மட்டும் சிந்தித்தமையால் தெற்கில் சிங்கள மக்களிடம் இருந்த ஆதரவும் வெளிநாடுகளில் தமிழர் போராட்டத்துக்கு இருந்த ஆதரவும் குறையத் தொடங்கியது.

இவற்றையெல்லாம் சாதகமாக்கிக் கொண்டு தமிழ் மக்களுக்கெதிராக மூர்க்கத்தணமாக இராணுவ நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இது புலிகளின் அரசியல் வங்குரோத்தின் விளைவால் ஏற்பட்டதென்றே கூறமுடியும்.

ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் சட்டவரைவு பற்றி பௌத்த பிக்குகளிடம் பேசியது, அச்சட்டவரைவுக்கு ஐ.தே.கட்சியின் ஆதரவு தேடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டமை இச்சட்டவரைவு தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாக இல்லையென்று கூறிக் கொண்டே மேற்படி நடவடிக்கைளில் ஈடுபட்டமை இவையாவுமே தமிழ்க் கட்சிகளின் அரசியல் வங்குரோத்து தன்மையையே காட்டுகின்றன.

இடதுசாரிகட்சிகளோ அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை அடியாகக் கொண்டு யுத்தத்திற்கு எதிராகவும், பேரினவாதத்திற்கு எதிரானதாவும், சில மேலோட்டமான வேலைகளை செய்தன. எனினும், அரசிற்குள்ளும், அரசிற்கு வெளியிலும், அழுத்தத்தைக் கொடுககும் குழு நடவடிக்கைகளாகக் கூட அவை அமையவில்லை. இது இடதுசாரிக்கட்சிகளின் இயலாமையின் வெளிப்பாடாகும்.

பௌத்த சிங்கள அமைப்புகளும் கூட அவைகளது தனிச் சிங்கள தேசிய வாத கண்ணோட்டநிலைப்பாட்டில் இருந்து இம்மியும் பிசகாதிருந்தே அதிகாரப் பரவலாக்கல் சட்டவரைவு குறித்து தமது அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றன. அந்த அடிப்படையில் சட்ட வரைவுக்கு எதிராக பௌத்த பிக்குகளும், ஏனைய பேரினவாதிகளும் செய்த விவாதங்களும் வெளியிட்ட கருத்துக்களுமே சிங்கள மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் சட்டவரைவு கூட தன்னளவில் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு தரக்கூடிய அடிப்படைகளைக் கூட தொடவில்லை. இலங்கை ஒரு மத சார்பற்ற இன மொழி பேதமற்ற பல்லினப்பாங்கான நாடு என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக பௌத்த மதத்திற்கு வரலாற்றில் இதுவரை இல்லாத அதி உன்னத இடத்தை அரசியல் அமைப்பில் கொடுக்க முற்படுகின்றது. முஸ்லிம் மக்கள், மலையக மக்கள் பற்றியும் எவ்வித கூற்றும் இல்லை.

தமிழ் மக்கள் தரப்பில் மேற்படி நிலைக்கு நேர் எதிரான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது மதச்சார்பற்ற நாடு, பல்லினப்பாங்கான நாடு, வடக்கு - கிழக்கு இணைப்பு போன்றன அவற்றில் சிலவாகும். எனவே அதிகாரப்பரவலாக்கல் சட்டவரைவும் தமிழர் தரப்பு கோரிக்கைகளும் சமரசம் செய்து கொள்ள முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதிகாரப் பரவலாக்கல் சட்டவரைவு தற்போது பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்துக்களை கேட்டறிந்து இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க எத்தனை வருடங்கள் எடுக்குமோ தெரியாது.

அதன் முடிவு கிடைப்பதற்குள் யுத்தம் முழு நாட்டையும் நாசப்படுத்திவிடலாம். ஆளும் பொ.ஐ.முன்னணி சமர்ப்பித்த ஆலோசனைகளுக்கும் பின்னர் வெளியிட்ட சட்டவரைவிற்குமிடையில் நிறையவே வேறுபாடுகள் இருக்கின்றன. சட்டவரைவை பார்க்கும் போது அரசாங்கம் பேரினவாதத்தை எவ்வாறு காப்பாற்றுவது என்பதிலேயே கூடிய கவனம் செலுத்தியுள்ளது என்பது புலனாகும்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த்தேசியவாத கட்சிகள் பாராளுமன்றத்தில் பெரிய செல்வாக்கை செலுத்தமுடியாது. பாராளுமன்றத் தெரிவு குழுவிலும் கூட அழுது புலம்பலாமே தவிர வேறு எதனையும் இவர்களால் சாதிக்க முடியாது. ஏனெனில் ஏனைய சிங்கள கடசிகளின் செல்வாக்கும் அழுத்தமும் அங்கு இருககும். அவற்றின் பேரினவாத கண்ணோட்டமும் பாராளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதையே பிரதானமான அரசியலாகவும் கொண்டிருப்பதனால் அவை மனப்பூர்வமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை அணுகமாட்டா. பாராளுமன்ற இடதுசாரிகளோ பொதுஜன ஐக்கிய முன்னணியினை மீறி அதாவது முன்னணியின் பிரதான சக்தியான சுதந்திரக் கட்சியை மீறி எதனையும் செய்ய மாட்டார்கள். தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஆகக் குறைந்தளவாவது பூர்த்தி செய்யாத அதிகாரப் பரவலாக்க சட்டவரைவை ஓகோவென்று புகழ்வதிலிருந்து இடதுசாரிகளின் நிலைப்பாட்டினை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

தமிழர் தரப்பிடம் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்தை வகுத்து சட்டமாக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் யோசனைகளை சமர்ப்பிப்பதானது அரசு தனது பொறுப்பை தட்டிக்கழித்தது பிரச்சினையை புத்திசாலித்தனமாக ஏமாற்ற முயற்சிக்கிறது என்பதை பட்டவர்த்தனமாக்குகின்றது.

மேலும் காலத்தை இழுத்தடித்து சிபாரிசு அறிக்கை வெளிவரலாம். அந்த சிபாரிசு பிரேமதாச ஆட்சிக்காலத்தில் மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பித்த சிபாரிசு போன்றதாகவே இருக்கப் போவது வெளிப்படை. அக்காலத்து சிறிநிவாசன் யோசனைகள் போன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கணக்கில் எடுக்காத 'நீலன் யோசனைகள்' கூட எதிர்காலத்தில் வெளிவரலாம்.

இவற்றில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியதென்னவெனில் இலங்கைப் பாராளுமன்றத்தில் அவ்வப்போது தமிழர்கள் அங்கம் வகித்தாலும் அது 'சிங்களப் பாராளுமன்றமாகவே' நடந்து கொண்டது என்பதைத் தான். அதனையும் எதிர்த்தே தமிழ் மக்களின் போராட்டம் ஆரம்பமானது.

இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமை பறிப்பு, சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையிலான குடியகல்வு, குடிவரவு சட்டம் போன்றவற்றை ஆக்கியதும் இந்தப் பாராளுமன்றமாகும். 1972 அரசியலமைப்பின் மூலம் பௌத்த மதத்திற்கு பிரதான இடத்தை வழங்கியதும் சோல்பரி அரசியலமைப்பில் தென்பட்ட உறுப்பினரை 29(4)ஐ இல்லாமல் செய்ததும் இந்தப் பாராளுமன்றமே. 1971 இற்கு பிறகு தமிழ் மக்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் தமிழ் எம்.பிக்களுக்கு எதிராக ஆறாவது திருத்தச் சட்டம் என்பவற்றையும் ஆக்கியது இப் பாராளுமன்றமே.

1986இல் நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம், 1988இல் பிரஜாவுரிமை பிரகடனச் சட்டம், 1987இல் மாகாண சபை சட்டம் அல்லது 13 வது திருத்தச் சட்டம் என்பவற்றைக் கூட வெளிநாட்டு, உள்நாட்டு நிர்ப்பந்தங்களாலேயே இலங்கைப் பராளுமன்றம் நிறைவேற்றியது எனலாம்.

ஆக, அதியுயர் பேரினவாத நிறுவனமாக நன்கு தாபிக்கப்பட்டிருக்கும் பராளுமன்றம் நிர்ப்பந்தங்கள் அல்லது உத்தியோக வழிமுறைகளிலன்றி அதற்கே உரித்தான வழிமுறைகள் ஒழுங்குகளின் வசதிகளின் அடிப்படையில் இந்நாட்டு தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கும் என்று எதிர்பார்க்கமுடியுமா?

மாகாண சபை திட்டத்தை அறிமுகம் செய்த 13வது திருத்தச் சட்டம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராயப்படவில்லை. இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாக இலங்கையின் இறுக்கங்களை (பாராளுமன்ற இறுக்கங்கள் உட்பட) மீறி ஜே.ஆர். ஜயவர்த்தன செயற்பட்டார். 13வது திருத்தச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானதா என்று உயர் நீதிமன்றத்தில் ஆராயப்பட்டபோதும் அது முரணற்றது என்று தெளிவான தீர்ப்பை அது வழங்கவில்லை. அதன் தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளில் பெரும்பான்மையானவர்கள் அத்திருத்தச்சட்ட ஏற்பாடுகள் அனைத்தையும் அங்கீகரித்தனர் என்று கூற முடியாது. 13வது திருத்தம் அரசியலமைப்பிற்கு முரணற்றது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது என்று பாராளுமன்ற சபாநாயகர் அத்தீர்ப்பிற்கு அர்த்தம் கற்பித்தார். அதனை அடுத்தே அத்திருத்தம் சட்டமாக்கும் நிலையை அடைந்தது.

அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலம் இருந்தது. அத்துடன் ஜே.ஆர். ஐ.தே.க. எம்பீக்களையும் 13வது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவளிக்கும்படி பல வழிகளில் நிர்ப்பந்தித்தார். ஆறில் ஐந்து என்ற பெரும்பான்மை பலத்தின் அடிப்படையிலேயே 13வது திருத்தத்தை ஜே.ஆரால் சட்டமாக்க முடிந்தது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு சட்டத்தை அமுல் செய்தே 13வது திருத்தச்சட்டத்திற்கு அடிப்படையான இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

கைச்சாத்திட வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மரியாதை அணிவகுப்பின் போது பாதுகாப்பு படை வீரன் ஒருவனால் தாக்கப்பட்டார். இவற்றையெல்லாம் ஜே.ஆர். மேவ முடிந்ததற்கு பலமாக பாராளுமன்றப் பெரும்பான்மை, இந்தியாவின் அழுத்தம் என்பன அமைந்தன.

எனவே பௌத்த சிங்கள ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டு நிறுவனப்பட்டுள்ள பாராளுமன்றம் உயர்நீதிமன்றம் என்பவற்றை மீறி அல்லது கட்டுப்படுத்தி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத பொ.ஐ. முன்னணியால் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை சட்டமாக்க முடியுமா?

சட்டவரைவில் அரசாங்கத்தின் பலவீனம் வெளிப்பட்டு விட்டது. எனவே அதற்கு மேலாக அரசாங்கம் எதனையும் செய்யும் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா?

பாராளுமன்றத்திற்கு வெளியில் நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாடுகளாலும் எதனையும் சாதிக்க முடியவில்லை. ஜே.ஆர். பிரேமதாச காலத்து சர்வக்கட்சி மாநாடுகளும் அதன் விளைவுகளும் பூச்சியமாகவே இருந்தன. எனவே எல்லாக் கட்சிகளையும் உள்ளடக்கி பாராளுமன்றத்திற்கு வெளியில் தீர்வுத் திட்டத்தை ஏற்படுத்த முடியும் என்பதும் நம்பிக்கை தரவல்லதாக இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அபிப்பிராயங்களை பெறாமல் தீர்வொன்றை சட்டமாக்கிஅமுல் படுத்த முடியுமா? அதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விட முடியுமா? யுத்தம் நிறுத்தப்படுமா? யுத்தம் வெல்லப்படுமா?

இச்சூழ்நிலைகளில் போர் தொடர்வதை எவ்வாறு நிறுத்துவது? நாட்டையும் மக்களையும் அழிவிலிருந்து எவ்வாறு காப்பாற்றுவது? போன்ற கேள்விகள் எழுகின்றன.


அவற்றுக்கு விடைகாண மூன்றாவது தரப்பொன்றின் தலையீடு அல்லது அழுத்தம் அவசியமானது தானா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சித்திரவதைகளும் சித்திரவதைகளுக்குள்ளாகிச் சீவித்திருப்போரும்

## சித்திரவதை முறைகள்

சித்திரவதையானது உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நடைபெறுகின்றது. உடலியல் ரீதியான சித்திரவதைகளும் உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு வழிவகுக்கின்றன.

சித்திரவதையானது இராணுவம் அல்லது பொலிஸ் அல்லது போராளிகளின் ஆயுதக் குழு, சாட்சியின் வீட்டிற்குள் புகுந்து யாவற்றையும் அடித்து நொருக்கி குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் மீதும் வன்முறையை பிரயோகித்து தேடப்பட்டவரை (Victim) முரட்டுத்தனமாக கைதுசெய்வதுடன் ஆரம்பிக்கிறது.

சித்திரவதையின் முதலாவது அவஸ்த்தை தாறுமாறான தாக்குதலுடன் ஆரம்பிக்கிறது. தடிகள், இடுப்புப்பட்டி, மண்நிரப்பிய எஸ்லோன் பைப்புகள், பொலிஸ் தடி, போன்றவற்றினால் சாட்சி கண்டபடி தாக்கப்படுவார்.

தலையில் இருந்து கழுத்துவரை முழுமையாக மூடி, நீண்ட நேரம் நிறுத்தி வைத்தல்.

கைதி நிர்வாணமாக்கப்படுதல்.

நீர் உணவு என்பன கொடுக்கப்படாமை.

நீண்ட நாட்களுக்கு உறங்க விடாமை போன்றன.

அவை தொடர்ந்து செய்யப்படுவனவாகும்.

உடலியல் ரீதியான சித்திரவதைகள் பின்வரும் அம்சங்களை பொதுவாக கொண்டுள்ளன.

### திட்டமிட்ட தாக்குதல்:

தடிகளால் பாதங்களில் தாக்குதல் (பாதக்குழிவுகளிலும் பாதக்குதியிலும்)

ஒரே நேரத்தில் இரு காதுகளிலும் அறைதல்.

முழங்கால் மூட்டுச்சில்லுகளில் அடித்தல்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு வயிற்றில் அடித்தல் மூலம் கருச்சிதைவு ஏற்படுத்தல் போன்றவை இதனுள் அடங்கும்.

### மின்சாரச் சித்திரவதை:

மின்சாரம் பாய்ச்சப்படும் போது உடலில் கடும் நோவுடன் கூடிய வலிப்பு தோற்றுவிக்கப்படுகிறது. மின்சாரம் உடல் தசைகளை சடுதியான சுருக்கவிரிவுக்கு உட்படுத்துவதால் கடும் நோவு தோன்றுகின்றது. மேலும் மின்சாரம் பாய்ச்சப்பட்டவர் தானே தனது கன்ன உட்சதைகள் உதடுகள் நாக்கு என்பவற்றை மின்சாரத் தாக்கின் போது கடித்துவிடுவார்.

மனித உடலினுள் மின்சாரம் பாய்ச்சப்படுவதற்கு பயன்படும் மின்முனைகள் (Electrodes) மிகக் கூர்மையானவையாக (பென்சீற் கூர்) உள்ளன. இவை உடலில் மென்மையான ஆனால் உணர்ச்சிச் செறிவான இடங்களில் செருகப்பட்டு பாய்ச்சப்படுகிறது. காதுகள் (செவிப்பறை மென்சவ்வு) விரல் நுனிகள், காற் பெருவிரல், மார்பக முனைகள் ஆண்குறி, பெண்குறி போன்ற மென்மையான பகுதிகளை சித்திரவதை செய்வோர் தெரிவு செய்கின்றார்கள்.

### மூச்சுத் திணற வைத்தல்
Suffocation Torture

இவ்வகையான சித்திரவதைகளின் நோக்கம் சாட்சியை மிகக்கடுமையான மூச்சுத் திணறலுக்கு உட்படுத்துவதாகும். இதற்கென பாரிய நீர்த்தாங்கிகள் சித்திரவதைக் கூடங்களினுள் உள்ளதாக அறியக் கிடைக்கிறது. சாட்சியானவர் தலைகீழாக கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையில் தண்ணீரினுள் அமுக்கப்படுவார். சிலவேளைகளில் சிறுநீர், மலம் போன்றவற்றினாலும் சாட்சி அமுக்கப்படுவார். இவ்வகையான சித்திரவதையின் போது மூச்சுத் திணறி மரணமான சிலரின் சுவாசப்பைகளினுள் மலம் காணப்பட்டமையை பரிசோதனைகள் வெளிச்சப்படுத்தின.

இவ்வகைச்சித்திரவதையின் போது சாட்சி மரணமடைந்துவிடாத படி கைதியின் நாடித்துடிப்பை சித்திரவதை செய்பவர் கணித்தபடி இருப்பார்.

### எரிகாயங்களை உண்டாக்குதல்:

எரிகின்ற சிகரட்டினால் உடலின் மென்மையான பாகங்களில் சுடுதல். தீயில் நன்கு எரிக்கப்பட்ட கம்பிகளால் சுடுதல். வெப்பமேற்றப்பட்ட மின்அழுத்தியினால் முதுகுப் பகுதியில் அழுத்தித் தேய்த்தல் போன்றவை இதனுள் அடங்கும்.

### கட்டித் தொங்கவிடுதல்:
Suspension

இருகைகளையும் முறுக்கிக் கட்டி தொங்கவிடுதல் இருகால்களையும் கட்டி தலைகீழாகத் தொங்கவிடுதல் ஒருகை அல்லது ஒரு காலில் மாத்திரம் கட்டித் தொங்கவிடுதல் போன்றவை இதனுள் அடங்கும்.

### உடற் பாகங்களைப் பிடுங்குதல்:
(Mutilation)

தலைமயிர், நகங்கள், நாக்கு, விதைப்பைகள், பற்கள் என்பவற்றை பிடுங்குதல் அல்லது உடைத்தல் அல்லது நசுக்குதல்.

### பாலியல் ரீதியான சித்திரவதைகள்:
(Humilation and Sexualtortoue)

பாலியல் ரீதியான சித்திரவதை என்பது உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் தாக்கத்தை உண்டுபண்ணுகிற ஒரு சித்திரவதையாகும்.

காம வக்கிரமான கதைகளைக் கூறுதல், கூறச் செய்தல்.பாலியல் நடத்தைகளைச் செய்து காட்டுதல், செய்து காட்டச் செய்தல்,வெளியேற்றப்பட்ட விந்தை உண்ணக் கொடுத்தல். சிறுநீர் கழித்தல் சாட்சி மீது,ஆண்களின் ஆண்குறி,விதை என்பனவற்றை தொழிற்பாடு இழக்கசெய்தல். பெண்களை தமது காமஇச்சைக்குப் பயன்படுத்துதல். பழக்கப்பட்ட மிருகங்களை கொண்டு சித்திரவதை செய்தல் போன்ற முறைகள் அறியப்படுகின்றன.

### உளவியல் ரீதியான முறைகள்: :
Psychological torture

1. சாட்சியை தனிமைப்படுத்தி வெறுமையை உண்டாக்கி மன அழுத்தத்திற்கு உட்படுத்துவது. Deprivation and Exhausation இதற்கென மிகச் சிறிய அறைகள் உள்ளன. இவற்றினுள் சாட்சி பல நாட்களுக்கு கடும் இருளில் அல்லது கடும் ஒளியில் அடைத்து வைக்கப்படுவார். இவை நிலவறைகளாகவும் இருக்கக்கூடும். மலசலம் கழிப்பதும் அவ்வறையிலேயே! நாள் ஒன்றில் ஒழுங்கற்ற இடைவெளிகளில் உணவு சிறிது வழங்கப்படும். அதைத்தவிர காலத்தை ((Time) உணரக்கூடிய எதனிலும் இருந்தும் அவர் பிரித்து வைக்கப்படுவார்.

இதன் காரணமாக அவருக்கு ஒவ்வொரு நிமிடத் துளியும் ஒரு யுகம் போலவே தோன்றும், அவருக்குள் சூனிய உணர்வை தோற்றுவிக்கும். வெறுமையை தோற்றுவிக்கும். மன உறுதியும் தன்னம்பிக்கையும் அழித்துவிடும்.

### அதீதமான பயமுறுத்தல்கள்:
(Threats)

பயங்கரமான சித்திரவதை முறைகளை விபரித்தல். சாட்சியின் மனைவியை/ கணவனை, குழந்தைகளை சகோதரர்களை, சித்திரவதை செய்யப்போவதாக பயமுறுத்தல். ஏனையோரை சித்திரவதை செய்பவற்றை பார்வையிடச்செய்தல் ஆகியன உளவியல் ரீதியானவையாகும்.

இறுதியில் கைதியானவர் சித்திரவதை செய்யப்படவில்லையென மருத்துவச் சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பிப்பதுடன் அல்லது தான் சித்திரவதை செய்யப்படவில்லை என சாட்சியிடம் இருந்து ஒப்புதல் கையொப்பமொன்றை பெறுவதுடன் இச்சித்திரவதை நிறைவடையும்.

மேலே விபரிக்கப்பட்டவை சில அடிப்படையான அறியப்பட்ட சித்திரவதைகளே! இன்று சித்திரவதை என்பது ஓர் தொழில் முறையாகவும் கலைநுணுக்கம் நிறைந்ததாகவும் நவீன உபகரணங்கள் பாவிக்கப்படுவதாகவும் மாறியுள்ளது. சித்திரவதைக்குள்ளாகி உயிர் வாழ்பவர்களின் அனுபவங்களை அடிப்படையாக வைத்து சித்திரவதை செய்வோர் கைதியை மரணமடையச் செய்யாமல் செய்யக்கூடிய கடுமையான சித்திரவதை முறைகளை கண்டுபிடிக்கிறார்கள். இதனையும் விட வேதனையானது கீழ் வரும் காட்சி.

சித்திரவதைக்கூடம் ஒன்று: சாட்சி சித்திரவதையால் துவண்டு போயிருக்கிறான். அல்லது போயிருக்கிறாள். சித்திரவதை செய்வோர் மருத்துவர் ஒருவருடன் வருகின்றனர். கைதியின் மனதில் சிறிது நிம்மதி தோன்றுகிறது. கண்களில் ஆவல் வருகிறது. ஏதோ முறையிட விரும்புகிறான். ஆனால் நடப்பது தலைகீழாக. மருத்துவரின் ஆலோசனையுடன் சித்திரவதை கடுமையாகின்றது. முன்பை விட அவன் அலறல் அல்லது அவளின் அலறல் உயர்கிறது. ஆய்வுகளின் படி உலகளாவிய ரீதியில் கணிசமான அளவு மருத்துவர்களும் தாதிமார்களும் சித்திரவதைகளில் பங்குகொண்டுள்ளனர்; பங்குகொள்கின்றனர் என அறியப்படுகிறது.

இனி இச்சித்திரவதையின் விளைவுகள் என்னவாக இருக்கின்றன என கவனிப்போம். இவ்விளைவுகள் உடனடியானதாகவோ, நீண்டகால போக்கில் தோன்றுவனவாகவோ இருக்கலாம். அவ்வாறு சிகிச்சை அளிக்கப்படும் போது உடன் நீங்கி விடுபவையாகவோ உடன் நீங்காது மெதுவாக நீங்குபவையாகவோ இருக்கலாம். சிலவேளைகளில் சித்திரவதையின் விளைவுகள் வாழ்க்கை பூராவும் நிலைத்து விடுகின்றன. உடல் அங்கவீனம், இனப்பெருக்க ஆற்றல் இழப்பு என்பனவற்றை நிரந்தர விளைவுகளாக கருதலாம்.

கைதி/ சாட்சியானவருக்கு, அவர் கண்டபடி தாக்கப்படுவதால் வெளிப்படையான காயங்கள், இரத்தக்கண்டல் காயங்கள் சிறிய, பாரிய எலும்பு முறிவுகள் என்பன ஏற்படலாம். பற்கள் உடைதல் பற்கள் இல்லாது போதல், முழுப் பற்களும் காலப்போக்கில் உதிர்தல் போன்றன்வும் அவதானிக்கப்படுகிறது. மூட்டுக்களில் நோ, மூட்டுக்கள் வீங்குதல், மூட்டுக்கள் விலகுதல், நீண்ட தூரம் நடக்கமுடியாமை போன்ற தசை, வன்கூட்டுத் தொகுதிகளுடன் தொடர்புடைய விளைவுகள் ஏற்படலாம்.

மூச்சுத் திணறவைக்கும் சித்திரவதை முறைகள் காரணமாக சுவாசக்குழாய் அழர்ச்சி,நியுமோனியா,வயிற்றழர்ச்சி,போன்ற நோய்கள் தோன்றும் வாய்ப்புக்கள் உள்ளன.

இது தவிர இழைய வீக்கம்,தசைத் தொழிற்பாடு மந்தமடைதல் போன்ற நிலைமைகளும் தோன்றுகின்றன. அனேகமான சித்திரவதைக்குள்ளானவர்கள் இருதயம், சுவாசப்பை, உணவுக்கால்வாய் தொகுதி, மூளை இவற்றுடன் தொடர்புடைய பாதிப்புக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

உடலியல் ரீதியான சித்திரவதையின் விளைவுகளுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் ஓரளவுக்கு அவற்றிலிருந்து மீள உதவும். ஆனால் சித்திரவதையினால் அடைந்த உளவியல் பாதிப்பை நீக்குவதற்கு செய்யப்பட வேண்டிய சிகிச்சையே முக்கியமானது.

சித்திரவதை செய்யப்பட்டவர் தான் மாற்றப்பட்டுவிட்டதாக தனது அடையாளம் அழிந்து விட்டதாக உணர்கிறார். முன்பு உறுதியானவராகவும் பலமுடையவராகவும் இருந்த அவர் இப்பொழுது உறுதியை இழந்தவராக களைப்படைந்தவராக சுற்றுப்புறச்சூழல் பற்றிய நம்பிக்கையற்றவராக மாறிவிடுகிறார். சுயமதிப்பீடு அவருக்கு சாத்தியமற்றதாகவே தோன்றுகிறது. சூழ உள்ளவர்களை நம்ப அஞ்சுகிறார். மன அமைதியை இழந்து போகிறார்.

சித்திரவதைக்குள்ளாகி உயிர்வாழும் அரசியல் கைதிகளின் நிலைமிக மோசமானது. ஏனெனில் இவர்கள் தாம் எவ்வெவற்றுக்காக துன்புறுத்தப்பட்டார்கள் எவ்வாறு துன்புறுத்தப்பட்டிருப்பார்கள் என்பவற்றை சாதாரண வாழ்க்கையின் துயரங்களை நண்பர் ஒருவருடன் உரையாடி மன அமைதி காண்பதுப் போல உரையாட முடியாதவர்களாக இருக்கிறார்கள். மேலும் அவர்கள் எந்த அரசியல் சமூக வாழ்க்கை முறைகளை புரட்சிகரமானதாக கருதினார்களோ அவற்றை புரிந்து கொள்ளும் திறனுள்ள மனிதர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் அற்றிருக்கிறார்கள்.

பொதுவாக கடுமையான சித்திரவதைகளுக்கு உட்பட்டவர்கள் தொடர்ச்சியான தலையிடி, ஞாபகமறதி, உறக்கமின்மை என்பவற்றால் அவதியுறுகிறார்கள்.

நாளும் பொழுதும் இவர்களது உடலும் ஆத்மாவும் அடைகிற வேதனையை உங்களால் உணர முடிகிறதா?

ஏன் இவர்களின் துயரங்கள் பேசப்படுவதில்லை.

ஏன் இவை பற்றி புரிந்து கொள்ள வேண்டும் என எவர்க்கும் தோன்றவில்லை.

இருண்ட நிலவறைகளுக்குள் இருந்தும் அடைக்கப்பட்ட கூடுகளுக்குள் இருந்தும், அவலக்குரல்கள் உங்களுக்கு கேட்பதில்லையா? பகலில்தான் உலகம் இரைச்சலாக இருக்கிறது. இரவிலுமா கேட்கவில்லை. யாவும் உறங்கி வழியும் இரவுகளில் காற்றில் கேட்கிறதே அவலக்குரல்கள்.

யுத்தங்களை புரிவதில் ஆர்வம் உள்ள அளவுக்கு கொலைகளை சித்திரவதைகளை செய்து இன்பமுறும் அளவுக்கு இவற்றுக்கு எதிரான மானுட விழுமியங்கள் குறித்த அக்கறை ஏன் தோன்றவில்லை?

டானிஷ் கவிஞர் ஹெல்ப்டான் றாஸ்முசீன் (Danish Author Halfdan Rasmussen) கூறுகிறார். "சித்திரவதை என்னைப் பயமுறுத்தாது.
இவ்வுடலின் இறுதி வீழ்ச்சியும் என்னைப் பயமுறுத்தாது.
சுடுகுழலின் கண்களும்
என்னை மூடி உயர்ந்த சுவர்களும் என்னைப் பயமுறுத்தாது.
பூமியை மூடுகிற இரவும்
என்மீது வீசப்பட்ட கடும் வேதனையில்
மங்கி வரும் கடைசி நட்சத்திரமும் கூட
என்னைப் பயமுறுத்தாது.
என்னைப்பயமுறுத்துவது எல்லாம்.
எதனைப்பற்றியும் அக்கறையற்ற குருட்டுத்தனமுடன்
இரக்கமும் உணர்வுகளும் அற்று
அசையும் இவ்வுலகுதான்."

நன்றி:Torture Survivors
- a New Group of Patient
by Lone Jacobsen
Peter Vesti.

ஏன் இவர்களின் துயரங்கள் பேசப்படுவதில்லை?





வாழ்க்கை பூராவும் நிலைத்து விடும் சித்திரவதையின் விளைவுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இலங்கையில் முதன்முதலில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர். 1971 ஏப்ரல் கிளர்ச்சி என அழைக்கப்பட்ட இது அரசாங்கத்தின் கொடூர ஒடுக்குமுறையினால் அடக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் கொல்லப்பட்ட ம.வி.மு பெண் போராளி மனம்பே ரி பற்றி இந்த இருபத்தைந்து வருட நினைவில் சில குறிப்புக்க ள்**



# மனம்பேரி: ஓர் அழகிய போராளியின் 25 வது வருட நினைவு!

அவள் கொல்லப்பட்டு 25 வருடங்கள். 20,000க்கும் மேற்பட்ட அவளின் தோழர்கள் கொல்லப்பட்டு 25 வருடங்கள். அவளையும் அவளது தோழர்களையும் கொன்றொழித்த அந்த அரசமைப்பு மட்டும் இன்னமும் வாழ்கிறது. அவர்களது போராட்டம்.....?

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது அரச இராணுவத்தால் கொல்லப்பட்ட பெண் போராளிகளில் அவளும் ஒருத்தி. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட இளம் ஆண், பெண் போராளிகளை அரச இயந்திரம் கொன்றொழித்தது. ஆனால் அத்தனைக்கும் நியாயம் கற்பித்த அரசு, ஒரே ஒரு கொலையை மாத்திரம் இராணுவத்தினரின் அதிகார துஷ்பிரயோக செயல் எனக் கூறி கண்துடைப்புக்காக விசாரணையை நடத்தியது. அவ்விசாரணைதான் பிரேமவதி மனம்பேரியின் கொலை விசாரணை. இதிலுள்ள இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில் இராணுவத்தினருக்கு எதிரான விசாரணையொன்றில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட விசாரணையும் இதுவே.

### கதிர்காமத் தாக்குதல்:

71 ஏப்ரல் 5ம் திகதி ஜேவிபியினர் (மக்கள் விடுதலை முன்னணி) திட்டமிட்டபடி நாடெங்கிலும் உள்ள பல பொலிஸ் நிலையங்களை நள்ளிரவில் ஒரே நேரத்தில் தாக்கினர். யாத்திரைப் புகழ் பெற்ற கதிர்காமத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையமும் இதே நேரத்தில் தாக்கப்பட்டது. இதன் போது இரண்டு ஜே.வி.பி. உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். எனினும், தாக்குதல் மறுநாள் 6ம்திகதியும் இடம் பெற்றது. கதிர்காமப் பொலிசார் தாக்குதலுக்கு முகம் கொடுக்கமுடியாமல் பின்வாங்கியோடினர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் நாட்டின் கிளர்ச்சித் தளங்களுக்கு அனுப்பப்பட்டனர். கதிர்காமத்தில் லெப்டினன்ட் விஜேசூரிய தலைமையிலான குழுவொன்று ஏப்ரல் 15ம் திகதியன்று முகாம் அமைத்தது. இம்முகாம் இ.போ.ச. வுக்கு சொந்தமான ஓய்வு நிலையத்திலேயே அன்று அமைக்கப்பட்டிருந்தது. இம்முகாம் அமைக்கப்பட்டதன் பிறகு கதிர்காமப் பொலிஸ் நிலையமும் புனரமைக்கப்பட்டது.

இம்முகாமை அமைத்தவுடனேயே லெப்டினன் விஜேசூரிய முதல் வேலையாக கிளர்ச்சியாளர்களை வேட்டையாடுதல் எனும் போர்வையில் கதிர்காமத்தில் பல பெண்களை கைது செய்தும் கடத்தியும் கொண்டு வந்து முகாமில் தடுத்து வைத்ததுதான். ஏப்ரல் மாதம் 16ம் திகதி மனம்பேரியின் வீட்டுக்குச் சென்று அவளையும் கடத்திச் சென்றனர்.

### அழகு ராணி மனம்பேரி:

பிரேமவதி மனம்பேரிக்கு அப்போது வயது 22. ஜே.வி.பியின் ஐந்து வகுப்புகளையும் ஆர்வமாக முடித்தவள். கிளர்ச்சியின் போது கதிர்காமத்தில் பெண்கள் அணிக்கு தலைமை தாங்கியவள். ஜே.வி.பி.க்கான சீருடை தைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தவள். தகப்பனார் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தில் கண்காணிப்பாளர். மனம்பேரியுடன் கூடப் பிறந்தவர்கள் பத்துப்பேர். குடும்பத்தில் மூத்தவள். கதிர்காம வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) வரை கற்றுமுடித்து விட்டு பௌத்த பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றிக் கொண்டிருந்தாள். 1969ல் புதுவருட அழகுராணிப் போட்டியில் இரண்டாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். 1970 ஏப்ரல் 16ம் திகதி நடத்தப்பட்ட புதுவருட அழகுராணிப் போட்டியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டாள். அடுத்த வருடம் அதே நாள் கொலைஞர்களால் கடத்தப்பட்டாள்.

### கடத்தலும் வதையும்:

1971ஏப்ரல் 16ம் திகதி காலை 9 மணியளவில் மனம்பேரியின் வீட்டுக்குள் புகுந்த லெப்டினன்ட் விஜேசூரிய தலைமையிலான குழு வீட்டிலுள்ள பொருட்களை கிண்டி கிளறி தூக்கியெறிந்தது. மனம்பேரியை அடித்து தலைமுடியுடன் இழுத்துச் சென்றது. தாய் லீலாவதி 'பெட்டப்பிள்ளையப்பா. ஒண்டும் செஞ்சு போடாதீங்கோ ஐயா' என கதறி அழுது பின்தொடர்ந்த போது காலால் உதைத்து தள்ளிவிட்டு மனம்பேரியை தூக்கிக் கொண்டு வாகனம் பறந்தது.

அன்றைய இரவு முழுவதும் மனம்பேரி சித்திரவதை செய்யப்பட்டாள். அடுத்தநாள் 17ம் திகதி மனம்பேரியிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ''ஐந்து வகுப்புகளிலும் கலந்து கொண்டாயா?''

''மௌனம்......''

''ஜே.வி.பி. யுடன் எவ்வளவு காலம் தொடர்பு வைத்திருக்கிறாய்?''

''......''

''நீ என்னென்ன நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தாய்?''

இதற்கும் மௌனம் சாதிக்கவே தங்களது வக்கிர இயல்பை வெளிக்காட்டினர். மனம்பேரி விசாரணை வழக்கின் போது வெளிவந்த தகவல்கள் இவை.

''சரி... நான் சொல்வதை அவதானமாக கேள். சொல்வதைச் செய்யாவிட்டால் உனது உயிர் போகும்'' இது லெப்டினன்ட் விஜேசூரிய. அவர் தொடர்ந்தும் ''உனது ஆடைகளை ஒவ்வொன்றாக கழற்று...''

''ஐயோ... சேர்! வேண்டுமென்றால் சுட்டுப் போடுங்கள். ஆடையை கழற்ற சொல்லாதீங்க...'' என மனம்பேரி கண்ணீர் விட்ட போது

''அது எனது வேலை. நான் சொல்வதை மட்டும் நீ செய்'' என துப்பாக்கியை தலையில் அழுத்தி மிரட்டியபோது அழுகையுடன் மேலாடையை கழற்றி உள்ளாடையுடன் இருந்தாள். மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கி உள்ளாடைகளையும் கழற்றிவிட்டு நிர்வாணம் ஆக்கினர். தனது கைகளால் மனம்பேரி மறைவிடங்களை மறைத்தாள். மனம்பேரியை லெப்டினன்ட் விஜேசூரிய முதலில் பாலியல் வல்லுறவு புரிந்தான். அதன் பின் மாறி, மாறி ஏனைய சில இராணுவத்தினரும் பாலியல் வல்லுறவு புரிந்தனர். இதேவேளை அதே முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய இளம் பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள்.

ஒரு அறையில் இந்த அட்டூழியங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் போது பக்கத்து அறையில் 'வெடகிட்டி கந்த பாமுல விகாரையின் பிக்குவும் இதே முகாமில் வதைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தார். இப்பிக்குவை தடுப்பிலுள்ள பெண்கள் மீது பலாத்காரமாக பாலியல் வல்லுறவு புரிய வைத்தனர். இறுதியில் இந்த பிக்குவையும் தோண்டி வைக்கப்பட்டிருந்த குழிக்கு அருகில் நிறுத்தி வைத்து சுட்டுவீழ்த்தினர். ''புனித பூமி'' என சொல்லப்படுகின்ற கதிர்காமத்தில் தான் இந்த கொடுமைகள் நிறைவேற்றப்பட்டன.

### உயிர் பிரிந்தது:

எல்லாவற்றையும் முடித்த பிறகு மனம்பேரியை கைகளிரண்டையும் மேலே தூக்கச் சொல்லி மீண்டும் பணிக்கப்பட்டது. திரும்பியவாறு வீதியில் நடக்க கட்டளை பிறப்பித்தனர். அரை மயக்க நிலையில் தள்ளாடிபடி துப்பாக்கி முனையில் வீதியில் நடத்தப்பட்டாள் நிர்வாணமாக. சார்ஜன்ட் அமரதாச ரத்னாயக்கவின் துப்பாக்கி முனையிலேயே மனம்பேரி வீதியில் நடத்தப்பட்டாள். மனம்பேரியை முன்னே செல்லவிட்டு துப்பாக்கி தோட்டாக்களால் முதுகைத் துளைத்தான் சார்ஜன்ட் அமரதாச. கீழே விழுந்த மனம்பேரியை மீண்டும் உலுக்கி நிறுத்தி நடத்தினான். மீண்டும் அவனின் துப்பாக்கிக் குண்டுகள் மனம்பேரியின் உடலைத் துளைத்தன.

''தண்ணீர் தண்ணீர்....'' என முனகிய மனம்பேரிக்கு எலடின் எனப்படும் வியாபாரி ஒருவர் தண்ணீர் கொடுக்கமுற்பட்டபோது ''விலகிப் போ! உதவி செய்யமுற்பட்டால் நீயும் கொல்லப்படுவாய்'' என அச்சுறுத்தப்படவே அவரும் விலகிச் சென்றார். நடுவீதியல் சூட்டுக்காயங்களுடன் விழுந்து கிடந்த மனம்பேரியை அப்படியே விட்டு விட்டு திரும்பினர் இராணுவத்தினர். பின்னர் ஊர்வாசிகளான எலடின் (இவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார். மனம்பேரியின் வழக்கில் முக்கிய சாட்சிகளில் இவரும் ஒருவர். இவரைச் சந்திக்க 'சரிநிகர்' கதிர்காமத்திற்கு சென்ற நேரத்தில் ''மன்னியுங்கள் அந்த கொடூர சம்பவத்தை நினைவுக்கு கொண்டு வர விரும்பவில்லை'' என அது பற்றி கருத்துரைக்க மறுத்துவிட்டார்.) காதர், பெருமாள் ஆகிய ஊர்வாசிகளை அழைத்து பிணங்களைப் புதைப்பதற்கான குழிகளைத் தோண்டும்படி கட்டளையிட்டனர். அவர்கள் தோண்டினர். மனம்பேரியின் முனகலைக் கேட்ட எலடின் அருகில் சென்ற போது ''அந்த பையனிடம் (பெருமாள்) எனது காதணிகள் இருக்கின்றன அதனைக் கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்து தங்கைக்கு அதனை கொடுக்கச் சொல்லுங்கள். நான் ஒருவருடனும் கோபமில்லை. காமினி பாஸ் தான் குழப்பிப்போட்டார்....'' (கிளர்ச்சியின் போது கதிர்காமத்தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர் தான் காமினி பாஸ்) எனக் கூறிக்கொண்டே தண்ணீர் கேட்டிருக்கிறாள். உடனே தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு இராணுவமுகாமுக்குச் சென்று ''உயிர் இன்னமும் இருக்கிறது. எனவே புதைப்பதற்கு முடியாது.'' என்பதைத் தெரிவித்தார். உடனே இருவரை அனுப்பி உயிரைப் போக்கும்படி பணித்தான் லெப்டினன்ட் விஜேசூரிய. அவர்கள் இருவரும் அப்பாவச்செயலை செய்யமுடியாது என திரும்பி விடவே இன்னொருவன் அனுப்பப்பட்டான். அவன் போய் இறுதியாக மனம்பேரியின் நெற்றிப்பொட்டில் சுட்டான். மனம்பேரி புதைகுழியில் சாய்ந்தாள். (இறுதியாக சுட்ட நபர் இறுதி வரை அடையாளம் காணப்படவில்லை.)

முன்னையவருடம் இதே நாள் அழகுராணியாக காட்சியளித்த அதே தபால் நிலையத்திற்கருகிலேயே மனம்பேரியின் உயிரும் பிரிந்தது. அதே இடத்தில் மனித புதைகுழிக்குள் புதைந்தது அவளது உடல்.

மனம்பேரியின் படுகொலை தொடர்பான பொலிஸ் முறைப்பாடுகள் சிலவற்றின் பின்னர் கண்துடைப்புக்காவே அன்றைய சிறிமா அரசாங்கம் மனம்பேரியின் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதென்றால் மிகையாகாது.

### கொலைஞர்களின் முடிவு:

1971ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி முற்பகல் 10.30க்கு மனம்பேரியின் சடலம் புதைகுழியிலிருந்து மீள எடுக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. 1973 மே மாதத்தில் இவ்வழக்கு விசாரணை 11 நாட்கள் நடந்தது. வழக்கில் இறுதியில் லெப்டினன்ட் அல்பிரட் விஜேசூரிய சார்ஜன்ட் அமரதாச ரத்னாயக்க ஆகிய இருவருக்கும் பதினாறு வருட கடூழிய சிறைத்தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டது. 1973ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டனை வழங்கப்பட்ட இரு இராணுவத்தினரும் தங்கள் மீதான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தனர். இம்மேன்முறையீட்டு வழக்கு 1973 ஒக்டோபரில் நடத்தப்பட்டது. இவ்வழக்கிலும் முன்னைய தீர்ப்பு சரியானதே என தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் தண்டனையை அனுபவித்து வந்தார்கள்.

அவர்களில் லெப்டினன்ட்விஜேசூரிய சிறையில் நோயுற்று மரணமானான். சார்ஜன்ட் அமரதாச தண்டனை முடிவுற்று விடுதலையானபின் 1988இல் DJVPயால் கொல்லப்பட்டார்.

● கோமதி



# தமிழ் மக்க... ஆயுதம் வழ...

கலாநிதி கே.வே...
தலைவர்-AGOTIC-

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க அவர்கள் 1996ம் ஆண்டு மார்ச் 10ம் திகதி 'இந்தியா பிஸினஸ் வீக்' இதழின் பிரதம ஆசிரியருக்கு வழங்கிய நேர்காணலில் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தமது மௌனத்தின் மூலம் ஆதரிப்பதாகக் கூறித் தமிழர்களைக் கண்டித்துள்ளார். கொழும்பு வாழ் தமிழர்களின் நடவடிக்கைக் குழுவினர் (AGOTIC) இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழர்கள் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படும் இந்த மௌனம் பற்றிய சில உண்மைகளை ஜனாதிபதி அவர்களுக்கும் தென்னிலங்கைப் பொதுமக்களுக்கும் தெளிவுப்படுத்த முனைகின்றனர்.

''ஆறு மாதங்களில் பயங்கரவாதத்தைத் துடைத்தெறியுமாறு''ஆணையிட்டு ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன வடக்குக்கு ஆக்கிரமிப்பு படையை அனுப்பிய நாள் முதல் தமிழ் மக்கள் சமாதானத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். சமாதானத்துக்கான ஆணையுடன் 1994 ஓகஸ்ட்டில் ஓர் அரசாங்கம் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரே சமாதானத்தின் தேவைபற்றியும் சமாதானத்துக்கான நிபந்தனைகள் பற்றியும் அரசியல் மற்றும் பொது அரங்குகளில் பல தமிழர்கள் பேசியும் எழுதியும் வந்துள்ளனர். உண்மையில் 1994 தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி சமாதான மேடையில் நின்ற போது அவரை நாடுமுழுவதிலும் தமிழ் மக்கள் மனப்பூர்வமாக ஆதரித்தனர். எனினும் ஜனாதிபதி தமிழர்கள் 'மௌனம்' கொண்டிருப்பதாக குற்றஞ் சாட்டுகிறார்.

1995 ஜனவரி யுத்தத்தில் ஜனாதிபதிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை தொடங்கிய போது அப் பேச்சுவார்த்தைகள் சீரிய நோக்குடன் நடத்தப்படவில்லை எனப் பல தமிழர்கள் வெளிப்படையாகவே பத்திரிகைகளிலும், மேடைகளிலும் கருத்து தெரிவித்தனர். இந்நடவடிக்கையை கிளர்ச்சிக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு தந்திரோபாயமாக அவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தும் தந்திரோபாயத்தைக் கைவிட்டு அதற்குப் பதிலாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள ஒரு பங்காளிக்குரிய சமத்துவத்தை வழங்கி விசுவாசத்தையும் நம்பிக்கையையும் கட்டி எழுப்புமாறும் அவர்கள் அரசாங்கத்தைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். பேச்சுவார்த்தை முறிந்துவிடப் போவதாக பல தமிழர்கள் 1995 பெப். மாதத்திலேயே எதிப்பு கூறத் தொடங்கிவிட்டனர். இதற்கு அவர்கள் கூறிய காரணம்; அரசாங்கம் முன்வைத்த காரணமான தமிழீழ விடுதலைப் புலிகளின் இணக்கமின்மை அல்ல. மாறாக அரசாங்கம் பேச்சுவார்த்தையை கையாள்வதில் கைக்கொண்ட அமெச்சூர் தன்மையும் தெளிவான குறிக்கோள் இன்மையுமேயாகும்.

இராணுவ நடவடிக்கைள் முன்னெப்பொழுதுமில்லாதவாறு அரசாங்கத்தால் தீவிரமாக்கப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் அவற்றைக் குறைக்குமாறும், இனப்பிரச்சினையின் தீர்வுக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள ஆலோசனைகள் எதுவாயினும் அவற்றை திரும்பவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்குமாறும் தமிழர்கள் இன்று வற்புறுத்துகின்றனர். ஆனால் ஜனாதிபதியும் தென்னிலங்கைப் பத்திரிகைகள் சிலவும் இன்னும் தான் தமிழர்களின் குரலைத் தேடுகின்றன!


அரசாங்கத்தையும் சிங்கள தேசியத்தின் சில பிரிவுகளையும் இன்று பீடித்துள்ள இந்த கூட்டு செவிட்டுத்திறன் (அல்லது தெரிவு

செய்யப்பட்ட கே...
காரணங்களை நா...
ளது. தமிழர்கள் சம...
செய்கின்றனர். ஆ...
சமாதானத்தில் **ச...**
பின்னிப் பிணைந்...
**''சலுகைகளை வ...**
நிலையிலிருந்து ...
னர் விடுதலைப் ...
மான பிரஜைகள் ...
துவமான அரசி...
விக்கும் தமது ...
கூடிய ஆசியல் ...
லையே ... காரி...
இலங்கை அரசு...
முழுமையாக மு...
தமிழர்கள் பேசுகி...
தமிழர்கள் இவ்...
உரத்த குரலில் ...
தமிழர்களின் குர...
லாகவே ஒலிக்கி...
தென்னிலங்கையி...
தமிழரும் தமது ...
லைப் புலிகளை ...
ஜனாதிபதியின் ...
தமது செவிப்பு...
கொண்டு, தமி...
கத்தை தமது நெஞ்...
கொண்டு மாய்...
சாராரினது மனநி...
கும்.
இந்... கையில் ...
ரும் ... தலைப்...
ரவு கொண்ட ...
கொள்ள விரும்பி...
தினை ஆதரிக்க...
ஏனெனில், விடு...
(அதன் சரி பிழை...
அரசியல் நிலைப்...
கும் ஒரேயொரு ...
தமிழர்கள் விடு...
கின்றனர் என்று...
நேர்காணலில் ''...
மக்கள்தான் விடு...
பயங்கரவாத அ...
வெறுப்பும் கொ...
வெளிப்படுத்தியு...
பும் வெறுப்பும் ...
தான். அவர்களு...
உரிமைகளை இ...
நசுக்குவதற்கு எ...
யும் தம்மீது கட்ட...
படுகொலைகள் ...
கள் ஒரு தலைப்...
வதுபற்றியும் ...
மையாக ஆ...
அவர்கள் கலை...
டுள்ளமை உண்...
அரசாங்கங்களி...
யல் தீர்வின் மூ...
ஜனநாயக வழி...
இலங்கை மக்க...
களாக மாற்றிய...
தமிழர்கள் கலை...
ருப்பது உண்மை...
ஒரு மக்கள் கூட...
லாஷைகளை ...
லாற்று செயற்...
தோன்றி இன்ற...
களோ, சட்டபூ...
லாத ஒரு ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## படவேண்டும்!

இலங்கை அரசுக்கு எதிரான ஆக்கிரமிப்பாளர்கள் என்று தொடர்ச்சியாக கூறிக்கொண்டிருக்கும் தேசிய தொடர்பு சாதனங்கள் மீது தமிழ் மக்கள் களைப்பும் வெறுப்பும் கொண்டிருப்பது உண்மைதான்.

இலங்கை அரசாங்கமானது பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிரான போரை இன்று நடாத்திக் கொண்டிருக்கிறது என்பதை முழு உலகுக்கும் பிரகடனப்படுத்த இலங்கை வாழ் தமிழ் மக்கள் விரும்புகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பவர்கள் எனக் கருதப்படும் தமிழர்களுக்கு அல்லது வேறுவார்த்தைகளில் கூறுவதானால் "தமது இருட்டறைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் தமிழர்களுக்கு இருக்கக் கூடிய வேறுவாய்ப்புக்கள் பற்றியும் ஜனாதிபதி தம்து நேர்காணலில் குறிப்பிடத் தவறவில்லை. ஜனாதிபதி கூறுகிறார்: "சிங்கள மக்கள் பற்றியும் தமது கிராமங்களில் விடுதலைப் புலிகளினால் தாம் கொல்லப்படுவதும் பற்றியும் அண்மையில் நடந்ததைப் போன்ற குண்டு வெடிப்புகள் பற்றியும் நிச்சயமாக வெகு சீக்கிரமே களைப்படையத் தான் போகிறார்கள். அவ்வேளை அவர்கள் இனரீதியான தாக்குதல்களில் ஈடுபடுவதை தடுக்கவே முடியாமல் போகலாம். தமிழ் மக்களுக்கு ஆகக்கூடியது கொடுக்கப்பட்டு விட்டதாக மக்கள் கருதுகின்றனர். அதையும் கூட அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனால்.....?

உண்மையில் தமிழர்களுக்கு உயர்ந்த பட்ச உரிமைகள் வழங்கப்படுகிறது என சிங்கள மக்கள் எண்ணினால் தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர்கள் தருவதை ஏற்க வேண்டும். தமிழர்கள் தொடர்ந்து மௌனமாக இருந்தாலும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்காது விட்டாலும் (பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவாக) அவர்களது பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தமாட்டாது. இலங்கையில் தமிழ் மக்கள் நிலை பற்றி மிகவும் இரத்தினச் சுருக்கமாக தெளிவுபடுத்தியுள்ளமை பற்றியும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயபூர்வமான தன்மைப்பற்றிய அழகாக விளக்கியிருப்பது பற்றியும் AGOTIC மகிழ்ச்சியடைகிறது.

ஆம், ஜனாதிபதி அம்மணி அவர்களே, தாங்கள் குறிப்பிடுவது போல அரசாங்க அதிகாரத்தில் பங்கு இல்லாமையின் காரணமாக தமிழர்கள் பல்வேறு வன்முறைக்கு பலிக்கடாக்கள் ஆகும் அதே நேரத்தில், சிங்கள மக்கள் மத்திய வங்கி, அறந்தலாவ, கெப்பிட்டிகொல்லாவ, போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்களுக்காக தமிழர்களுக்கு ஒன்றிரண்டு பாடங்களைப் புகட்டுவற்காக சகலதையும் தமது கரங்களில் எடுத்துக் கொள்ளும் வல்லமை கொண்டவர்களாகவே உள்ளனர். அத்துடன் "கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடந்தேறிய பயங்கரங்கள் அனைத்தும்" தமிழர்களைத் தரிசிக்க திரும்பவும் வருகை தரவுள்ளன. கடந்த 40 ஆண்டுகளாக தமிழர்களுக்கு எதிரான சகல தாக்குதல்களும் அரசாங்கத்தின் ஆதரவுடனேயே நடந்தேறின என்பது ஓர் வரலாற்று உண்மையாகும். அம்மணி அவர்களே, தாங்களாவது ஒரு விதிவிலக்காக இருக்க வேண்டுமென எண்ணவில்லையா?

"தமிழர் மீதான தாக்குதலை நிறுத்த முடியாது" என ஏதாவது ஒரு காரணத்தினால் அரசாங்கம் எண்ணினால் தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்வதற்காக சகல தமிழ் குடிமக்களுக்கும் ஆயுதம் வழங்கப்படவேண்டுமென AGOTIC கோருகிறது. இவ்வாறு செய்வதற்கு தவறுதலானது இலங்கை அரசு நடுநிலையைப் பேணவில்லை என்பதையும் தமிழர்களை அந்நியப்படுத்துதல் மேலும் வலுப்பெற்றுள்ளது என்பதையுமே தெளிவாக உறுதிப்படுத்தும்.

# தமிழ் மக்கள் எவரிடமிருந்தும் அருள் வேண்டி நிற்கவில்லை..!

-குமார் பொன்னம்பலம்

மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு,

ஸ்டார் தொலைக்காட்சியில் 1996 மார்ச் மாதம் 10ம்திகதி ஒளிபரப்பு செய்யப்பட்ட தங்களுடைய நேர்காணல் தொடர்பாக இக்கடிதத்தை எழுதுகிறேன். இந் நேர்காணல் ரூபவாஹினியில் மீள் ஒளிபரப்பு செய்யப்பட்டதோடு அதன் பிரதிகள் சில உள்ளூர் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருந்தன. புறக்கணித்து விட முடியாத தங்களுடைய நேர்காணல் மிக அபத்தமானதாகும்.

நேர்காணலில் ஒரு கட்டத்தில் தாங்கள் பின்வருமாறு கூறுகிறீர்கள்: "தமது பிரச்சினைக்குத் தீர்வாக இதுவரை முன்வைக்கப்பட்ட தீர்வுகளில் மிகவும் சிறந்தது இது என்பதில் பெரும்பான்மைச் சிங்களவர்களும், சிறுபான்மை தமிழர்களும், முஸ்லிம்களும் ஏனையோரும் பொதுவான கருத்தொருமிப்பைக் கொண்டுள்ளனர்." இம் மூன்று இனங்களையும் தாங்கள் பருமட்டாகக் குறிப்பிட்டுள்ளதுடன் "அவர்களது பிரச்சினை" என தெளிவற்ற விதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். அல்லது இம் மூன்று இனங்களும் ஒரு வகையான பிரச்சினையைக் கொண்டுள்ளனவா? அல்லது தனித்தனியான பிரச்சினைகளைக் கொண்டுள்ளனவா? அவ்வாறானால் இம் மூன்று இனங்களுள் பிரதானமான பிரச்சினையை எதிர்கொள்வது எது?

"அதிகாரப்பரவலாக்கல் பொதிதான் உண்மையில் மிகச் சிறந்தது என்பதில் தமிழ்ச் சிறுபான்மையினரிடையே ஒரு பொதுவான கருத்தொருமிப்புள்ளது" எனத் தாங்கள் கூறுவது உண்மையில் சரியானதா? நேர்காணலில் தங்களைச் செவ்விகண்டவர் "குறிப்பிடத்தக்க அதிகாரப் பரவாலாக்கல் பொதி" என மிக டாம்பீகமாக வர்ணிக்கும் அதனைப்பற்றி வடக்கிலும், கிழக்கிலும் பெரும்பான்மையாக வாழும் தமிழ்த் தேசியத்துக்கு தமது அபிப்பிராயத்தை வெளியிட ஒரு நியாயமான அல்லது ஒழுங்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதா? இம்மக்கள் தமது கையளிக்க முடியாத சுயநிர்ணய உரிமையை எப்போதுமே உறுதிப்படுத்தி வந்திருக்கின்றனர். கொழும்பில் ஒளிந்து மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பரிதாபத்துக்குரிய தமிழர்களை விட வடக்குக் கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு அவர்தம் வாழ்க்கையை பாதிக்கும் ஒரு விடயத்தைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டாமா? இப்போது அவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்களால் அபிப்பிராயத்தை வெளியிடத்தான் முடியுமா? அல்லது அம்மக்களது பிரதிநிதிகள் எனச் சொல்லிக் கொண்டு தாம் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களைச் சென்றடைவதற்கு வழியில்லாமல் இங்கு கொழும்பில் மூலைகளில் முடங்கிப் போயிருக்கும் சிலருக்கு அம்மக்களைப் பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமை உண்டென உண்மையிலேயே கூறத்தான் முடியுமா? இக்கேள்விகளுக்கான நேர்மையான விடைகள் கிடைக்குமெனில் "தமிழ்ச் சிறுபான்மையினரிடையே கருத்தொருமிப்பு உள்ளது" என்னும் தங்களுடைய கூற்று வெறும் வார்த்தை ஜாலம் மட்டும்தானே?

"ஒரு தீர்வை நோக்கிய செயற்பாடுகளில் இப்போதைய அதிகாரப் பரவலாக்கல் பொதிதான் மிகச் சிறந்தது" எனத் தாங்கள் கூறுகிறீர்கள். இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றியும் தொடந்து வந்த 13 வது திருத்தம் பற்றியும் கூட இவ்வாறுதான் கூறப்பட்டது. மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை பற்றியும் கூட இவ்வாறுதான் துதி பாடப்பட்டது. இவை இரண்டுக்கும் நடந்தது என்ன? பாயாசத்தின் மகிமை அதன் உருசியில் அல்லவா தங்கியுள்ளது.

"பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாத பிரச்சினை பற்றி தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். யார் இப்பிரச்சினையை உருவாக்கியது? சிங்களம் மட்டும் சட்டத்தை நாம் மறந்து விட முடியுமா? தரப்படுத்தற் கொள்கை யாருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது? பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏன் கிழித்தெறியப்பட்டது?

"தமிழ் மக்கள் வேறெவரையும் விட தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத அரசியலின் மீது களைப்பும் வெறுப்பும் கொண்டுள்ளனர்" என்பதை நீங்கள் நம்புகிறீர்கள். பயங்கரவாத அரசியல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன்தான் ஆரம்பித்ததா? தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று முளைத்து வளர்ந்தவர்களாவர். 1956, 1958, 1961, 1971, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் பயங்கரவாத அரசியலில் ஈடுபட்டவர்கள் யார்? யாருடைய ஆட்சியின் கீழ் இவற்றில் பெரும்பாலானவை நடந்தேறின? தமிழ்த் தீவிரவாதிகளுக்கு 'பயங்கரவாத அரசியலை' கற்பித்து அதனை வழிநடத்தும் வழிகளைப் புகட்டியோர் யார்? இன்று 'பயங்கரவாத அரசியலை' நடத்துவோர் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் தானா? இலங்கை அரசபடைகள் என்ன செய்கின்றன என்பதைப் பற்றியோ அல்லது பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் பற்றிப் பொல்கொட கூறும் கதையைப் பற்றியோ நாம் ஏன் அலட்டிக் கொள்வதில்லை? இவற்றையெல்லாம் பார்க்கும் போது "பயங்கரவாத அரசியல்" என்பது கடந்த நான்கு தசாப்தங்களாக எம்மைப் பீடித்திருக்கும் ஒரு நோய் என்பது வெளிப்படையானது.

இன்று தமிழர்கள் உண்மையிலேயே களைப்பும் வெறுப்பும் கொண்டிருப்பது சில உயர் மட்ட பிரகிருதிகளின் ஆசீர்வாதத்துடன் நாடெங்கிலும் நடைபெறும் அரச பயங்கரவாதத்தின் மீதேயாகும்.


"இராணுவ நடவடிக்கையும் அரசியல் செயல்முறையும் ஒன்றுக் கொன்று எதிரானவை எனவும் வேறு ஒரு தீர்வு இல்லை எனவும்" தாங்கள் ஒத்துக் கொள்கிறீர்கள். நீங்கள் இவ்வாறு நம்ப முடியாத வகையில் ஒத்துக் கொள்வதன் அர்த்தம் என்ன? நாங்கள் தொடங்கிய இடத்துக்கே வந்துவிட்டோமா அல்லது நாம் எங்கு சென்று கொண்டிருக்கிறோம்?

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு முழுமையான யுத்தத்திற்கு அரசாங்கத்தைத் தள்ளுகின்றனர்" எனத் தாங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அரசாங்கமானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு யுத்தத்தை ஏற்கெனவே தொடங்கிவிடவில்லையா? இதனடிப்படையில் 1996ம் ஆண்டு சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னதாகத் தமிழீழ விடுதலைப் புலிகளைத் துடைத்தெறிந்து விடுவதாக அமைச்சர் ரத்வத்தை சூளுரைக்கவில்லையா? புத்தாண்டுக்கு இன்னும் மூன்று வாரங்கள் மாத்திரம் தானே உள்ளன? "இந்த நிலையில் அதிகாரப் பரவலாக்கல் பொதியைப் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவர் என நீங்கள் கூறுவது நம்பத்தகுந்ததுதானா? இவ்வாறான குழப்பம் நிறைந்த பேச்சின் அர்த்தம்தான் என்ன?

புலிகளுக்கு எதிரான ஒரு முழுமையான யுத்தமானது "தென்னிலங்கையில் வாழும் சகல தமிழ் மக்கள் மீதும் நிச்சயமாகப் பிரதிபலிக்கும் எனவும் அத்தகைய பிரதிபலிப்பு கடந்த அரசாங்கத்தின் கீழ் நடைபெற்ற சகல பயங்கரங்களையும் கொண்டிருக்கும் எனவும் நீங்கள் கூறுகிறீர்கள். தங்களது கூற்றின் உண்மையான அர்த்தம் என்ன? கடந்த அரசாங்கத்தின் கீழ் நடந்த சகல பயங்கரங்களும் திரும்பவும் நடைபெறப்போகின்றன எனத் தாங்கள் பயமுறுத்துகிறீர்களா? அல்லது மறைமுகமாகத் தூண்டிவிடுகிறீர்களா? அல்லது தென்னிலங்கையில் வாழும் சகல தமிழர்களும் புலிகள் என அடையாளப்படுத்துகிறீர்களா? தங்களது இந்தக் கூற்றுப்பற்றி நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். 1994ம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்துக்கு முன்னரே பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதில் கவனமாக இருக்க வேண்டுமென நான் எச்சரிக்கை செய்த போதிலும் 1994ம் ஆண்டு ஒகஸ்ட்டிலும் நவம்பரிலும் தங்களை ஆதரித்த தென்னிலங்கை தமிழர்களின் கண்களை இப்பொழுதேனும் தங்களது கூற்றுத் திறந்தது விட்டிருக்குமென நம்புகிறேன். அத்துடன் தங்களை ஆதரித்த தமிழர்களை மிகச் சீக்கிரமே நீங்கள் மறந்து விட்டீர்கள் என்பதையும் அது காட்டி நிற்கிறது. தாங்கள் பதவிக்கு வருவதற்கு பயன்படுத்திய போஸ்டர்களும் விளம்பரங்களும் சமாதானப் புறாவைக் கொண்டிருந்தன என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள். மேலும் அரசாங்கமானது ஒவ்வொரு குடிமகனையும் காக்கும் பொறுப்பினைக் கொண்டிருக்கிறது என்பதனையும் எந்த ஒரு அரசாங்கமும் வன்முறையையோ பயமுறுத்தல்களையோ தூண்டி விடக்கூடாது என்பதையும் தாங்கள் மறந்து விட்டீர்கள்.

தமிழர்கள் தென்னிலங்கையில் வசிப்பது கொழும்பு தலைநகரமாக இருப்பதனால் மட்டுமன்றி அவர்கள் இன்னும் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழத் தயாராக உள்ளனர் என்பதாலுமாகும். தமிழர்கள் இவ்வாறு பயமுறுத்தல்களுக்கு ஆளானால் அதுவே தமிழர்கள் பாதுகாப்புடனும் அமைதியுடனும் வாழக்கூடியதாகத் தமது பாரம்பரிய தாயகத்தில் தனியரசு ஒன்றினை அமைப்பதற்கான மிக வலிமையான ஒரு நியாயமாகி விடாதா?

"சிங்கள மக்கள் கிளர்ந்து எழுந்து இனவாத தாக்குதல்களில் ஈடுபட்டால் அவர்களைத் தடுக்கவே முடியாது" என்னும் தங்களது கூற்று 1983ம் ஆண்டு இனப்படுகொலை ஆரம்பித்து சிலநாட்களின் பின்னர் தொலைக்காட்சியில் தோன்றி அது சிங்கள மக்களின் நியாயமான எதிர்வினை என்பது போன்ற வார்த்தைகளை உதிர்த்த ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் நடத்தையையே எனக்கு நினைவூட்டுகிறது. 1983 ஜூலையில் ஜயவர்த்தனா கூறியதற்கும் 1996 மார்ச்சில் தாங்கள் கூறுவதற்கும் எவ்வித வேற்றுமையும் இல்லை. தங்களது உண்மையான இயல்பு தற்போது வெட்டவெளிச்சமாகி விட்டது.



"தமிழர்கள் மௌனத்தைக் கலைக்கவேண்டுமெனவும் தமிழீழ விடுதலைப் புலிகளை நோக்கி அவர்களது பயங்கரவாத அரசியலைத் தாம் வெறுப்பதாக உறுதியாகவும் வெளிப்படையாகவும் கூறவேண்டுமெனவும்" நீங்கள் கூறுகிறீர்கள். 1994ம் ஆண்டு ஒகஸ்டிலும் நவம்பரிலும் பல தமிழர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிக்குமாறு கோரி பத்திரிகைகளினூடாக பொது மக்களிடம் விண்ணப்பித்தனர். இத்தமிழர்கள் திரும்பவும் கூட தங்களது கோரிக்கையை ஏற்று உங்களது வேண்டுகோளை ஆதரிக்க முன்வருவார்கள். ஏனெனில் பொதுஜன ஐக்கிய முன்னணிதானே இப்போது அதிகாரத்திலுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினர் என்றளவில் அதிகாரப்பரடவலாக்கல் பொதியினைப் பற்றிய பேச்சுவார்த்தைக்கு உடன்படுவார்கள் (தங்களது நம்பிக்கை) என எதிர்பார்ப்பதாகக் கூறும் நீங்கள் மறுபுறத்தில் அவ்வியக்கம் "பயங்கரவாத அரசியலில்" ஈடுபட்டுள்ளதாகக் கண்டிக்கிறீர்களே? தங்களது இருகூற்றுக்களும் முரண்படுவதாக இல்லையா? தங்களது நிலைப்பாடுதான் என்ன? தமிழீழ விடுதலைப் புலிகளின் "பயங்கரவாத அரசியல்" இருக்கத்தக்கதாக தாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரா? அல்லது எது நடந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிளுடன் எவ்வித தொடர்புகளும் இனிமேல் வைத்துக் கொள்ளப் போவதில்லையா? முதலில் தாங்கள் தான் ஓர் "உறுதியான நிலைப்பாட்டை" எடுக்க வேண்டுமென நான் எண்ணுகிறேன்!

"தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தும் பயங்கரவாத அரசியலின் மீது வேறேவரையும் விடத் தமிழ் மக்கள்தான் வெறுப்பும் களைப்பும் அடைந்துள்ளனர்" எனக் கூறும் தாங்களே மறுபுறத்தில் "தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் மௌனமாவும் அவர்களிற் சிலர் வெளிப்படையாகவும் ஆதரித்து வந்துள்ளனர்" எனக் கூறுகிறீர்களே! இது ஒரு முரண்பாடு அல்லவா? இவற்றில் எது சரியானது? தங்களது குழப்பநிலையிலிருந்து தாங்கள் வெளியேறும் போது எம்மாலும் ஒரு "உறுதியான நிலைப்பாட்டை" எடுக்க முடியுமென நாம் எண்ணுகிறோம்.

"தென்னிலங்கையிலும் கொழும்பிலும் வாழும் ஒவ்வொரு தமிழரும் தமது மௌனத்தின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஆதரிக்கின்றனர்" என்னும் தங்களது கூற்றை விசேட கவனத்தில் கொள்ளுமாறு கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தங்களது கூற்று என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. ஏனெனில் மிக மிகக் குறுகிய காலத்தில் தாங்களே தங்களது தமிழ் ஆதரவாளர்கள் உட்பட சகல தமிழர்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மடியில் விழச் செய்து விட்டீர்கள் என்பதனையும் இப்பொழுதேனும் உணர்கிறீர்கள் என்பதனாலாகும்!

"தமிழ் மக்களுக்கு ஆகக் கூடியதை வழங்கியாயிற்று" என நீங்களே கூறுகிறீர்கள். தயவு செய்து இதனை விளங்கிக் கொள்ளுங்கள். தமிழ் மக்கள் எவரிடமிருந்தும் அருள் வேண்டி நிற்கவில்லை. அல்லது 'சலுகைகள்', 'ஒப்பந்தங்கள்', 'கொடைகள்' முதலியவற்றுக்குப் பின்னால் தொங்கிக் கொண்டிருக்கவும் அவர்கள் தயாராக இல்லை. தமிழ்த் தேசியத்தினரான நாங்கள் எமது அபிலாசைகளைத் திட்டவட்டமாகக் கூறியுள்ளோம். தமிழர்களுக்கு உரிமையுண்டு. தமிழர்கள் சமத்துவமாகவே பிறந்துள்ளனர். சிங்கள தேசியத்தினர் தமிழர்களின் அபிலாசைகளையும் உரிமைகளையும் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்வது என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டிய ஒரு கால கட்டத்துக்கு நாம் இறுதியாக வந்துள்ளோம். இலங்கையின் எதிர்காலம் இதில் தான் தங்கியுள்ளது

தங்கள் உண்மையுள்ள
ஜீ.ஜீ. பொன்னம்பலம்.
பொதுச்செயலாளர்

www.tamilarangam.net



வட அயர்லாந்துப் பிரச்சினைக்கான சமாதானத் தீர்விற்கான நடவடிக்கைகளை ஜோன் மேஜர் எப்படி தவறாகக் கையாண்டார்? என்ற தலைப்பில் கனடிய தேசியப் பத்திரிகையான Globe & Mail இல் வெளிவந்ததே இக்கட்டுரை. இதைக் கனடியப் பல்கலைக் கழகமொன்றின் அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியரான ஜோன் மக்ஹறீ (John McGarry) எழுதியுள்ளார்.



இது தொடர்பாக அப்பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில், ''பிரிட்டிஷ் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு முன்பு IRA (ஐரிஷ் குடிரசு இராணுவம்) ஆயுதங்களை ஒப்படைக்க கேட்பது நியாயமாதே! ஆனால் அது நடைமுறைக்குச் சாத்தியமற்றது'' எனக் குறிப்பிட்டதுடன், உலகில் சமாதான ஒப்பந்தங்கள் செய்து கொண்டதும், நீண்ட காலமாக கடுமையாகப் போர் புரிந்த அரசாங்கங்களையும் குறிப்பிட்டு, அவை கூட பேச்சுவார்த்தைக்கு முன் ஆயுதங்களை வைக்கும்படி கோரிக்கை விடவில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளது. இதே பத்திரிகையில் இது தொடர்பாக வந்த செய்தியில் ,லண்டன் கார்டியன் பத்திரிகை, ''ஒரு குண்டு வெடிப்பு பேச்சுவார்த்தையை நிறுத்தாது'' என ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.


(இந்தக் கோழைத்தனமான தாக்குதலுக்கு IRA பொறுப்பாகும். ஆனால் இதைச் செய்ய எடுத்த முடிவானது வெற்றிடத்தில் எடுக்கப்பட்ட முடிவல்ல)

கடந்த தை மாதம் 9ம்திகதி லண்டனில் நடைபெற்ற கோழைத்தனமான தாக்குதலுக்கு IRA பொறுப்பு என்பது சந்தேகத்திற்கு இடமற்றது. ஆனால் இதற்கு திரைமறைவில் யார் பொறுப்பாளியாக உள்ளார்கள் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் ஐரிஷ் சமாதான நடவடிக்கையை தவறாகக் கையாண்டமையே, வெள்ளிக்கிழமை தாக்குதல் நடைபெறுமளவுக்கு பின் தள்ளியுள்ளது.

1994 ஒகஸ்ட் மாதம் யுத்த நிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கு ஒன்பது மாதங்களுக்கு முன்பு பிரிட்டிஷ், ஐரிஷ் அரசாங்கங்கள் ஒன்றிணைந்து ''டவுனிங் ஸ்ரீட் பிரகடனம்'' (Downing Street Declaration) ஒன்றை வெளியிட்டன. அனைத்து வட அயர்லாந்து கட்சிகளும், பிரதேசத்தின் எதிர்காலத்திற்காக ''சமாதான நடவடிக்கைக்கான வழிகளிற்கு மட்டும்'' ஆதரவு தருவதாக வாக்குக் கொடுத்துள்ளன என இந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

IRA ஐ போரை நிறுத்தும்படி அறிவுறுத்த வேண்டும் என்றும் சமாதானத்திற்கு தனது வாக்குறுதியை வழங்கினால் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற IRA யின் அரசியல் கட்சியான ''சின்பெயின்'' (Sinn Fein) ஐ அனுமதிக்க முடியும் என்றும் மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது. கடந்த பல மாதங்களாக ஐரிஷ் அரசாங்கம், மிதவாத தேசியக் கட்சிகள், அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் நிர்வாகம் மற்றும் பலரும் வன்முறையற்ற நடவடிக்கையினாலேயே அரசியலில் வெற்றி கொள்ள முடியும் என ''சின்பென்''க்கு வலியுறுத்தி தம் வழிக்கு கொண்டுவர மிகவும் முயற்சி செய்தனர். இந்தச் செய்தியை IRA யிடம் ''சின்பெயின்'' பரிமாறியது. இதனால் 1995ம் ஆண்டு ஒகஸ்ட் 31ம் திகதி ''இராணுவத் தாக்குதல்களை முழுமையாக நிறுத்துவதாக'' பிரகடனம் ஒன்றை வெளியிட்டது.

# ஒரு குண்டு வெடிப்பு பேச்சுவார்த்தையை நி



பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான, சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதற்குப் பதிலாக IRA தனது யுத்த நிறுத்தம் ''நிரந்தரமானது'' எனக் குறிப்பிட வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் முன்வைத்தது. பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன் வன்முறை நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும் என ''டவுனிஸ் ஸ்ரீட் பிரகடனம்'' கேட்கவில்லை எனத் தேசியவாதிகள் பதிலளித்தனர். இந்தப் பிரகடனத்தில் கையொப்பம் வைத்த ஐரிஷ் பிரதமர் அல்பேர் ரினோல்ட்டஸ் (Albert Renoylds), இது போன்ற கோரிக்கையை உள்ளடக்கியிருக்குமானால் தான் அப்படிச் செய்திருக்க மாட்டேன், எனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்வதற்கு முன்பு, IRA தனது ஆயுதங்கள் சிலவற்றையாவது கையளிக்க வேண்டும் என பிரிட்டிஷ் அரசாங்கம் கட்டாயப்படுத்தியது. பிரதமர் ஜோன் மேஜர், தனது சொந்த பாதுகாப்புத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு முரணாகவே இந்த நிலைப்பாட்டை எடுத்திருந்தார். தனது முழு ஆயுதங்களையும் ஒப்படைத்தாலும் IRA இதைவிடக் கூடுதலான ஆயுதங்களை அது விரும்பினால் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியுமென பாதுகாப்புத் துறை குறிப்பிட்டது. எங்கேயும் பெற்றுக் கொள்ளக் கூடிய உரம், எண்ணெய் போன்றவற்றிலிருந்தே IRA தனது குண்டுகளைத் தயாரிக்கின்றது என மேலும் இது குறிப்பிட்டது. இந்த அடிப்படைகளில் மீண்டும் வன்முறைக்கு செல்வதை விட பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது, ஆபத்துக்கள் குறைந்ததும் மிகவும் நல்லதும் என பாதுகாப்புத்துறைத் தலைவர் வாதிட்டுள்ளார்.

IRA யின் பார்வையில், பேச்சுவார்த்தைக்கு முன் எந்தவிதமான ஆயுதக் கையளிப்புக்கும் இடமில்லை. IRA தோற்கடிக்கப்படவில்லை, ஆனால் அது சுயமாகவே யுத்த நிறுத்தத்தை அறிவித்தது என ''சின்பெயின்'' கூறியுள்ளது. அத்துடன் வட அயர்லாந்தில் பல படுகொலைகளுக்கு காரணமான பிரிட்டிஷ் இராணுவத்தையோ, பொலிசையோ நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும் என கேட்கப்படவில்லை என மேலும் அது கூறியது. IRA யுடன் ஒப்பிடக் கூடிய பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் ஆகியவற்றை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்பு, ஆயுதங்கள் கையளிக்கப்பட வேண்டும் என கேட்கப்படவில்லை என சிலர் குறிப்பிடுகின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் முன்னாள் அமெரிக்காவின் செனட்டர் ஜோர்ஜ் மைக்கலை தலைவராகவும் கனடிய ஜெனரல் ஜோன் டீ சாஸ்லீனையும் கொண்டிருந்த சர்வதேச சபை மூலமாக ஆயுதக் கையளிப்புத் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரிட்டிஷ், ஐரிஷ் அரசாங்கங்கள் உடன்பட்ட போது இந்த நெருக்கடியைத் தீர்த்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவர்களுக்கு நிபந்தனை விதிப்பதைவிட பேச்சுவார்த்தை நடக்கும் பொழுதே ஆயுதக் கையளிப்பும் நடைபெறவேண்டும் என சர்வதேச சபை புத்திசாலித்தனமான தனது அறிக்கையை தை மாதக் கடைசியில் வெளியிட்டது.

மேஜர் சபையின் சிபாரிசை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, இன்னுமொரு நிபந்தனையைக் கொண்டு வந்தார். பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்பு புதிய வட அயர்லாந்துக் குழுவொன்றை தெரிவு செய்ய தேர்தல் ஒன்றை நடாத்த வேண்டும் எனக் கூறினார்.

தேசியவாதிகளின் பார்வையில் இது பல காரணங்களுக்காக ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கருதப்பட்டது. முதலாவதாக, ''டவுனிங் ஸ்ரீட்'' பிரகடனத்தில் இது போன்ற முன்நிபந்தனைகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. இரண்டாவதாக, தனது ஆதரவாளர்களிடம் இக்கோரிக்கைகளை எடுத்துச் செல்லும் பொழுது ''சின்பெயின்''க்கு பிரச்சினையை ஏற்படுத்துவதாக ''ஐக்கிய அயர்லாந்துக்காரர்'' (Uuionists) இதனைக் கேட்டிருக்க வேண்டும். மூன்றாவதாக உள்ளூர் சபைகளினாலேயே அதிகமாக தெரிவு செய்யப்பட்ட ''சின்பெயின்'' தலைவர்கள் ஏற்கெனவே பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்காக ஒரு ஜனநாயகபூர்வமான அறிக்கையை வெளியிட்டிருந்தனர். நான்காவதாக, வாக்குகளைப் பெறுவதற்காக ''சரணடைய வேண்டாம்'' (No surrender) என்ற கோஷத்தைக் கட்சிகள் முன்வைப்பதற்கு, புதிய தேர்தல்கள் தூண்டிவிடக்கூடும். இது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளில் விட்டுக் கொடுப்புக்களை செய்வதை மிகவும் சிக்கலாக்கும். இதன் மூலம் IRA க்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க வழிவகுக்கும். கடைசியாக தேர்தலுக்கு முன் பேச்சுவார்த்தைகள் நடக்கும் போது கட்சிகள் சமத்துவமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுப் பங்குபற்றும். ஆனால் தேர்தலின் பின் புதிதாக தெரிவு செய்யப்பட்ட குழுவுடன் கதைப்பது தேசியவாதிகளை சிறுபான்மை நிலைக்குப் பின் தள்ளிவிடலாம்.

சமாதான நடவடிக்கையின் போது இது போன்ற ஆபத்தான நிலைப்பாடுகளை ஜோன் மேஜர் ஏன் எடுத்தார்? இதற்கு சாத்தியமான மூன்று காரணங்கள் இருக்கலாம்.

இவரது பழைமை வாதக் கட்சி (Coservative Party) பாராளுமன்றத்தில் மிகவும் சிறிய அளவிலான பெரும்பான்மையைக் கொண்டுள்ளது. அத்துடன் அதீத ஐக்கிய கட்சி (Ultra Unionists Party) பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளது. இன்று தேர்தல் ஒன்று நடைபெறுமானால் தொழிலாளர் கட்சி (Labour Party) மேஜரின் பழமைவாதக் கட்சி மோசமாகத் தோற்கடிக்கப்படலாம் எனக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. அயர்லாந்தின் சமாதானத்தை விட, தனது கட்சியின் நலன்களை பாதுகாக்கும் குறுகிய கண்ணோட்டத்தை பிரதமர் முன்வைத்திருக்கலாம்.

இரண்டாவது, மேஜர் இந்தப் பிரச்சினையில் நடுநிலையான பாத்திரத்தை வகிப்பவர் அல்ல. ஆனால் அதிகமாக ''ஐக்கிய அயர்லாந்துக்காரர்'' இனது பக்கம் சார்ந்தே உள்ளார். அவருடைய கட்சியின் முழுப் பெயர் ''பழமைவாத ஐக்கிய அயர்லாந்துக் கட்சி'' (The Conservative & Unionists Party) ஆகும். அத்துடன் ஐக்கிய அயர்லாந்துக்காரர் கட்சி''க்கு மிகவும் ஆதரவை அளிப்பதாக ஜோன் மேஜர் பிரகடனப்படுத்தியுள்ளாா.

கடைசியாக ''ஐக்கிய அயர்லாந்து''அரசியல் வாதிகளுக்குத் தேவையான விட்டுக் கொடுப்புக்களை IRA யிடமிருந்து மேலும் மேலும் பெறாதவிடத்து, ''ஐக்கிய அயர்லாந்து'' அரசியல்வாதிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வரமாட்டார்கள் என மிகவும் தற்காப்பாக ஜோன் மேஜர் சிந்தித்திருப்பார். இது உண்மையானால் ''ஐக்கிய அயர்லாந்துக்காரரை'' விட IRA மீது மிகவும் இலகுவாக அழுத்தத்தை பிரயோகிக்கமுடியும் என்ற பிழையானதும் நம்பமுடியாததுமான கணிப்பை எடுத்துள்ளார் இறுதியாக எப்படியிருப்பினும் பேச்சுவார்த்தைக்கு ஒன்றின் பின் ஒன்றாக முன்நிபந்தனைகளை விதித்து கட்டாயப்படுத்தியதன் மூலம் வன்முறைகள் இல்லாமல் சிறிதளவு உரிமைகளையே பெற்றுக்கொள்ள முடியும் என IRA யை நம்பச் செய்துள்ளார் ஜோன் மேஜர்.

மேஜர் தானே தன்னை ஒரு கீழான நிலைக்குத் தள்ளியுள்ளார். இப்பொழுது அவர் என்ன செய்யலாம்? ''சின்பெயின்'' பேச்சுவார்த்தைக்கு வரும்வரை அவர் தொடர்ந்தும் தடுப்பாரானால் சமாதான வாய்ப்புக்கள் இறந்துவிட வாய்ப்புண்டு. இனி அவர் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவரானால் ஒரு குண்டின் மூலம் பேச்சுவார்த்தைக்கு அவரைக் கொண்டுவர முடியும் என்பதையும், அத்துடன் மேலதிகக் குண்டுகள் மேலும் உரிமைகளைப் பெற்றுத் தருமென்ற செய்தியை வெளிப்படுத்தும் ஆபத்தும் உள்ளது. இப்பிரச்சினைகளிலிருந்து அனைவரையும் விடுவிக்க கடந்த கால நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஜோன் மேஜரின் இராஜதந்திர திறமைகளை விட மிக மேம்பட்ட இராஜ தந்திரத்திறமைகள் தேவைப்படுகின்றன.

- பாரதி

அந்தச் செய்தி கேட்பவர் அனைவரும்
அதிர்வர்..

இன்று-
ஒரு பெண் வாழ விரும்புகிறாள்..
"இறைச்சிக்கடைக்காரனின்"
பலிகொள்ளலுக்கு
தலைசாய்க்க மறுத்து
அவள் வாழ விரும்புகிறாள்...

கோபமும்;,ஏளனமும்...
கைகளில் கற்களுமாய்
மக்கள் அவளைக் கொன்று விட
வந்திருக்கின்றனர்.

தனக்கான கடவுளாக
தன் கணவனை அவள்
ஏற்க மறுத்தாள்
............"இறை"நிந்தனை செய்தாள்!

அவள் வாழ விரும்புகிறாள்.

தன் உயிர்ப்புக்காகவும்;,
தன் இருப்புக்காகவும்
அவள் வெளியே வர விரும்பினாள்
பரம்பரைப் பொக்கிஷத்தைப்போல்
அளிக்கப்பட்ட வாழ்க்கையை அவள்
ஏற்க மறுத்தாள்.

மற்றவர்களது கையிலிருக்கும்
அவளது கடிவாளங்களின் பிடியை
தளர்த்தி விட அவள் முயன்றாள்.

ஒரு மனிதப் பிறவியாய்
தனக்கான தெரிவுரிமையை
அவள் வேண்டினாள்
..........எனவே
அவள் வாழ விரும்புகிறாள்.

நூற்றாண்டுகளாய் அணிந்திருக்கின்ற
அடிமை ஆடைகளை
அவள் கழற்றி விட விரும்புகிறாள்.

ஒளியின் ஓர் ஒற்றைக் கதிருக்காய்
அவள்,சடங்குகளையெல்லாம் தாண்டி
ஓடி விட முயல்கிறாள்.

அவள் வாழ விரும்புகிறாள்.

இதையெல்லாம் செவியுறுவோர்
அதிர்வர்:
வார்த்தைகளுக்கப்பால்......!


*அதிய்யா தாவுத்*

தமிழில் - நில்ஷா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சொல்வதைத் வேறு

## பிரபாகரனும் அஷ்ரஃபும் ஆதிக்க வெளிப்பாடு பற்றிய — சில அவதானக் குறிப்புகள்

தமிழர்களுடைய இன்றைய போராட்ட தளங்களிலிருந்து தவிர்க்க முடியாமல் தமிழர்களுடைய பிரதிநிதியாக அல்லது தமிழ் மக்களுடைய தாயகத்திற்காக விட்டுக்கொடாமல் போராடும் ஒரு தலைமையாக புலிகளையும் பிரபாகரனையும் நாம் காணலாம். முஸ்லிம்களைப் பொறுத்தவரை இலங்கையில் உள்ள மொத்த முஸ்லிம் சனத்தொகையில் மூன்றிலொருபகுதியினர் வாழும் வடக்கு -கிழக்கில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம்களின் அரசியல் ரீதியான தலைமையாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைவர் அஷ்ரஃபும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவர்கள்.

இந்த யதார்த்த நிலையில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் அரசியல் நடவடிக்கைகள் இயல்பு வாழ்க்கைகள் சம்பவங்கள் பெருமளவில் புலிகளின் ஊடாகவும் முஸ்லிம் காங்கிரசின் ஊடாகவும் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. வடக்கு - கிழக்கில் தமிழர்களினதும், முஸ்லிகளினதும் உறவுகள் இவ்விரு அமைப்புக்களினதும் செயற்பாடுகளுடன் பிரிக்கவொண்ணா அமைந்திருக்கின்றன.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியத்துடன் வாழ்வதா அல்லது இன முரண்பாடுகளுடன் காலம் தள்ளுவதா என்ற கேள்விக்கான பதிலை தீர்மானிக்கூடிய சக்திகளாக புலிகளும், முஸ்லிம் காங்கிரசும் உள்ளன. கடந்த கால நிகழ்வுகள் இதனை நமக்கு நன்கு உணர்த்துகினறன.

இந் நிலையில் இவ்விரு அமைப்புகளினதும் தலைமகளினதும் போக்குகள்தான் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாழ்வைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கின்றன. இந்த உண்மையின் அடிப்படையில் பொறுப்பு வாய்ந்த அமைப்புக்கள் அல்லது தலைமைகள் என்ற ரீதியில் இவர்கள் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் இயல்பு, சமாதான வாழ்வின் மீது உண்மையான அக்கறை கொண்டிருப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆனால் கடந்த காலங்களிலும் நிகழ்காலத்திலும் துரதிர்ஷ்டவசமாக இந்நிலை காணப்படவில்லை. 1990க்கு முன் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே சிறுசிறு கசப்புகள் இன முரண்பாடுகள் ஏற்பட்டுத்தான் இருந்தன. தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கு முன்னும் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே சிறு சிறு இனக் கலவரங்கள் நடந்தேறி இருக்கின்றன. ஆனால் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் முற்று முழுதாக நீண்ட இடைவெளிக்கு அழைத்துச் சென்ற சம்பவங்கள் 1990 ஜூனுக்குப் பின்னே புலிகளால் திட்டமிட்டு நடாத்தப்பட்டன.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, ஏறாவூர் முஸ்லிம் கிராமத்தின் மீதான படுகொலை, புதுக்குடியிருப்பு பிரயாணிகள் படுகொலை, சாய்ந்தமருது சந்தைப் படுகொலை, அக்கரைப்பற்று படுகொலை, பொத்துவில் பஸ் படுகொலை, வடபகுதி முஸ்லிம்களின் வெளியேற்றம் என்பன குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன. இந்த நிகழ்வுகளினால் கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இரத்த ஆறு ஓடியது. நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இதன் பின்விளைவாய் முஸ்லிம்களால் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். குடிமனைகள் எரிக்கப்பட்டன, சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இச்சம்பவங்கள் தமிழர்களினதும் முஸ்லிகளினதும் உறவில் ஏற்பட்ட கொடூரமிகு வரலாறாக கொள்ளப்பட வேண்டியதாயிற்று. இதற்கான முழுப்பொறுப்பையும் புலிகளும் பிரபாகரனும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

இந்நிலைமை தோன்றுவதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்ட போதிலும் அடிப்படையான காரணிகளாகக் கருதக் கூடியது தனி ஆதிக்கம் என்ற நோக்காகத்தான் இருக்க முடியும். புலிகளின் தனி ஆதிக்க மனோ பாவம் காரணமாக முஸ்லிம்களின் அரசியல் ரீதியான தனி அடையாளத்தை புலிகள் கடந்த காலங்களில் நிராகரித்தே வந்திருக்கிறார்கள். முஸ்லிம்களுடைய தலைமையை மட்டுமல்ல, தமது நலன்களுக்கு எதிராக ஏனைய அனைத்து தமிழ் தலைமைகளையும் புலிகள் நிராகரித்து வந்துள்ளார்கள்.


அவ் ஆதிக்க வெளிப்பாட்டின் காரணமாக வடக்கில் தனி பிரபாகரனின் அரசியல் மட்டுமே இயங்குதல் வேண்டும் என்ற நோக்கில் இன ரீதியான தனித்த அடையாளத்தை வைத்துக் கொண்டு தமது கோட்டைக்குள் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக இயங்குவதை பிரபாகரன் விரும்பவில்லை. இதன் காரணமாக ஆண்டாண்டு காலம் வடக்கில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்பின் ஊடாக புலிகளால் துரத்தியடிக்கப்பட்டனர்.

புலிகளின் இவ் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக, இனப் படுகொலைகளுக்கு எதிராக, வடக்கிலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழ் பத்திரிகையாளர்கள், தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் கலைஞர்கள், தமிழ் கல்வியியலாளர்கள், தமிழ் எழுத்தாளர்கள், என தமிழ்ச் சமூகத்தின் பெரும்பகுதி, முஸ்லிம்களுக்கெதிரான இக்கொடுமைகளை கண்டித்தது. முஸ்லிம் சமூகம் இதற்கெதிராகக் குரல் எழுப்பியதற்கு எந்த வகையிலும் குறைவில்லாத விதத்தில்.

இந்த வகையில் யதார்த்தமான ரீதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ''கிழக்கு மாகாணத்திற்கு நான் தான் ராஜா'' என சூளுரைத்திருக்கும் இத் தருணத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஆண்டாண்டு காலம் வாழ்ந்து வரும் தமிழர்களின் நிலைமையும் ஒட்டு மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் அஷ்ரஃப் ராஜாவுக்கு கீழ் வரப்போகும் தமிழர்களின் நிலைமையுயையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமல்லவா?

**வடக்கிலும் கிழக்கிலும் பிரபாகரனின் தனி ஆதிக்கத்துக்கு எதிராக முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக, தமிழர்களில் பெரும்பான்மையானோர் குரல் எழுப்பிக் கண்டனம் செய்யும் போது, நியாயமாக சிந்திக்கும் ஒவ்வொரு முஸ்லிமும், அஷ்ரஃபின் தனி ஆதிக்க கோட்பாட்டிற்கு எதிராக குரல் எழுப்புவதிலும் கிழக்கு தமிழர்களுக்கு அஷ்ரஃபின் தனி ஆதிக்க மனோபாவத்தின் ஊடாக இழைக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் எதிராக உரத்துப் பேசுவதில் ஒரு தவறும் இருப்பதாக நான் கருதவில்லை.**

**ஒரு மனிதாபிமானியின், ஒரு கலைஞனின் பங்கு ஒரே வகையான இரண்டு வன்முறை வடிவங்களில் ஒன்றைக் கண்டித்துக் கொண்டு மற்றொன்றை மன்னித்தலாக இருக்க முடியாது என்பது என் அபிப்பிராயம்.**



வடக்கில் பிரபாகரன் செய்தது பிழையென்றால் அது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும் என்றால் கிழக்கில் இன்று அஷ்ரஃபின் மனதில் தோன்றியிருக்கும் ''கிழக்கு ராஜா'' தனி ஆதிக்க மனோ பாவமும் பிழையானதுதான். கண்டிக்கப்பட வேண்டியது தான். பிரபாகரன் தனது ஆயுதப் போராட்டத்தின் ஊடாக தான் கொண்டிருக்கும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு தனி ஆதிக்க சிந்தனையில் செயற்படுகிறார் எனில் அதே நேரம் கிழக்கில் அஷ்ரஃப் அவர்கள் தனக்குக் கிடைத்த அரசியல் அதிகாரங்கள் மூலம் கிழக்கிலிருக்கும் தமிழர்களை தனக்குக் கீழ் கொண்டு வர முயன்று கொண்டிருப்பதை நாம் அண்மைக்காலமாகக் கண்டு வருகிறோம். இந்தப் போக்கு எந்த வகையிலும் ஆரோக்கியமானதல்ல!

பிரபாகரன் 1990இல் விட்ட தவறை முஸ்லிம் காங்கிரஸ் இன்று 1996இல் விடுமானால் பிரபாகரனால் அநீதி இழைக்கப்பட்ட சமூகம் தான் முஸ்லிம் சமூகம் என்ற நிலை மாறி - முஸ்லிம்களும் அஷ்ரஃபின் ஊடாக தமிழர்களுக்கு அநீதி இழைத்தவர்கள்தான் என வரலாறு எழுதும்.

அயூரன்

# முஸ்லிம் காங்கிரஸும் சந்தர்ப்பவாத அரசியலும்!

''தமிழ் மக்கள் தமது மௌனத்தின் மூலம் தமிழ்ப்புலிகளை ஆதரிக்கிறார்கள்'' என்பது அரசாங்கத்தின் புதிய கண்டுபிடிப்பு. இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதில் தோல்வியடைந்த அரசாங்கம் இவ்வாறானதொரு நிலைப்பாட்டினை நியாயப்படுத்துகிற போது அரசாங்கத்தின் பிரதான பங்காளியாக வர்ணித்துக்கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸ் கவனமான முறையில் தனது நகர்வுகளை முன்னெடுக்க வேண்டிய தார்மீகக் கடப்பாட்டில் உள்ளது.

இலங்கையில் இரண்டாம் சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் சிங்களப் பேரினவாதத்தாலும், தமிழ் இனவாதத்தாலும் பாதிப்படைந்த மக்களாவர். இவ்வாறான பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டதன் நேரடி வெளிப்பாடாகவே முஸ்லிம் காங்கிரஸிற்கான முஸ்லிம் மக்களது அங்கீகாரம். இவ்வாறன தொரு சூழ்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ், பலமான பணிகளை, பாதிப்படைந்த முஸ்லிம்களுக்காக தொழிற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் அண்மைய நிகழ்வுகள் முஸ்லிம் காங்கிரஸ் தனது பிழையான அணுகுமுறைகளைக் கைவிட்டுள்ளதாகக் காட்டவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களது அரசியல் உரிமைப்போராட்டத்தில் கொண்டுள்ள அக்கறையின்மை ஒரு புறமிருக்க வாழ்க்கைக்காகப் போராடும் சகோதர சிறுபான்மை இனத்து போராட்டம் தொடர்பாக கொண்டுள்ள அணுகுமுறை தமிழ், முஸ்லிம் உறவினைச் சுமுகமாக்க எவ்வகையிலும் உதவப் போவதில்லை.

அரசாங்கம் தனது சமாதானத்தை இராணுவ நடவடிக்கைகள் மூலம் முன்னெடுக்க முடிவு எடுத்ததன் பிரகாரம் வடபகுதியில் 'ரிவிரச' என்ற பொதுமக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையினை முன்னெடுத்தது. அரசாங்கம் இவ் இராணுவ நடவடிக்கை மூலம் எதிர்பார்த்த சகல அபிலாஷைகளும் சாத்தியமாகாத அதே வேளையில் யுத்தத்தின் மூலமான சமாதானம் என்ற அரசின் இலக்கு மரணத்தையும், இரத்தத்தையும் மட்டுமே மிஞ்ச வைத்தது. இவ்வறான தமிழ் மக்களை படுகொலை செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையினை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் கரகோஷம் செய்து ஆதரித்து சிங்களப் பேரினவாதிகளுடன் கைகோர்த்து கொழும்பு நகரெங்கும் வாழ்த்து சுவரொட்டிகளை ஒட்டி பதாகைகளையும் தொங்கவிட்டது.

முஸ்லிம் காங்கிரசின் இந்நடவடிக்கை புத்தி சாதுரியமற்ற அதிகாரத்துக்கு பின் செல்லும் போக்கின் வெளிப்பாடாகவே உள்ளது. சகோதர சிறுபான்மை இனத்துக்கு எதிரான படுகொலை யுத்தத்துக்கு சிறுபான்மை சமூகத்தின் தலைமையொன்று எவ்விதமான யதார்த்த புரிதலுமின்றி செயற்படுவது என்பது முஸ்லிம் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தின் ஒரு தற்கொலைத் தனமான அறிகுறியாகவே காணப்படுகிறது.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தோல்வியடைவதற்கு முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும். தமிழ்ப் புலிகளுடன் அரச பிரதிநிதிகள் பேசிக்கொண்டிருந்தபோது நியாயமான தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமை, புலிகளின் தமிழ் மக்களது நலனை அடிப்படையாகக் கொண்ட நிபந்தனைகளை ஏற்காமை, மூன்றாம் ஈழப்போரை தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பியமை யாவும் அரசின் சமாதான முயற்சி சீர்குலைய உதவிய காரணிகள் சிலவாகும்.

இவ்வாறான அரசியல் பின்னணிகளை முழுமையாக மறந்து விட்டு அல்லது அதிலிருந்து பின்வாங்க சமாதானத்தின் எதிரிகளாக புலிகளை மட்டும் நிரூபிக்க முயலும் முயற்சிகள் முஸ்லிம் காங்கிரசின் சந்தர்ப்பவாத அரசியலை இன்னுமொரு முறை தோலுரித்துக் காட்டப் போதுமானதாகிறது. தமிழ்ப் புலிகள் சமாதானத்தின் மீது உண்மையான ஆர்வத்தை எப்போதும் கொண்டிருப்பார்கள் என்று இங்கு நான் அபிப்பிராயப்படவில்லை. ஆயினும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு அரசு தரப்பினர் பரிசுத்தமானவர்களாக இருந்தால் மட்டுமே எதிர்த்தரப்பு தார்மீகத்தை சந்தேகிக்கலாம்.

ஆயின் அரச அதிகாரத்தைக் கொண்ட தரப்பினர், சமாதானத்தை என்ன விலை கொடுத்தாவது வாங்கப் போவதாக தமிழ் மக்களுக்கு வாக்குறுதி கூறிய தரப்பினர் எவ்வியல்யிலும் சமாதானத்தை வழங்க முன்வராத போது, அல்லது அதற்கான நேர்மையான எந்த முயற்சிகளையும் முன்னெடுக்காது தமிழ்ப் புலிகளை மட்டும் குறைகாண்பதானது பேரினவாத அரசியல் போக்கே தவிர வேறென்ன?

இவ்வாறானதொரு சூழ்நிலையில் புலிகளை மட்டும் முஸ்லிம் காங்கிரஸ் முண்டியடித்துக் கொண்டு எதிர்ப்பது முஸ்லிம்களது பாதுகாப்பில் தளர்வான போக்கையே பிரதிபலிக்கும். தமிழ்ப் புலிகளுக்கு எதிரான முஸ்லிம் காங்கிரசின் வக்கிரத்தனமான கண்டனங்கள் இவ்விரு இன உறவுகளையும் பாதிக்கவே செய்யும். தமிழ் மக்களது அரசியல் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் மிதவாத த.வி.கூ. மற்றும் முன்னாள் இராணுவக் குழுக்கள் காணப்பட்டாலும் இப்பிரிவுகள் தமது அதிகாரங்களைக் காப்பாற்றும் சுத்துமாத்து அரசியலினையே பின்பற்றிவருகின்றன. இக்கட்சிகளால் தமிழ் மக்கள் விமோசனத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது ஒரு அழகான கனவு மட்டுமேயாகும்.

நாம் விரும்புகிறோமோ இல்லையோ தமிழ் மக்கள் நலன்கள் சார்பாக ஓரளவாவது செயற்படும் பிரிவு தமிழ்ப் புலிகள் மட்டுமே யாகும். அரசியலில் இப்பிரிவினர் வன்செயலை பிரயோகிப்பது இலங்கை அரசியல் முறைமையின் விளைவினாலாகும். ஆயினும் புலிகளின் சகல நடவடிக்கைகளையும் மிகச் சரியானதாக யாரும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இவர்களின் பிரதான பிழைகளுள் ஒன்று முஸ்லிம்களை வடபகுதியில் இருந்து விரட்டியமையாகும். (இவ்வாறு விரட்டியது முஸ்லிம்களது நலனில்சாதகத்தையே ஏற்படுத்தியது என்பது முஸ்லிம் காங்கிரஸின் பரிசுத்த தலைவர் அஷ்ரஃபின் நிலைப்பாடு) இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறக்கூடாது. ஆனால் முஸ்லிம் காங்கிரசின் போக்குகள் கடந்த காலத்தையே சாதாரண முஸ்லிம் மக்களுக்கு நினைவூட்டுகின்றன.

அரசு தற்போது படுகொலைத்தனமான யுத்தத்திற்கு மத்தியில் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் தமிழ் மக்களது தேவைகளை, அபிலாஷைகளினை நிறைவு செய்வதற்கு போதுமானதல்ல. இவ்வாறான மிகக் குறைந்த தீர்வுகளைக் கூட சிங்களப் பேரினவாதிகள் பலத்த எதிர்ப்புடன் எதிர்க்கும் ஒரு காலகட்டத்தில், எதிர்க்கட்சி எதிர்ப்பு, சிங்களமும் பௌத்தமும் கோட்பாட்டாளர்களுக்கு அஞ்சி தீர்வுத் திட்டத்தை கொல்லைப் புறமாகத் தூக்கியெறிய அரசு தருணம் பார்க்கையில் இத்தீர்வுத் திட்டத்துக்காக முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்துப் பேசிவருவது இன்னுமொரு நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது. இத்தீர்வுத் திட்டத்தில் முஸ்லிம்களுக்கு அப்படியென்ன இருக்கிறது? முஸ்லிம்களது அபிலாஷைகள் இதிலாவது பூரணமாகியுள்ளதா? உண்மையில் இது முஸ்லிம்களுக்கான அடிமைச்சாசனமேதான். ஏனென்றால் முஸ்லிம்களுக்காக இத்தீர்வுப் பொதி அதிகாரமற்ற உப அலகினை அம்பாறை மாவட்டத்தில் சிபார்சு செய்யவுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் வட, கிழக்கு முஸ்லிம்களது அபிலாஷைகளுக்காக உருவாக்கப்பட்டது. ஆயின் தற்போது அதிகார மற்ற உப அலகுக்காக மட்டும் வக்காலத்து வாங்குவது நியாயமானதா?

சகோதர சிறுபான்மை சமூகத்தில் மிதவாத தலைமைகளது அரசியல் பிழைகளே தீவீரவாத தமிழ் இயக்கங்களுக்கான தோற்றுவாயாகும். முஸ்லிம் காங்கிரஸ் என்பது பாரம்பரிய முஸ்லிம் தலைமைகளின் பிழையான செயற்பாட்டால் உருவான கட்சியாகும். அது போல் முஸ்லிம் காங்கிரசின் தவறான அரசியல் அணுகுமுறைகள் வரலாற்றில் எதை உருவாக்கும் எனக் கூற முடியாது. ஆனால் ஒன்றை மட்டும் கூறலாம். **''ஒவ்வொரு அரசியல் தவறுக்கும் வரலாற்றில் இரத்தத்தால் பதில் கொடுக்க வேண்டியிருக்கும்.''** ●

ஆர்.எம். இம்தியாஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பட்டலந்த இரகசிய முகாம்: அம்பலமாகிற உண்மைகள்!

கடந்த சில தினங்களாக சிங்கள வாசகர்கள் மத்தியில் அவதானத்துக்குட்பட்ட விடயமாக, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அமைந்தது. குறிப்பாக அரசியலமைப்பின் பால் அக்கறைக் கொண்ட இளைஞர்கள் இவ்வியத்தில் அதிக அவதானத்துடன் உள்ளனர்.

அரசு உரக் கூட்டுத்தாபனத்திலும், பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலும் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்ட ஓர் இரகசிய முகாம் இயங்கி வந்ததாக இவ் விசாரணைக் குழு மூலம் அறியக் கிடைக்கின்றது. இந்த முகாம் 1988ஜனவரி முதலாம் திகதியிலிருந்து, 1990டிசம்பர் 31வரையான காலப் பகுதி வரை செயற்பட்டதாகவும் அறியக் கிடைக்கின்றது. இம்முகாமில் வைக்கப்பட்டிருந்த நபர்கள் அசாதாரணமான முறையிலும் அவமானத்துக்கு உரிய முறையிலும் நடாத்தப்பட்டார்களா என்பதும் அவர்கள் சட்டத்தில் கீழ் குற்றவாளிகளாக்கப்பட்டார்களா என்பதையும் கண்டறிவது இவ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட விடயங்களாகும்.

அதைப்போலவே, சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையத்தில் சேவை புரிந்த உப பொலிஸ் அத்தியட்சகர் ரோஹித்த பிரியதர்சன அவர்கள் 1990 பெப். மாதம் 20ம் திகதி அல்லது அதற்கு அண்மிய காலகட்டத்தில் காணாமல் போனமை, பேலியகொடை பொலிசில் சேவை புரிந்த உப பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ஜயசிங்க அவர்கள் 1990 பெப். 24 இல் கைது செய்யப்பட்டமை தடுத்து வைத்திருந்தமை மற்றும் இச்சம்பவங்களோடு தொடர்புடையவர்களை தேடிக் கண்டுபிடித்தல் என்பன இவ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளாக பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் டீ. ஜயவிக்கிரம அவர்கள் அங்கம் வகிக்கும் இவ் ஆலோசனைக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் உயர் நீதிமன்ற நீதியரசரான, நிமல். ஈ.திசநாயக்கா அவர்களாவர். ஆணைக்குழுவின் செயலாளராக எஸ்.ரி. குணவர்தன அவர்கள் கடமையாற்றுகின்றார்.

ஆணைக்குழு முன் சாட்சியமளித்த உப



நன்றி : ராவய

பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ஜயசிங்க அவர்கள் பட்டலந்த இல்லத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை க் குறிப்பிடுகின்றார். சரிநிகர் பத்திரிகையில் சித்திரவதைக் கூடங்கள் தொடர்பான கட்டுரை ஒன்று கடந்த இதழிலும் இவ்விதலிலுமாக பிரசுரிக்கப்படுவதால் அச்சம்பவத்தை சரிநிகர் வாசகர்களுக்கு தருகின்றேன். ஏனெனில் இச்சம்பவம் வாசகர்களின் ஒப்பீட்டுக்கு உதவும் என்று நினைக்கின்றேன்.

உப பொலிஸ் அத்தியட்சகர் வழக்கறிஞர் நெவில் அபேரத்ன அவர்களின் குறுக்கு கேள்விகளுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தார்.

''பட்டலந்த இல்லத்தில் மூன்று பேர் தலைகீழாகக் கட்டிவைக்கப்பட்டிருந்ததை கண்டேன். ஆனால், கட்டிவைக்கப்பட்டிருந்தது துணியினாலா கயிற்றினாலா என்பது எனக்கு ஞாபகம் இல்லை.''

வழக்கறிஞர் அபேவர்தன: பட்டலந்த வீட்டில் 'Ceiling' இல்லாததால் நபர்களைக் கட்டித் தொங்கவிட முடியாது என்று நான் கூறுகிறேன்.

அஜீத்: தாக்குதலை மேற்கொள்ளும் பிரிவினருக்கு 'Ceiling' தேவையில்லை. வீட்டின் தீராந்தியில் ஆணியடித்து கட்டித் தொங்கவிட முடியும். இதனை நான் என் கண்களால் கண்டுள்ளேன்.

செயலாள வழக்கறிஞர்: அப்படியெனில் ''தர்ம சக்கரம்'' செய்யும் முறையும் இருந்ததல்லவா? (தர்ம சக்கரம் போடுதல் என்றால் குறிப்பிட்ட நபரின் கைகளையும் கால்களையும் பின்னால் கட்டிவிட்டு கைகால்களுக்கிடையில் பலகையை வைத்து உருட்டி விட்டு தாக்கும் முறையாகும்)

அஜித்: ''ஆம் பொலிஸில் இருக்கும் சந்தேக நபர்களை சிறையில் இருந்து வெளியே விடுவதில்லை. என்னை கைது செய்து பியகம பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லும் போது, பிரபாகரனை கைது செய்ததைப் போன்ற பதற்ற நிலை காணப்பட்டது''

அதன் பின் அஜித் ஜயசிங்க மேற்கொண்டு பின்வருமாறு கூறினார்.

''விக்கிரமசிங்க அவர்கள் ஜீப் வண்டியில் வருவதைக் கண்டவுடன் நான் எழுந்து நின்றேன். பின்னர் ஜீப் வண்டியிலிருந்து நான் கைந்து பேர் இறங்குவதைக் கண்டேன் அதன்பின் நான் சிறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டுவிட்டேன்.

சிறையில் இருக்கும் போது சிற்சில நிகழ்வுகளைக் கண்டேன். பொலிஸ் விளையாட்டு மைதானத்தை நான் இருக்கும் இடத்திலிருந்து என்னால் பார்க்க முடியாது. அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தது எனக்கு நன்கு கேட்டது. ஜீப்பில் இருந்து இறக்கி வந்த இந்நபர்களை மைதானத்தில் வைத்து எரித்துக் கொன்றார்கள் என்பதை பின்னர் நான் அறிந்து கொண்டேன். அதற்கு அடுத்த நாள் நான் அச்சடலங்களைக் கண்ணுற்றேன்.

இதைத் தவிர பட்டலந்த ஆணைக்குழுவிற்கு முன்னால் வழக்கறிஞர் நெவில் அபேரத்ன அவர்களின் குறுக்கு கேள்விகளுக்கு களுத்துறை வடக்கு பிரதான பொலிஸ் அத்தியட்சகர் விதிசிங்ஹ அவர்கள் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

''பட்டலந்த முகாமில் பொலிஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் இருந்தது எனக்குத் தெரியும்.

ஆனால் அங்கு உரக்கூட்டுத்தாபனத்தினதோ அல்லது இலங்கை மின்சார சபையினதோ சிவில் அதிகாரிகள் இருந்தனரா என்பது எனக்குத் தெரியாது. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பட்டலந்த முகாமில் அவரது வீட்டினுள் இருந்த பொழுது அவரைச் சந்திக் சென்றுள்ளேன்.''

''பட்டலந்த சித்திரவதைக்கூடம் அதற்கென்றே விசேடமாக கட்டப்பட்ட இல்லத்தில் இயங்கவில்லை. வீடமைப்புத் திட்டத்தில் இருந்த, ஏனைய இல்லங்களைப் போன்ற ஓர் இல்லத்திலேயே இக்கூடம் அமைந்திருந்தது. பட்டலந்த சித்திரவதைக் கூடமாக இரண்டு இல்லங்கள் செயல்பட்டன. இவ்விரண்டு இல்லங்களையும் பரிசோதனை செய்யவென மகாநாயக்க அவர்களுடன் நானும் சென்றிருந்தேன்.''

''பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திற்குள் நுழைந்தவுடன் வலது பக்கத்தில் இருக்கும் வீதியில் 3வது அல்லது 4வது வீடு சித்திரவதைக் கூடமாக பயன்படுத்தப்பட்டதோடு, இவ்வீடமைப்புத்திட்டத்திற்குள் சென்றவுடன் நேராக உள்ள வீதியில் ஓர் நீச்சல்தடாகம் ஒன்றும் உள்ளது. அங்கிருந்து வடக்கில் திரும்பி கீழே இறங்கினால் ஆற்றுக்கு அருகில் இன்னொரு சித்திரவதைக்கூடம் இருந்தது. அவ்வீட்டுக்குப் பக்கத்தில் ஜெனரேட்டர் ஒன்றும் இருந்தது.

அரசாங்க வழக்கறிஞர் ஜயமான்ன - அங்கு யாராவது முக்கியமானவர்கள் இருந்தனரா?

''ஆம்! கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கருத்தரங்கு என்பவற்றை நடத்துவதற்கு அவ்வீட்டிற்கு ஒவ்வொரு ஞாயிறன்றும் வருவார்.''

இவை விசாரணைகளில் வெளியானவை. இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் கூற்று ஒன்றையும் ஞாபகப்படுத்துவது முக்கியமானது.

தவக்கால் பற்றிய பிரச்சினையைப் பற்றி குறிப்பிடுகையில் தவக்கால் தொடர்பாக மட்டுமன்றி, பட்டலந்த நிகழ்வுகள் தொடர்பாகவும் ரணில் விக்கிரமசிங்கவுடன் ரூபவாஹினியில் விவாதம் நடாத்த தான் தயார் என்று சந்திரிகா குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் சூழ்நிலையில் ரணில் விவாத்துக்குத் தயாரானால் அதில் வெல்லவது என்பது ரணிலுக்கும் பெரிய சவாலாகவே அமையும் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

அவர் 17 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சி நிருவாகக் காலம் முழுவதும் பல்வேறுபட்ட பதவிகளை வகித்திருப்பதால் அரசியல் குழப்பங்களுக்கு பொறுப்பு வகிக்கித்திருக்க மாட்டார் என மக்கள் மதித்திருந்தனர். ஆனால் பட்டலந்த மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்களுடன் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தொடர்பு கொண்டுள்ளார் என்ற பொ.ஐ.முன்னணியில் குற்றச்சாட்டு காரணமாகவும் விசாரணைக் கமிஷனில் வெளியாகிற உண்மைகள் காரணமாகவும் மிஸ்டர் கிளீன் என்று வர்ணிக்கப்பட்ட ரணிலில் பிரதிமை மக்களிடமிருந்து மறையத் தொடங்கியுள்ளது. இதற்கு முன்னர் கூட ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மனித உரிமைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டு பிரித்தானியாவில் இருந்து வெளியாயிற்று. இக்குற்றச்சாட்டின் பின்புலத்தில் இருந்தது இலங்கையின் பிரித்தானிய தூதுவராக இருந்து இலங்கை அரசாங்கம் மூலம் பிரித்தானியாவின் உதவியோடு நாடுகடத்தப்பட்ட டேவிற் க்ளாட்சன் அவர்கள் தாம் என்று பத்திரிகையில் வெளியாயிற்று. ஆனால் இலங்கையில் எதிர்க்கட்சித்தலைவர் ஒருவர் பகிரங்கமாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது, இப் பட்டலந்த விசாரணைக் குழு மூலமாகும். பட்டலந்த ஜனாதிபதி ஆணைக்குழு அமையக் காரணமாகவிருந்தது, கடந்த காலத்தில் (பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர்) ''ராவய'' பத்திரிகை மூலம் வெளிவந்த குறிப்புகளாலாகும்.

பொ.ஐ.மு. அரசாங்கம் எதிர்க்கட்சித் தலைவரை மடக்கிப்பிடிக்க கனவு காணும் வேளை ஐ.தே.கட்சிக்கு அதிக இலாபம் ஈட்டித்தரக் கூடிய விடயம் மார்ச் 27ம் திகதி நடைபெற்றது.

அது வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகள் கலைக்கப்படுவதற்கு எதிராக வடமத்திய முதலமைச்சர் ஜீ.டீ. மகிந்த சோம மற்றும் சப்பிரகமுவ முதலமைச்சர் எச். எம். ஜயதிலக பொடிநிலமே ஆகியவர்கள் தாக்கல் செய்த வழக்கு வெற்றி அடைந்ததாகும். ஐ.தே.கட்சி, பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் பெற்ற முதலாவது பாரிய வெற்றியாக இது அமைந்தது. இவ்வெற்றிக்கு பிரதான கர்த்தாவாக இருந்தவர் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரும் மற்றும் திறமையான வழக்கறிஞருமான கே.எம். சொக்ஸி அவர்களாகும்.

''ஆளுநர்கள் தம்விருப்பப்படி மாகாண சபைகளைக் கலைக்க முடியாதென்றும் அரசியலமைப்பின், 54 (B) (8) (d), யின் படி ஆளுநர் மாகாண சபைகளை கலைக்கும் போது முதலமைச்சரின் அறிவுரைகளின்படி செயற்படுவது அவர்கள் கடமையாகும்'' என்பதும் தீர்ப்பாக அமைந்தது.

''....அதைப்போலவே மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவு இருக்கும் போது, முதலமைச்சர்களுக்கு அவ் ஆதரவு இருக்கும் வரை அம்மாகாண சபையை கலைக்க ஆளுநர்களால் முடியாதெனவும் தீர்ப்பில் குறிப்பிடப்படுகின்றது.''

பத்துப்பக்கங்களைக் கொண்ட இவ் வழக்குத்தீர்ப்பு தொகுப்பில் மேலும் கூறப்பட்டிருப்பவை பின்வருமாறு.

''....எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாகாண சபையொன்றின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைவதற்கு முன்னர் அதைக் கலைக்கும் வாய்ப்பு ஏற்படின் அது ஆளுநரால் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படவேண்டும். தன் விருப்பப்படி கலைப்பதற்கு அரசியலமைப்பின் 154 (B) 8(C) மற்றும் (D) யின்படி ஆளுநருக்கு எந்தவொரு அதிகாரமும் வழங்கப்படவில்லை.''

அதுபோலவே ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இரண்டு மாகாண சபைகளினதும் ஆளுநர்கள் செயற்பட்டது அரசியலமைப்புக்கு முரணானது என்றும் கூறப்படுகின்றது.

அவ்வாறாறெனின் ஓர் தர்க்கம் ஏற்படுகின்றது மாகாண சபையொன்றை கலைப்பது தொடர்பாக ஜனாதிபதியினால் தனியாகத் தீர்மானம் எடுக்க முடியாது என்பதே அதுவாகும்.

இலங்கையில் முதன் முறையாக மாகாண சபைகள் கலைக்கப்பட்டது. ஐ.தே.க. மூலமாகும். அவர்கள் அக்காலத்தில் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் கீழ் இருந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை தமது அதிகாரத்தை பாவித்ததன் மூலம் கவிழ்த்தனர். ஆனால் அது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய ஈ.பி.ஆர்.எல்.எப். முயற்சிக்கவில்லை. அவர்கள் தம் அதிகாரங்களை கைவிட்டு விட்டு (உண்மையில் புலிகளிடம் கையளித்து விட்டு) இந்தியாவிடம் சரணடைந்தனர். அன்றிலிருந்து இன்று வரை அவர்கள் இந்திய ''செல்லப்பிள்ளை''களாகவே இருந்து வருகின்றனர். வரதராஜப் பெருமாளுக்கு இன்னும் கூட பாதுகாப்பு அளிப்பது இந்திய அரசாங்கமாகும். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பு தனக்கு கிடைத்த அதிகாரத்தை ''பைத்தியக் காரத்தனம் செய்யாமல்'' நல்லறிவுடன் செயற்படுத்தி இருப்பின் புலிகள் நெருக்கடிக்குள் சிக்கியிருப்பர்.

எப்படியாயினும் முதன் முதலாக மாகாண சபையை நிறைவேற்றதிகாரம் மூலம் கலைத்த ஐ.தே.க. தன்னுடைய மாகாண சபைகள் இரண்டினது அதிகாரத்தை காப்பாற்ற நீதிமன்றம் செல்ல வேண்டியதாயிற்று.

சந்தன.

உன்திக்காய் உந்தியெனை
உயிர்பொசுக்கும் அகவிசைகள் ஏதுமற்று,
விழுங்கியுனைப் பசிதீர்க்கும் வெறியொடு -நுரைத்தே
பிரவகிக்கும் உள்ளிழந்து,
ஆழக் குமுறும்,
குமுறிக் கொந்தழிக்கும்
மனமின்று பெற்றேன்.

கவலையுங்
கொடிய சோகமும் நெஞ்சழுத்தப்
பாரமாகி மனமும்,
உயர
உயரவாகிப்பறந்தலையும் நிலையிழந்தேன்.

கனவும்,
பிறகான சொப்பன ஸ்கலிதச்சுகமும் வாய்க்குந்
தூக்கமின்றினிக்கிட்டா.
என்பதையும்,
வாழ்வு
கொடிய தன் கரங்கொண்டென்
முற்றாப்பிஞ்சு விலாவென்புகளை
ஒன்றுள்ஒன்று நெருங்கி நுழைய
நெருக்கத் தொடங்கி விட்டதாயும்,
உணரலுற்றேன்.

சாவரையும் நினைந்தழுது இன்புறப்போதுமான
காதலையும்,
இதுவரைக்கும் பெயரிடப்படாத நேசத்தின்
சிலிர்ப்புகளையும் மேவி,
மேவிப்பின்தள்ளி மேலெழுந்தே கொல்லுஞ்
சோகத்தின் இடையிருந்தும்
நாளையச்சூரியன் விழுத்துமென் நிழலும்
றெக்கை கொள்ளுமென நம்பிப்போய்
விழுகிறேன் பாயில்.

ஒரு வேளை
நாளைய என் கவிதையும்
இவ்வாறே முடியுமோ? என்னவோ!

-றஷ்மி-

960321 இரவு 12.45மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அப்துல் ரகுமான்

சிலர் அவரைக் கிறுக்கு என்றுதான் நினைத்தார்கள். வேறு சிலரோ, அவர் கடவுள் பித்துப் பிடித்து அலையும் ஒரு பக்கிரி என்று கருதினார்கள். ஒரு வகையில் இந்த இரண்டு கணிப்புகளும் சரியாகவே இருக்கக் கூடும். அப்துல் ரகுமானுக்கு கோதுமை போன்ற பொன்நிற மேனி. ஒல்லியான சற்றே உயரமான தோற்றம். அவரை முழு நிர்வாணச் சாமியார் என்று சொல்ல முடியாது. ஒரு பழையபோர்வையை உடல்முழுவதும் சுற்றிக் கொண்டிருப்பார். அப்துல் ரகுமான் எப்போதும் ஓர் ஆன்மிகப் பரவச நிலையிலேயே இருந்தார். அவருக்கு மதபேதம் கிடையாது. கோவிலுக்கும் செல்வார்; பள்ளிவாசலுக்கும் போவார். அவரைப் பொறுத்தவரை எல்லாமே கடவுளின் வீடுகள். சுகேரில் ரயில்வே கூட்ஸ் ஆபீசுக்கு எதிரில் மக்கள் கூடி சுலோகங்களைச் சொல்லிக் கொண்டும், இந்து ஆன்மிகக் கவிஞர் சாமி இயற்றிய பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டும் இருப்பார்கள். அப்துல் ரகுமானும் அவர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு பாடல்களைச் சந்தோஷமாகக் கேட்பார். கூடவே அவ்வப்போது, ''தம்பி அப்துல் ரகுமான்! இந்தப் பாடலெல்லாம் உனக்குப் புரிகிறதா? உண்மை ஒளியை நீ எப்போது தரிசிக்கப் போகிறாய்?'' என்று தமக்குள் முனகிக் கொள்ளவும் செய்தார்.

ஒரு நாள், பாதையில் ஒரு கல் இடறிக் கீழே விழுந்தார் அப்துல் ரகுமான். உடனே அவர், ''தம்பி அப்துல் ரகுமான்! உனக்குத்தான் எவ்வளவு ஆணவமும் அகந்தையும்! வானத்தைப் பார்த்தபடியா நடக்கிறாய்? கீழே பாதையைப் பார்த்துச் சென்றிருந்தால் இடறி நீ விழுந்திருப்பாயா? '' என்றார். சிறிது தூரம் நடந்து சென்ற பின் அவர் மீண்டும் தன்னை கேள்விக்குள்ளாக்கினார்.

''தம்பி அப்துல் ரகுமான்! கல்லை அப்படியே விட்டு விட்டு வந்துவிட்டாயே? பாதையில் செல்லும் வேறு யாரேனும் இடறி விழுந்தால்?'' சற்றுக் கழித்து அவர் மீண்டும் தமக்குள் பேசினார். ''தம்பி அபதுல் ரகுமான். நீ ஒரு நல்ல மனிதனாக இருந்தால், அந்தக் கல்லை எடுத்துத் தூரப் போட்டுவிடுவாய்.'' இப்படிச் சொல்லிவிட்டு, திரும்பிச் சென்று அந்தக் கல்லை எடுத்துப் பாதையின் ஓரத்தில் போட்டார் அப்துல் ரகுமான்.

அப்துல் ரகுமானிடம் தனக்குத் தானே பேசிக்கொள்ளும் இந்த வினோதப் பழக்கம் இருந்தது. ஒரு தத்துவஞானி தன் நண்பரிடம் பேசுவது போல், ஒருவர் மற்றவருடன் பேசுவது போல் ஒரு விதப் பணிவும் எச்சரிக்கையும் கலந்த குரலில், அவர் எப்போதும் தமக்குள் பேசிக்கொள்வார். இப்படித் தமக்குள்பேசிக்கொள்ளும்போது அவர் தம்மை, ''தம்பி அப்துல் ரகுமான்'' என்றே பேச்சைத் துவக்குவார். சிறுசிறுவிடயங்களைக் கூட அவர் தமக்குள் பேசித்தான் முடிவுசெய்வார். யாராவது அவரிடம் சென்று, ''உங்களுக்குப் பசிக்கிறதா? ஏதேனும் சாப்பிட விரும்புகிறீர்களா?'' என்று கேட்டால் கூடப் போதும் உடனே அவர், ''தம்பி அப்துல் ரகுமான், உனக்குப் பசிக்கிறதா, நீ ஏதேனும் சாப்பிட விரும்புகிறாயா என்று இவர் கேட்கிறார்'' என்று தமக்குள் பேச ஆரம்பித்து விடுவார். சில கணங்களுக்குப் பின் அக் கேள்விக்கு ஒரு பாரசீக மொழியைப் பதிலாகவும் சொல்வார்: ''வாழ்வதற்காகச் சாப்பிட வேண்டுமே தவிர, சாப்பிடுவதற்காக வாழக் கூடாது'' இப்படி ஒவ்வொரு முறையும் அவர் தமக்குள் ஆலோசனை செய்த பின்பே எதைப்பற்றியும் பதில் தெரிவிப்பார்.

அப்துல் ரகுமானுக்குப் பாரசீக மொழியில் நல்ல புலமை இருந்தது. ஹாஃபீஸ் மற்றும் சிந்தி கவிஞர்களான சாமி, ஷா அப்துல் லத்திஃப் ஆகியோரது படைப்புக்களில் பெரும்பாலானவை அவருக்கு மனப்பாடம். சிந்தி மொழியின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவரான சாது ஸச்சலின் உண்மையான தாசராக இருந்தார் அப்துல் ரகுமான். அவருக்கு உருது மொழியும் தெரியும். பஞ்சாபிலிருந்து உருதுவில் எழுதிய கடிதங்கள் வரும்போது அப்துல் ரகுமான்தான் அவற்றை உரக்கப் படித்து, விளக்கிச் சொல்வார். அப்துல் ரகுமான் மென்மையும் அமைதியும் மிக்க ஒரு மனிதர் . எதற்கும் ஆசைப்படாதவர். அவரது தேவைகளும் மிகக் குறைவு. உணவுகூட அவருக்கு ஒரு பொருட்டல்ல. தம் போர்வையை மட்டும் எப்போதும் போர்த்துக் கொண்டிருப்பார். எந்தப் பருவமானாலும் சரி. கடுமையான கோடையிலும் கூட அவர் அந்தப் போர்வையை விடமாட்டார். வெயிலின் கடுமை தாளமுடியாமல் ஊரே புழுங்கிக் கொண்டிருக்கும் போது அவர் மட்டும் தம் போர்வையால் உடல் முழுவதும் போர்த்திக்கொண்டு சுற்றிச் சுற்றி வருவார். அந்தப் போர்வைக்குள் இருந்து கொண்டு அவர் கடவுளுடன் தான் ஏதோ சூட்சும சம்பாஷனை நிகழ்த்திக் கொண்டிருக்க வேண்டும்!

ஒரு நாள் அப்பாவி ஒருவன் ஒரு கிரிமினல் வழக்கில் சிக்கிக் கொண்டான். முகமதியச் செல்வந்தர் ஒருவரின் தங்கக் கடிகாரத்தைத் திருடி விட்டான் என்று அவன் மீது குற்றம் சாட்டப்பட்டது. பொலிஸார் அவனைச் சோதனையிட்டபோது, பலர் பார்க்க அவனிடமிருந்து அந்தத் தங்கக் கடிகாரம் கைப்பற்றப்பட்டது. தான் குற்றமற்றவன் என்று நிரூபிக்க முடியாதபடி, சாட்சியங்கள் அவனுக்கு எதிராக அமைந்திருந்தன. அவன் மீது குற்றம் சுமத்திய பணக்காரர், மிகுந்த செல்வாக்கு உடையவர். இது தனக்கு எதிராக சோடிக்கப்பட்ட ஒருவழக்கு என்று அந்த ஏழை வாதாடினான்.


சில தினங்களுக்கு முன்பு ஒரு நாள் அவன் அந்தப் பணக்காரரின் வீட்டு வழியாக போக நேர்ந்தது. அப்போது, தன் குடும்பத்துப் பெண்களைப் பார்த்து அவன் ஆபாசமாகச் சமிக்ஞைகள் செய்தான் என்று எப்படியோ அந்தப் பணக்காரருக்கு தோன்றி விட்டது. உடனே அவர் தம் அடியாட்களை விட்டு, அந்த அப்பாவியை நையப் புடைத்து விட்டார். நல்ல வேளை அந்தச் சமயத்தில் அப்துல் ரகுமான் அந்த வழியாக வந்தார். இல்லாவிட்டால், பணக்காரரின் அடியாட்கள் அவனைக் கொன்றே போட்டிருப்பார்கள். அப்துல் ரகுமான் தலையிட்டு நிலைமையை சரிசெய்த பின்பும் அந்தப் பணக்காரருக்கு அந்த ஏழை மீது இருந்த கோபம் தீரவில்லை. தம் கௌரவத்திற்குக் களங்கம் கற்பித்து விட்ட அவனை உயிரோடு விட்டு வைப்பதே பாவம் என்று நினைத்தார் அவர். அந்தப் பணக்காரர் ரொம்பவும் கௌரவமான மனிதர். எல்லாவற்றையும் விடக் கௌரவம் தானே பெரிது!

அன்றும், அப்துல் ரகுமான் வழக்கம் போல் தமக்குள் ஆலோசனை செய்துதான் நிலைமையைச் சமாளித்தார். ''தம்பி அப்துல் ரகுமான், இந்தப் பணக்காரர் விட்டுக் கொடுக்க மாட்டார். இவருக்குக் கௌரவம் தான் பெரிது. இவருக்கு 35 வயதில் ஒரு சகோதரி இருக்கிறாள். இருந்தாலும் அவளுக்கு ஒரு திருமணம் செய்து வைக்கமாட்டார். அப்படிச் செய்துவிட்டால், அவளும் சொத்தில் பங்கு கேட்பாளே. ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளவேண்டும் அல்லது.....'' சட்டென்று அப்துல் ரகுமானுக்குள் இருந்த தத்துவஞானி அவரைக் கடிந்து கொண்டார்.

''தம்பி அப்துல் ரகுமான், பிறருடைய அந்தரங்க விஷயங்களை இப்படிப் பகிரங்கப் படுத்துவது நல்லதில்லை. அவரிடம் மீண்டும் மன்றாடிப்பார். அதையும் மீறி அவர் பிடிவாதமாக இருந்தால், வேண்டுமானால் நீ எல்லா உண்மைகளையும் சொல்லிவிடலாம்.''

அப்துல் ரகுமான் தம் சுய நல ஆலோசனையை எப்போதும் உரத்த குரலிலேயே செய்வார். எனவே அவரது பேச்சு அங்கு கூடியிருந்த எல்லோருக்கும் ஓரளவு விஷயத்தைத் தெளிவாக்கிற்று. அப்துல் ரகுமான் சொன்னதை அந்தப் பணக்காரரும் கூடச் சங்கோஜத்துடன் கேட்க நேரிட்டது. இப்படியாக அந்த அப்பாவியை மேலும் உதைபடுவதிலிருந்து அப்துல் ரகுமான் காப்பாற்றினார். ஊரில் அந்தப் பணக்காரரின் அற்பத்தனத்தைப் பற்றிய பேச்சு பரவலாக அடிபட்டதோடு, அவருக்கு இருந்த மதிப்பும் குறைந்து போயிற்று. விளைவு இந்தப் பொய் வழக்கு ஜோடனை.

அந்த ஏழை சொன்ன எல்லாவற்றையும் மறுத்தார் பணக்காரர். எதிர்க்கட்சி சாட்சிகள் நான்கு பேர்களில் மூன்று பேரை விலைக்கு வாங்கிவிட்டார். அந்த மூன்று பேரும், தங்களுக்கு எதுவுமே தெரியாது என்று கூறிச் சாட்சி சொல்ல வர மறுத்து விட்டர்கள். நான்காவது சாட்சி அப்துல் ரகுமான். அப்துல் ரகுமான் போன்ற ஒரு பித்துக்குளியைச் சாட்சியாக நீதிமன்றத்துக்கு அழைப்பது எந்தளவுக்கு விவேகமான செயல் என்று பிரதிவாதியின் வக்கீல் யோசித்தார். ஆனால் குற்றம் சாட்டப்பட்ட அந்த ஆள் அப்துல் ரகுமான் மீது முழு நம்பிக்கை கொண்டிருந்தான். கடவுள் பற்று மிக்க அப்துல் ரகுமான் நிச்சயம் உண்மையைச் சொல்வார் என்று நம்பினான்.




அபதுல ரகுமானுக்குக் கோட்டிலிருந்து சம்மன் வந்த போது அவர் சொன்னார். ''தம்பி அப்துல் ரகுமான் உனக்கு கோர்ட்டிலிருந்து சம்மன் வந்துள்ளது. நீதி வழங்கப்படும் அந்த இடம் மிகுந்த மரியாதைக்குரியது.'' இதன் பொருள்: அப்துல் ர்குமான் நிர்வாணமாகச் செல்லமுடியாது என்பது. கோர்ட்டுக்குச் செல்வதற்கென்றே எப்படியோ அப்துல் ரகுமான் ஒரு ஜதை பூடஸைச் சம்பாதித்துக் கொண்டார். பூட்ஸ் அணிந்து கனவான் போல் காட்சி அளிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. நீதிமன்றத்திற்குரிய மரியாதையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக.

வழக்கின் ஒவ்வொரு விசாரணையின் போதும், அப்துல் ரகுமான் தம் போர்வையை அணிந்து கொண்டு, ஸிந்தி கிராம வாசிகளின் வழக்கப்படி தம் பூட்ஸையும் கையில் சுமந்தபடி நீதிமன்றத்துக்குச் சென்று வந்தார். சாட்சி சொல்ல அழைக்கப்பட்ட போது, அப்துல் ரகுமான் மிகுந்த சிரத்தையுடன் தம் பூட்ஸை அணிந்து கொண்டார். தம் போர்வையையும் நீளவாக்கில் மடித்துக் கழுத்தைச் சுற்றி அங்கவஸ்திரம் போல் போட்டுக் கொண்டார். அவர் விசாரணைக் கூடத்தில் நுழைந்தது தான் தாதம். நீதிமன்ற சிப்பந்தி ஒருவன் பூட்ஸை வெளியே கழற்றி வைத்துவிட்டு வரும்படி அவரிடம் கூறினான்.

அப்துல் ரகுமான் தமக்குள் பேசினார். '' தம்பி அப்துல் ரகுமான், கோர்ட் பியூன் உன்னிடம் பூட்ஸை வெளியே கழற்றி வைத்துவிட்டு, மரியாதையுடன் உள்ளே வரச் சொல்கிறான். அவனிடம் சொல், கோட்டில் அணிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே தான் இந்த பூட்ஸையே நீ வாங்கினாய் என்று.''

அப்துல் ரகுமான் தன் உள்மனம் கூறியபடி செயல்பட்டார். அவர் பூட்ஸ் அணிந்தபடியே உள்ளே நுழைந்தார். அவரைப்பார்த்ததும் நீதிபதிக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை. அப்துல் ரகுமான் சாட்சிக் கூண்டில் ஏறியதும், நீதிபதி அவரிடம், ஏன் அவர் தம் போர்வையை அப்படிக் கழுத்தைச் சுற்றி அணிந்து கொண்டிருந்தார் என்று கேட்டார்.

அப்துல் ரகுமான் தம் வழக்கப்படி நீதிபதி கேட்ட கேள்வியைத் தமக்குள் கேட்டுக் கொண்டார். ''தம்பி அப்துல் ரகுமான், நீ இப்போது நீதிமன்றத்தில் இருக்கிறாய். எனவே நிதானமாகவும் ஜாக்கிரதையுடனும் பதில் சொல். மாஜிஸ்திரேட் ஐயாவிடம் சொல். பொதுவாக இந்துக்கள் முக்கிய நிகழ்ச்சியின் போது இப்பிடிக் கழுத்தைச் சுற்றி ஒரு மேல் துண்டையோ அங்கவஸ்திரத்தையோ அணிந்து கொள்வார்கள் என்று. '' தன் உள் மனத்திலிருந்து கிடைத்த பதிலை நீதிபதியிடம் தெரிவித்தார் அப்துல் ரகுமான்.

நீதிமன்றத்தின் இளநிலை அதிகாரி ஒருவன், அப்துல் ரகுமானுக்குச் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளச் செய்தான். அப்துல் ரகுமான் இதையும் தம் வழக்கமான பாணியில் செய்து முடித்தார்.

''உங்கள் பெயர்?''

''தம்பி அப்துல் ரகுமான். இந்த அதிகாரி உன் பெயர் என்ன என்று கேட்கிறார்.'' அப்துல் ரகுமான், தமக்குள் பேசிப் பதிலைப் பெற்று பின் ''என் பெயர் அப்துல் ரகுமான்'' என்று கூறினார்.

கோர்ட்டில் சிரிப்பு வெடித்தது. அங்கு நடந்தவற்றை முதலில் ரசித்த நீதிபதி பின்பு பொறுமை இழந்து எரிச்சலடைந்தார். அப்படிப் பேசுவதுதான் அப்துல் ரகுமானின் வழக்கம் என்று நீதிபதிக்கு விளக்கினார் ஒரு வக்கீல்.

''உங்கள் மதம்?''

அப்துல் ரகுமான் கண்களை மூடித் தமக்குள் ஆழ்ந்து போனார். உள் மனசு அவரை எச்சரித்தது. ''தம்பி அப்துல் ரகுமான். நீ உண்மையே பேசுவதென்று சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறாய். இந்தக் கேள்வி விபரீதமானது. நீ முஸ்லிம் என்று சொன்னால் இந்துக்கள் ஆட்சேபிப்பார்கள். நீ இந்து என்று சொன்னாலோ முஸ்லிம்கள் முகம் சுளிப்பார்கள். தம்பி அப்துல் ரகுமான், குழப்பமடையாதே. சாது ஸச்சலின் கவிதை வரிகளைக் கூறி இந்தச் சிக்கலிருந்து விடுபட்டுக்கொள்வாயாக''.

***''இந்து அல்ல நான்***
***முஸ்லிமும் அல்ல***
***நான் நான் தான்.''***

அப்துல் ரகுமானின் இந்தப் பதில் கோர்ட்டின் ஆவணங்களில் பதிவு செய்து கொளளப் போதுமானதுதானா என்று அதிகாரிக்குக் குழப்பமாக இருந்தது. அவன் ஒன்றும் புரியாமல் நீதிபதி பக்கம் திரும்பினான்.

''இவனை முஸ்லிம் என்று பதிந்து கொள்'' நீதிபதி உத்தரவிட்டார்.

''உங்கள் வயது?''

''தம்பி அப்துல் ரகுமான், சொல் அந்த அதிகாரியிடம், முந்தைய கேள்விக்குப் பதில் சொன்ன நீதிபதியிடமே இந்தக் கேள்விக்கும் பதில் பெற்றுக் கொள் என்று.''

நீதிபதி கடும் கோபமடைந்தார். ''அடேய் மசயா! உன் சாட்சியத்தை நீ ஒழுங்காகத் தரப்போகிறாயா? இல்லையா? நீ ஒரு நீதிமன்றத்திற்கு முன்னால் நிற்கிறாய் என்பதை மறந்து விடாதே''

அப்துல் ர்குமானின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அப்துல் ரகுமான் உன்னை நீதிபதி மசயன் என்று சொல்கிறார். மசயன் என்றால் என்ன அர்த்தம் என்று அவரிடம் கேள் ''. அப்துல் ரகுமான்இப்படித் தனக்குள் பேசிவிட்டு நீதிபதியிடம் நேரடியாகப் பேசத் துவங்கும் முன் அவர் கத்தினார். ''அடேய் முட்டாளே, மசயன் என்றால் தற்குறி என்று அர்த்தம்.''

''கேட்டாயா தம்பி அப்துல் ரகுமான், மசயன் என்றால் தற்குறி என்று நீதிபதி சொல்கிறார். இதன்படி பார்த்தால் நிச்சயம் நீ மசயன் அல்ல. உனக்கு ஐந்து மொழிகள் தெரியும். ஸிந்தி, பாரசீகம், உர்து, ஸம்ஸ்கிருதம் மற்றும் இந்தி. கனம் நீதிபதி அவர்களிடம் கேள், அவருக்கு எத்தனை மொழிகள் தெரியும் என்று.''

அப்துல் ரகுமான் நீதிபதியிடம் பேசத் திரும்பினார். ஆனால் அந்தக் கனவான் அவரை அலட்சியப்படுத்திப் புறக்கணித்து விட்டு, ''மசயன் என்றால் ஆங்கிலம் தெரியாதவனே மசயன்,'' என்றார், குரலில் வெற்றிப் பரவசம் ததும்ப.

நீதிமன்றத்தில் சலசலப்பும் முணுமுணுப்பும் கேட்டது.

அப்துல் ரகுமான் முன்பை விடவும் பெரிதாகப் புன்னகை புரிந்தார். மெல்லிய ஆனால் எல்லோருக்கும் கேட்கும்படியான குரலில் அவர் சொன்னார். ''தம்பி அப்துல் ரகுமான், கனம் நீதிபதி ஆங்கிலம் தெரியாதவர்களை மசயன் என்று சொல்கிறார். கனம் நீதிபதிக்கு ஆங்கிலம் தெரிந்தாலும், அவர் கால்-நடை பவுண்டின் காப்பாளராக இருந்த டோப்பன் மல்லின் மகன்தான். அவரிடம் கேள். ஆங்கிலம் தெரியாத அவரது பெற்றோர்கள், முன்னோர்கள் எல்லோரும் மசயர்கள்தானா என்று. அப்படியானால் அவரே கூட ஒரு மசயன் மகன்தானே...?''

''திமிர் பிடித்த ராஸ்கலே நிறுத்தடா, உன் தர்க்கத்தை'', நீதிபதி கோபத்தில் கர்ஜித்தார். நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக உனக்கு தண்டனை விதிக்க முடியும் என்னால்!''

பின்னர், அப்துல் ரகுமான் தமது சாட்சியத்தை எழுத்து மூலம் தரவேண்டும் என்று நீதிபதி உத்தரவு போட்டார்.

அப்துல் ரகுமான் சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கித் தமக்குக் காட்டப்பட்ட மேஜையருகே சென்று இவ்வாறு எழுதினார்.

'கனம் நீதிபதி அவர்களே, தம்பி அப்துல் ரகுமான் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்தைப் புரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியொரு குற்றத்தை யாராவது புரிந்தார்கள் என்று சொல்ல வேண்டுமானால், அக்குற்றத்தைச் செய்தது நீங்கள் தான். இன்று ஒரு நாளிலேயே நீங்கள் எத்தனை சாட்சிகளை அவமானப்படுத்தினீர்கள்? ஆனால் உங்கள் தரக்குறைவான பேச்சு, அப்துல் ரகுமானை ஒன்றும் செய்து விடாது. ஏன் அவரது போர்வையின் விளிம்பைக் கூட அதனால் தீண்ட முடியாது.

'கனம் நீதிபதி அவர்களே, உங்களுக்கு ஒரு சிறு அறிவுரை. மற்றவர்களுடைய விவகாரங்களில் தீர்ப்புச் சொல்லும் ஸ்தானத்தில் நீங்கள் இருந்தாலும், நீங்கள் யாருடைய எஜமானரும் அல்ல என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இன்னும் சொல்லப் போனால் நீங்கள் அவர்களுடைய ஊழியர். சாட்சிகளாகிய நாங்கள் நீதிமன்றத்திற்குத் தானாக வரவில்லை. எங்களுக்குச் சம்மன் வந்தபின் தான் வருகிறோம். அதுவும் சரியான நீதிவழங்க உங்களுக்கு உதவிட! ஆனால் நீங்களோ எங்களை அவமானப்படுத்துகிறீர்கள். இப்படிச் செய்தால் சாட்சி சொல்ல உங்கள் நீதிமன்றத்திற்கு யார் வருவார்கள்? நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக உங்களையே ஏன் பதவி நீக்கம் செய்யக்கூடாது? தம்பி அப்துல் ரகுமான், தான் எடுத்துக் கொண்ட பிரமாணத்தின் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறார். முழு உண்மையைத் தான் சொல்லியிருக்கிறார். உண்மையே தவிர வேறு எதையும் அல்ல, எனவே கடவுளே அவரைக் காப்பாற்று!

ஒப்பம்

தம்பி அப்துல் ரகுமான்''

**அப்துல் ரகுமான் என்ற இச் சிந்தி மொழிச் சிறுகதை தற்கால இந்தியச் சிறுகதைகள் என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. கதாசிரியர் அமர்லால் ஹிங்கோரானி (1907 -1957) புகழ் பெற்ற சிந்தி சிறுகதை எழுத்தாளர். 'ராமும் ரகீமும்', கோலி ஜோ- குணா, பாவோ, ஹீபி ரன் ஜ்கீ சந்தி ராம்வ் ஆகியவை இவரது தலை சிறந்த படைப்புகளாகும். இதனை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் திலீப்குமார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே...3

# குழந்தைகளுடன் உரையாடுவது எப்படி?

கடந்த இதழில் வெளியான இக்கட்டுரைத் தொடரில் அதன் இறுதிப் பகுதியில் ஒரு பந்தி தவறுதலாக விடுபட்டுவிட்டது. அப்பந்தியுடன் இத்தொடர் இங்கு ஆரம்பமாகின்றது.

தலைவர்: இப்போது ஒரு மூன்றாவது வகை கணவனைப்பற்றி சொல்லப்போகிறேன். எரிந்து போன சாப்பாட்டை பார்த்து விட்டு அவர் மிகவும் அமைதியாக சொல்கிறார்: 'பார் அன்பே... நான் எப்படி சமைப்பது என்று உனக்கு காட்டித் தருகிறேன்'

திருமதி-அ: இவன் முதலாமவனை விட மோசமானவன். இவன் எங்களை முட்டாளாக்க நினைக்கிறான்.

தலைவர்: இப்போது இந்த மூன்று அணுகுமுறைகளும் எப்படி நாம் குழந்தைகளை அணுகுவதில் பயன்படுகிறது என்று கவனிப்போம்.

திருமதி அ: எனக்கு நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று தெரிகிறது. நான் எப்போதும் எனது மகனுக்கு இப்படிச் சொல்லுவேன் 'இதையெல்லாம் தெரிந்துவைத்திருக்க வேண்டிய வயது உனக்கு வந்து விட்டது! உனக்கு இதை செய்யத் தெரிய வேண்டும்' என்று சொல்வேன். இது அவனுக்கு கோபத்தை ஊட்டுகிறது. இது வழமையாக நடக்கிறது.

திருமதி ஆ: நான் எப்போதும் மகனுக்கு சொல்லுவேன். 'பொறு' மகன், இதை எப்படி செய்வது என்று நான் சொல்லித்தருகிறேன்.

திருமதி இ: நான் பெரும்பாலும் விமர்சிக்கப் பட்டுப்பட்டு பழகி அதுவே எனது இயல்பாகிவிட்டது. எனது அம்மா எனக்கு எதிராக சொன்ன அதே வார்த்தைகளை நான் எனது பிள்ளைகட்கும் சொல்கிறேன். இதற்காக எனது அம்மாவை நான் வெறுக்கிறேன். நான் ஒரு போதும் எதையும் சரியாக செய்ததில்லை. அம்மாதான் என்னை செய்யவைத்தார்.

தலைவர்: இப்போது அதே வேலையை உங்கள் மகளுக்கு செய்கிறீர்கள்.

திருமதி இ: ஆம் ஆனால் எனக்கு இது பிடிக்கவில்லை. நான் அப்படிச் செய்யும் போது என்னையே எனக்குப் பிடிக்கவில்லை.

தலைவர்: அதாவது உங்கள் குழந்தைகளுடன் பேச புதிய வழிகளை தேடுகிறீர்கள்.

திருமதி இ: ஆம். நிச்சயமாக.

தலைவர்: இந்த எரிந்த சாப்பாட்டு கதையிலிருந்து நாம் என்னென்னத்தைக் கற்றுக்கொள்ளலாம் என்று பார்ப்போம். நாம் விரும்புவர்களது உணர்வுகளை மாற்றுவதில் உதவியது என்ன?

திருமதி ஆ: அதாவது யாராவது உங்களை புரிந்து கொள்கிறார்கள் என்பது.

திருமதி அ: அதாவது உங்களை எப்படி திருத்திக் கொள்வது என்று ஆலோசனை கூறாமல், புரிந்து கொள்வது.

இந்த உதாரணம் சொற்களின் பலத்தை உணர்த்துகிறது. சந்தோசத்தையோ, சச்சரவையோ அவை ஏற்படுத்தக் கூடியன. சக்தி வாய்ந்தவை என்பதை இதன்மூலம் நாம் காணலாம். இந்தக் கதையின் அடிநாதம் என்னவென்றால் எமது எதிர்வினைகள் (சொற்களும், உணர்வுகளும்) ஒரு எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்தவும் எமது இல்லத்தில் அமைதியை உருவாக்கவும் வல்லன என்பதே!

### சம்பவங்களிலிருந்து உறவுக்கு:

ஒரு குழந்தை ஒரு சம்பவம் பற்றி சொல்லும் போது, அல்லது கேட்கும் போது, அனேகமான சந்தர்ப்பங்களில் அச்சம்பவங்களைவிட, அச்சம்பவங்களின் மூலமாக மறைமுகமாக எதிர்பார்க்கப்படும் உறவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே சிறப்பானதாக இருக்கிறது. இந்த உதாணரத்தை பாருங்கள்:

ஃபுளோரா தனது சகோதரனை விட தனக்கு குறைவான பரிசுப்பொருட்களே கிடைக்கின்றன என்று தாயாரிடம் குறைப்பட்டுக்கொண்டாள். அவளுக்கு வயது ஆறு. தாயார் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை. அவளது சகோதரன் வயது கூடியவன் என்பதால் அதிகளவு பரிசைப் பெறும் தகுதி அவனுக்கு உண்டு என்று குறிப்பிடவும் இல்லை. அது மட்டுமல்ல, இந்தப் பிழையை தான் திருத்தி விடப்போவதாக கூறவும் இல்லை. குழந்தைகள் பரிசுப் பொருட்களின் அளவையும் தொகையையும் விட பெற்றோர்களுடனான தமது உறவின் ஆழம் குறித்தே அதிகம் அக்கறையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அவள் ''உங்களுக்கும் நிறைய பரிசுகள் தேவையா?'' என்று கேட்டாள். அதற்கு மேல் எதுவும் பேசாமல் ஃபுளோராவை அணைத்துக் கொண்டாள். மகளோ ஒருவகை ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இந்தச் செயலை ஏற்றுக் கொண்டாள். நீண்ட முடிவேயற்ற விவாதங்களுக்கு இட்டுச் சென்றிருக்கக் கூடிய ஒரு உரையாடல் எவ்வளவு இலகுவாக முடிந்து விட்டது?

### சம்பவங்களிலிருந்து உணர்வுகட்கு:

ஒரு குழந்தை ஒரு சம்பவம் பற்றிச் சொல்லும் போது அந்தச் சம்பவத்தை விட அச்சம்பவத்தை சூழவுள்ள உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது சில வேளைகளில் மிகவும் பயன்மிக்கதாக இருக்கும்.

ஏழு வயதான குளோரியா வீட்டுக்கு மிகுந்த கவலையுடன் வந்தாள். தனது சிநேகிதி டோரி மழை நீர் நிரம்பிய பீலியினுள் பையன்களால் எவ்வாறு தள்ளி வீழ்த்தப்பட்டாள் என்று தனது தாயாரிடம் அவள் தெரிவித்தாள். அது தொடர்பான மேலதிக விபரங்களை கேட்பதற்கு பதில் தாயார் தனது மகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இப்படித் தெரிவித்தாள்:

''அது உங்களை நன்றாகப் பாதித்து விட்டது என்ன?''

''அதைச் செய்த பையன்கள் மீது உங்களுக்கு சரியான கோபமாக இருக்கும் என்ன?''

''இன்னமும் அவர்கள் மீது உங்களுக்கு கோபமாக இருக்கும் என்ன''

இந்த வசனங்கள் ஒவ்வொன்றிற்கும் குளோரியா 'ஆம்','ஆம்' என்று மனக் கிளர்ச்சியுடன் பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

''அவர்கள் இதே வேலையை உங்களுக்கும் செய்வார்களோ என்று உங்களுக்கு பயமாக இருந்ததா?''

குளோரியா உறுதியாக சொன்னாள்:

''செய்யட்டும் பார்ப்பம். அவையளையும் சேர்த்து இழுத்துக் கொண்டுதான் நான் விழுவேன். அது அவையளையும் தோய வைத்து விடும்'' அவள் சொல்லும் போதே பலமாக சிரித்தாள். அவளது மனதில் அவர்களை இழுத்துக்கொண்டு தான் விழுவதும் தண்ணீரில் தொப்பென சத்தம் எழுவதும் படமாக ஓடியிருக்கவேண்டும். தேவையற்ற புத்திமதிகளுக்கும், பாதுகாப்பு அறிவுரைகளுக்கும் இட்டுச் சென்றிருக்கக் கூடிய ஒரு உரையாடல் இவ்வாறு சந்தோஷமாக முடிவுற்றது.

ஒரு குழந்தை தனது நண்பன் அல்லது ஆசிரியர் பற்றிய குற்றச்சாட்டுக்களுடன் வீட்டுக்கு வரும் போது, அதன் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது முக்கியமாகும். தகவல்களை விசாரித்து சம்பவத்தை புரிந்து கொள்ள முயல்வது ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல.

பத்துவயது ஹெரால்ட் சிணுங்கிக் கொண்டு குற்றம் சாட்டியபடியே வீட்டுக்கு வந்தான்.

ஹெரால்ட்: என்ன வாழ்க்கை இது! வீட்டு வேலையை மறந்து போனேன் என்று சொன்னதற்காக ரீச்சர் என்னை ஒரு பொய்யன் என்று சொல்லிவிட்டார். அவர் என்னை திட்டினார். கடவுளே! திட்டினது மட்டுமல்லாமல், உங்களுக்கு ஒரு கடிதம் எழுதப் போவதாகவும் சொன்னார்.

தாய்: அப்ப உங்களுக்கு இன்றைய நாள் ஒரு கஷ்டமான நாளாகப் போய்விட்டது என்ன?

ஹெரால்ட்: அப்பிடிச் சொல்லுங்கோ அம்மா.

தாய்: எல்லாப் பிள்ளைகளுக்கும் முன்னால் பொய்யன் என்று திட்டுவாங்கியது ரொம்பவும் வெட்கமானதாக இருந்திருக்கும்தான்.

ஹெரால்ட்: ஓம்..ஓம்... சரியான வெட்கம்.

தாய்: அவளுக்கு ஏதாவது நடக்கவேண்டும் என்று நீங்கள் உங்களுக்குள் நினைத்திருப்பீர்கள் என்ன?

ஹெரால்ட். ஓம். நினைத்தேன்... ஆனால் அது எப்படி உங்களுக்குத் தெரியும்?

தாய்: அப்பிடித்தான் நாங்கள் எல்லோரும் எங்களை யாராவது கவலைப்படுத்தும் போது நினைக்கிறோம்.

ஹெரால்ட். அது ஒரு வகையான அமைதிக்காக....

### பொதுவானதிலிருந்து குறிப்பானதற்கு



ஆங்கில மூலம்:டொக்டர் ஹெய்ம்.ஜி.ஜினோல்ட்
தமிழில்:அருண்

ஒரு குழந்தை தன்னைப்பற்றி ஒரு அபிப்பிராயம் சொல்லும் போது, அதை ஒப்புக் கொண்டோ, மறுதலித்தோ பேசுவதை விட, குழந்தை தனது எதிர்பார்ப்புக்கு மேலாகவே அதை விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் விபரமாக பேசுவது பயனுள்ளதாக இருக்கும். உதாரணமாக ஒரு குழந்தை தனது ''கணக்குப் பாடத்தில் நான் சரியான வீக்'' என்று கூறும் போது, ''ஓம்... உனக்கு கணக்கு என்றால் கஷ்டம் தான் என்று சொல்வதோ, அதன் அபிப்பிராயத்தை மறுதலிப்பதோ, அல்லது கொஞ்சம் கவனமாக படித்தால் உன்னால் நன்றாக செய்ய முடியும் என்பன போன்ற வெற்று ஆலோசனைகளை வழங்குவதோ எந்தப் பயனுமற்றவை. இத்தகைய 'உதவிகள்' குழந்தையின் சுய மரியாதையைப் பாதிப்பதுடன், இத்தகைய உடனடி அறிவுறுத்தல்கள் குழந்தையின் மனவுறுதியையும் குறைக்கும்.

''நான் கணக்குப்பாடத்தில் சரியான வீக்'' என்ற கூற்றை புரிந்துணர்வுடனும் ஆதரவுடனும் எதிர்கொள்ள முடியும். கீழ்வரும் ஏதாவதொரு வசனம் இதைச் செய்யும்:

''கணக்கு ஒன்றும் லேசான பாடம் அல்ல''

''சில கணக்குகள் செய்யக் கஷ்டமானவை தான்''

''ஆசிரியர் அதை இலகுபடுத்துவதில்லை. அவர் விமர்சனங்களிலேயே கவனத்தைச் செலுத்திவிடுகிறார்''

''அவர் உன்னை நீயே ஒரு முட்டாள் என்று எண்ணவைப்பார்''

''சோதனை இதைவிட மோசமாக இருக்கும்''

''ஃபெயில் ஆகுவதைப்பற்றி அதிகமாக கவலைப்படுகிறாய் போல''

''நாங்கள் என்ன நினைப்போமோ என்று கவலைப்படுகிறாய் போல''

''எங்களுக்கு ஏமாற்றமாய் போய்விடும் என்று பயப்படுகிறாய் போல''

''எங்களுக்குத் தெரியும் சில பாடங்கள் கஷ்டமானவைதான் என்று''

''எங்களுக்கு நம்பிக்கை இருக்கு; நீ உனக்கு ஏலுமானளவுக்கு செய்வாய் என்று''

ஒரு பன்னிரண்டு வயது சிறுவன், தான் பரீட்சையில் தோல்வியுற்ற பெறுபேற்று அறிக்கை (Report) யுடன் வீட்டுக்கு வந்த போது, இம்மாதிரியான புரிந்துணர்வுடன் தகப்பன் தன்னுடன் பேசியதைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'அந்தக் கணம் நான் செத்தே போய்விட்டேன்' என்றான். அவனது உள்மனதின் பதிவு இவ்வாறு இருந்தது. 'நான் எப்படியாவது எனது அப்பாவின் நம்பிக்கைக்கு ஏற்றவிதத்தில் நடக்க வேண்டும்' இருந்திருந்தாற் போல் அனேகமாக எல்லாப் பெற்றோர்களும் தமது பிள்ளைகள் இவ்வாறு சொல்வதைக் கேட்டிருப்பார்கள்: 'நான் ஒரு முட்டாள்'. தமது மகன் அல்லது மகள் ஒரு போதும் முட்டாளாக இருக்க முடியாது என்று கருதும் பெற்றோர்கள், தமது பிள்ளை முட்டாள் அல்ல புத்திசாலி என்று ஏற்றுக்கொள்ள வைக்கப் பிரயாசைப் படுவார்கள். இந்த உரையாடலைப் பாருங்கள்:

மகன்: நான் ஒரு முட்டாள்.

தகப்பன்: இல்லை, நீ ஒரு முட்டாள் அல்ல.

மகன்: இல்லை,நான் முட்டாள் தான்.

தகப்பன்: இல்லை. நீ முட்டாள் அல்ல. யோசித்துப்பார். முகாமில் நீ எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாய்? அந்த முகாம் பொறுப்பாளர் உங்களை சிறந்த புத்திசாலியாகவே கருதினார்.

மகன்: உங்களுக்கு எப்படி அவர் கருத்துத் தெரியும்.

தகப்பன்: அவர் எனக்குச் சொன்னார்.

மகன்: அப்படியானால் ஏன் அவர் எப்போதும் என்னை முட்டாள் என்றே திட்டிக் கொண்டிருந்தார்.

தக்பபன்: அவர் வேடிக்கைக்கு சொல்லியிருப்பார்.

மகன்: நான் முட்டாள்தான். எனக்கு அது தெரியும். இதோ எனது பாடசாலை பெறுபேறுகளைப் பாருங்கள்

தகப்பன்: நீ கொஞ்சம் கஷ்டப்பட்டு உழைத்தால் சரி.

மகன்: நான் நன்றாகக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன். ஆனாலும் எந்தப் பயனும் இல்லை. எனக்கு மூளையே இல்லை.

தகப்பன்: நீ புத்திசாலிதான் எனக்குத் தெரியும்.

மகன்: இல்லை. நான் முட்டாள்தான். எனக்குத் தெரியும்.

தகப்பன்: (பலமாக) நீ முட்டாள் அல்ல.

மகன்: நான் முட்டாள்.

தகப்பன்: இல்லை. இல்லை.இல்லை......

ஒரு பிள்ளை தன்னை முட்டாள் என்றோ அசிங்கமானவன் என்றோ குறிப்பிடும் போது எமக்கு அதன் சுய மதிப்பீட்டை உடனடியாக மாற்றுவதற்காக சொல்லவோ, செயலாற்றவோ ஒன்றுமே இல்லை. தன்னைப்பற்றிய ஒருவரது சுய மதிப்பீட்டை மாற்றுவதற்கான நேரடி முயற்சிகளை எவருமே எதிர்பார்க்கத்தான் செய்வார்கள். ஒரு சிறுவன் சொன்னான், ''அப்பா உங்கள் நல்லெண்ணம் எனக்குப் புரிகிறது. ஆனாலும் நீங்கள் சொல்லும் அளவுக்கு நான் ஒன்றும் புத்திசாலியல்ல''.

ஒரு பிள்ளை தன்னைப்பற்றி எதிர்மறையான ஒரு பார்வையை கொண்டிருக்கும் போது எமது மறுப்போ, எதிர்ப்போ, எந்தப் பயனும் தரப்போவதில்லை. அவர்கள் வெறுமனே தமது அபிப்பிராயத்தை உறுதியாக வெளிப்படுத்துகிறார்கள் என்ப்தால், நாம் செய்யக் கூடிய பெரிய உதவி அவர்களை நாம் புரிந்து கொள்வதாக காட்டுவது மட்டுமே, அவர்களது பொதுவான உணர்வை மட்டும் அல்ல, அவற்றின் தாக்கங்களையும் நாம் புரிந்து கொள்வதாக காட்டுவது மட்டுமே. பாருங்கள்:

மகன்: நான் ஒரு முடடாள்:

தகப்பன்: (மிகுந்த அக்கறையுடன்) நீ உண்மையில் அப்படித்தான் நினைக்கிறாயா? உன்னை கெட்டிக்காரன் என்று நீ நினைக்கவில்லையா.

மகன்: இல்லை.

தகப்பன்: அப்ப இதற்காக நீ உனக்குள் நிறையக் கவலைப்படுகிறாய்...

மகன்: ஆம்.

தகப்பன்: பள்ளிக்கூடத்தில் நீ நிறைய நேரம் பயந்து கொண்டே இருக்கிறாய்... பரீட்சையில் தோல்வியுறுவேன் என்று பயப்படுகிறாய்...குறைந்த புள்ளிகளே விழும் என்று நினைக்கிறாய்... ஆசிரியர் கூப்பிடும்போது உனக்கு குழப்பம் ஏற்பட்டு விடுகிறது.... உனக்கு விடை சரியாகத் தெரிந்தாலும் கூட அது அந்த நேரத்தில் நினைவுக்கு வருவதில்லை... உனது வார்த்தைகள் பயனற்றவையாக இருக்குமோ என்றும், இதை கேட்டால் ஆசிரியர் திட்டுவாரோ என்றும், மற்ற மாணவர்கள் சிரிப்பார்களோ என்றும் பயப்படுகிறாய்... இதனால் பலதடவைகளில் எதுவும் பேசாமல் இருக்கவே நீ விரும்புகிறாய்... நான் நினைக்கிறேன், எப்போதோ ஒரு தடவை நீ ஏதாவது பேசப்போக முழு மாணவர்களும் சிரித்திருக்கிறார்கள். அது உனக்கு உன்னை முட்டாளாக உணர வைக்கிறது. கவலையும் ஆத்திரமும் வ்ருகிறது. (இந்த இடத்தில் பிள்ளை தனது அனுபவங்களில் ஒன்றை சொல்லக்கூடும்.)

தகப்பன்: பார் மகன்... எனது பார்வையில் நீ சிறந்தவனாக இருக்கிறாய். ஆனால் உனக்கு உன்னைப்பற்றி வேறு அபிப்பிராயம் இருக்கிறது....


இந்த உரையாடல் அச் சிறுவனது மனதில் இருக்கும் தன்னைப் பற்றிய மதிப்பீட்டை உடன் மாற்றாது போகலாம்..ஆனால் அந்த மதிப்பீடு பற்றிய ஒரு சந்தேக விதையை இது நிச்சயமாக விதைக்கத்தான் செய்யும். ''எனது தகப்பனார் என்னை புரிந்து கொள்ளவும் நான் ஒரு நல்ல பையன் என்று கருதவும் செய்கிறார். சிலவேளை நான் அவ்வளவுக்கு மோசமானவனாக இல்லையோ'' என்று அவன் தனக்குள் நினைக்கலாம். இத்தகைய உரையாடல்களின் அன்னியோன்னியம் ஒரு மகனுக்கு, தகப்பனது எதிர்பார்ப்புக்கேற்ப தான் வாழ வேண்டும் என்ற ஒரு உந்துதலைக் கொடுக்கக்கூடும்.

வரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## விமர்சனம் பற்றியோர் விமர்சனம்!

அண்மைக் காலங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவரும் மலர்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களுமே எழுதுவது வழமையாக உள்ளது. பிற்பாடு, இம்மலர்கள் பற்றிய விமர்சனங்களையும் அதே பல்கலைக்கழக விரிவுரையாளரோ அல்லது அதிகமாய் பாராட்டத் தெரிந்த எவராவதோ நிகழ்த்துவதே மரபாக உள்ளது. அவர்களின் விமர்சனங்களில் எழுத்தாளர்கள் உச்சி குளிர்வதை தவிர வேறொன்றும் இருக்காது. இந்தப் போக்குமுறையினுள், கடந்த ஆண்டு வெளிவந்த 'இளங்கதிர்' (தமிழ் சங்க ஆண்டு மலர் 94) சம்பந்தமான காத்திரமான விமர்சனமொன்றை சரிநிகர் முன்வைத்திருந்தது. அவ்விமர்சனத்தின் ஊடாக இளங்கதிரின் ஒப்பீட்டளவிளான தரமின்மை பற்றி ஓரளவுக்கேனும் புரியக்கூடியதாய் இருந்தது.

இனிவரும் இதழ் வெளியீடுகளில் வளாகத்துக்கு வெளியிலான விமர்சனத் தன்மை உள்ள இலக்கியவாதிகளை விமர்னத்துக்கு அழைப்பது என்ற எண்ணம் தோன்ற சரிநிகரின் விமர்சனமும் ஒரு காரணமாய் அமைந்தது. அதனாலோ என்னவோ பிற்பாடு வந்த இரண்டு மலர்வெளியீடுகளிலும் விமர்சனத்துக்காய் வெளியில் இருந்தே இலக்கியவாதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

'கீதம்' (சங்கீத நாட்டிய சங்க பருவ இதழ்) இதழுக்கான விமர்சனத்துக்கு சரிநிகர் ஆசிரிய பீடத்தில் இருந்து அ. இரவி அழைக்கப்பட்டிருந்தார். அவரின் விமர்சனத்தில் ஆரம்பத்திலேயே இதழில் இருந்த ஆக்கங்களை விரிவுரையாளர்களின் ஆக்கங்கள் மாணவர்களின் ஆக்கங்கள், என பாகுபாடுபடுத்தி, விரிவுரையாளர்களின் ஆக்கங்களை விமர்சிக்கப்போவதில்லை எனவும் (விரிவுரையாளர்களின் ஆக்கங்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட தெய்வீகத்தன்மை கொண்டவை எனக் கருதினாரோ என்னவோ!) மாணவர்களின் ஆக்கங்களை மட்டுமே விமர்சிக்கப் போவதாகவும் குறிப்பிட்டார். ஆயினும் பாராட்டுக்களை முகஸ்துதிக்கு அள்ளி வீசாமல் குறைகளை சுட்டிக் காட்டிய அவரின் விமர்சனத்தில் கனம் இருந்தது.

இரண்டாவதாக இளங்கதிர் (ஆண்டு மலர் 95) வெளியீட்டு விமர்சனத்துக்கு கவிஞர் வ.ஐ.ச ஜெயபாலன் அழைக்கப்பட்டிருந்தார். ஆக்கங்கள் பற்றி எதையுமே அலசிக் கொள்ளாதபடியே அவரின் விமர்சனம் நகர்ந்தது. மலரில் எத்தனை முஸ்லிம்கள், எத்தனை பெண்கள் எழுதியிருக்கிறார்கள் என்ற புள்ளி விபரத்தை தவிர ஆக்கங்கள் பற்றிய கருத்துகள் எதையுமே அவர் குறிப்படவில்லை. அதிகமாய் முஸ்லிம்கள் எழுதியிருப்பதால் திருப்திப்பட்டுக்கொண்டார். பெண்கள் சற்றுகுறைவாய் எழுதியிருப்பதால் சற்றுக் கவலைப்பட்டுக்கொண்டார்.

முஸ்லிம்கள், மலையகத் தமிழர், பெண்கள் இவர்கள் கலை இலக்கியத்துறையில் நிறையவே புகவேண்டும் என்பதில் ஜெயபாலனோடு எனக்கும் கருத்தொருமைப்பாடு உண்டு. ஆயினும், புத்தக விமர்சனமொன்றில், ஆக்கம், எழுத்தாளரின் பால், இனம் பற்றி மட்டுமே ஆராய்வது பூரணத்துவமான விமர்சனமாக எனக்குப் படவில்லை. குறைபாடுகள் உள்ளபோது புகழ்வது போலவே, குறைபாடுகளை சுட்டாமல் சொல்கிற விமர்சனமும் எழுத்தாளனை முடமாக்கலாம்.

''தேர்ந்த இலக்கிய இதழ்களின் தரத்தோடு ஒப்பிட்டு பல்கலைக்கழகமட்டத்தில் இருந்து வரும் இதழை என்னால் விமர்சிக்க முடியாது''. இது கவிஞர் ஜெயபாலன் தனது விமர்சனத்துக்கு பிறகு மாணவர்களுடன் கலந்துரையாடும்போது சொன்னது உண்மைதான். நாம் வேண்டுவதெல்லாம் எமது மட்ட இலக்கியத்தோடாயினும் எமது இதழ்களை விமர்சனம் செய்யுங்கள்.

***'தர்சன்***
***பேராதனைப் பல்கலைக்கழகம்.***

## விதவைத்துவம் என்ற பிரயோகம் சரியானதா?

பொதுவாக முற்போக்கு கண்ணோட்டத்தில் கருத்துக்களைப் பரிமாறும் சரவணன் அவர்கள் ஜனவரி11 - ஜன24 96ல் வெளிவந்த சரிநிகரில் ஒரு பொருத்தமில்லாத சர்ச்சைக்குரிய சொல்லாட்சியை உபயோகித்துள்ளார். விதவைத்துவ அரசியல் என்று கணவனை இழந்த பெண்களால் நடாத்தப்படும் அரசியலைக் குறிப்பிட்டிருக்கிறார். பொதுவாக சொல்லாட்சிகள் பண்புகளையும், சமுதாய விழுமியங்களையும் கண்ணோட்டங்களையும் எடுத்தாள்வோரின் மன இயல்புகளையும் வெளிக்கொணருபவையாகவும் பிரதிபலிப்பவையாகவும் உள்ளன. விதவை என்ற சொல்லைப் பிரயோகிப்பதை ஒரு பெண் - கணவன் இறந்திருந்தாலும் கூட விரும்புவதில்லை. அதில் பொதிந்திருக்கும் அமங்கலத்தையும் சமுதாய மறுப்புக்களையும் அவள் ஏற்க விரும்புவதில்லை. அவை பெண்ணிற்கு எதிரானவை. அவளின் விருப்பத்திற்கு மாறாக அவள்மீது சமுதாயத்தால் திணிக்கப்பட்டவை. ஆகவே விதவைத்துவம் என்ற சொல்லை உபயோகிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பது எங்களது விருப்பம். விதவை அவள் என்று சொல்லுவதற்கும் விதவைத்துவ அரசியல் என்று சொல்லுவதற்குமிடையில் கூட ஒரு வித்தியாசம் உண்டு. இது தொடர்பான உங்களது கருத்துக்களை அறிய ஆவலாக இருக்கிறேன்.

செல்வி திருச்சந்திரன்
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
கொழும்பு-06

சரிநிகர் ஆரம்பத்திலிருந்தே மொழியைக் கையாள்வது தொடர்பாக மிகுந்த கவனமெடுத்து வந்தது. உதாணரமாக Rape என்ற ஆங்கிலப் பதத்திற்கு கற்பழிப்பு என்ற தமிழ்ப்பதத்தைப் பாவிப்பதைத் தவிர்த்து புதிய சொல் ஒன்றை தேட உதவுமாறு பெண்ணிலைவாதிகள், மொழியில் அறிஞர்கள், வாசர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது - தற்போது பாலியல் வல்லுறவு என்ற பதத்தை சரிநிகர் பாவித்து வருகிறது - அதே போல் 'விதவைத்துவ அரசியல்' என்ற பதம் குறித்தும் சரிநிகர் ஆலோசனை நடாத்தியது. அதற்கான சரியான பதம் ஒன்றை இது வரை கண்டுபிடிக்க முடியாததாலேயே அதனைப் பாவிக்க நேர்ந்தது.

ஆங்கில மொழியில் இவ்வாறான தவறான பிரயோகப் பாவனையைத் தவிர்ப்பதற்காக அண்மையில் பெண்ணிலைவாதிகள் அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார்கள். இதே போல் தமிழிலும் தவறான பதங்களைத் தவிர்ப்பதற்கான முயற்சியில் பெண்ணிலைவாதிகளும், மொழியில் அறிஞர்களும் வாசகர்களும் கவனமெடுதல் வேண்டுமென சரிநிகர் எதிர்பாககிறது.

ஆ-ர்.



## சரிநிகர்தான் நமது மாற்றுத்தளம் ஆனால் குறைவிருத்தியைப் போக்குவோம்!

இன்று இலங்கையில் தமிழ் வாசகர்களுக்கும் அரசியல் எழுத்தாளர்களுக்கும் ஒரே ஒரு மாற்றுத் தளமாக இயங்கும் பத்திரிகை சரிநிகர் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. எழுத்துச் சுதந்திரத்தை இன்றைய இலங்கையில் நடைமுறைப்படுத்தும் 'யுக்திய', 'ராவய' போன்ற சிங்களப் பத்திரிகைகளுடன் ஒப்பிடக் கூடிய ஒரே ஒரு பத்திரிகை சரிநிகர் தான். ஆனால் சரிநிகரின் இந்த மாற்றுத்தளப் பங்கு சிலவகைகளில் குறை விருத்தி நிலையிலேயே உள்ளது. எனது அபிப்பிராயத்தில் இந்தக் குறைபாடுகளை போக்காவிடில் இன சமத்துவத்திற்கும் ஐக்கியத்திற்குமான நீண்ட போராட்டத்தில் சரிநிகரின் பங்கு பலவீனப்படலாம்.

சரிநிகரை ஒரு மோர்ஜ் பத்திரிகையாக மதிப்பீடு செய்தல் அவசியம். அதே வேளை சரிநிகரின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதெற்கென மோர்ஜ் ஒரு தனிக்குழுவினை நியமித்திருப்பது எனக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது. யுக்தியவும் சரிநிகரும் ஒன்றிணைந்த ஒரு ஆலோசனைக் குழுவின் பொது உதவியுடன் இயங்கும் ஒரு ஒழுங்கு முறையையே மோர்ஜ் தலைமை தேர்ந்திருக்கவேண்டும். இதை அவர்கள் செய்யத் தவறியமை வருத்தத்திற்குரியது. நான் மோர்ஜ் அமைப்பின் அங்கத்தவன் அல்ல. ஆயினும் அதன் இலட்சியங்களை ஆதரிப்பவன். ஒரு பிளவு படாத இலங்கையில் தேசியப் இனப்பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியமாதலே தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்துக்கு நல்லது எனக் கருதுபவன்.

மோர்ஜ் தலைமை சரிநிகரின் குறை நிறைகளைப் பூரணமாக மதிப்பீடு செய்து நிறைகளைப் பலப்படுத்தவும் குறைகளைப் போக்கவும் வல்ல ஒரு கொள்கைத்திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தலே சரியான வழி என்பதே எனது கருத்து. கண்காணிப்புக் குழு அமைத்தல் இத்தகைய ஒரு வேலைத் திட்டத்தை வகுப்பதற்கு பிரதியீடாகாது. அது சரிநிகரின் தன்மை ரீதியான பரிணாமத்திற்கு உதவமுடியுமா என்பதில் எனக்குச் சந்தேகம்.

சரிநிகரின் குறைகள் என்ன? இங்கு நான் மோர்ஜ் நிறுவனம் கொள்கை ரீதியல் ஆதரித்து வரும் நோக்கங்களின் விழுமியங்களின் அடிப்படையிலேயே எனது கருத்துக்கள் சில வற்றை முன்வைக்க விரும்புகிறேன்.

1. அரசியல் நிலைமை. செல்நெறி மாற்றங்கள் பற்றிய ஆராய்வின் போதாமை:

வடகிழக்கு யுத்தம் தென்னிலங்கையில் இன உறவுகள் பற்றிய விளக்கமான செய்திகளை வெளியிடும் சரிநிகர் இந்தச் செய்திகளுக்குப் பின்னாலுள்ள அரசியல் சமூகயதார்த்தங்கள் பற்றி தென்னிலங்கையில் அரசியல் சக்திகளின் சந்தர்ப்பரீதியான சமன் பாட்டு மாற்றங்கள் பற்றி ஆராய்ந்தறிந்த கட்டுரைகளை வெளியிடுவது குறைவு. உதாரணமாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஒருபரந்த அமைப்பென்பதால் அதற்குள் போயிருக்கும் அரசியல் போக்குகளை பிரித்துப் பார்த்து அரசியல் சக்திகளின் பலம் பலவீனம் சம்பந்தமான ஆராய்வு ரீதியான தகவல்களை தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தல் அவசியமாகும். பலசந்தர்ப்பங்களில் சரிநிகர் தனி நபர்களுக்கு அரசியல் சக்திகளை விட அளவுக்கும் அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுப்பது போலவேபடுகிறது. பொதுவாகத் தென்னிலங்கையின் அரசியல் சக்திகளின் சமன்பாட்டு மாற்றங்கள் பற்றிய தொடர்ச்சியான கணிப்புக்கள் வெளிவர வேண்டும். விசேடமாக தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமான சக்திகளின் நிலைமைகள் பற்றிய ஆராய்வுகள் அவசியம். சமீபகாலங்களில் சரிநிகர் சிங்கள இனவாதிகள் பற்றிய தீர்வுக்குப்பாதகமான போக்குகளைப்பற்றிய தகவல்களையே கூடுதலாகப் பிரசுரித்துள்ளது. இது தென்னிலங்கையின் சமீபகால மாற்றப்போக்குகள் பற்றி அறிந்து கொள்ள உதவும். ஆனால் அதே நேரம் இன்னமும் அங்கே சமாதானத்தையும் இனசமத்துவத்தையும் நியாயமான தீர்வையும் ஆதரிக்கும் சக்திகள் இருக்கின்ற என்பதையும் நாம் காணத்தவறக்கூடாது. எனது அபிப்பிராயத்தில் இந்த நேச சக்திகளுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையிலான ஒரு இரு வழிப்பாலமாக சரிநிகர் அமைய வேண்டும். சரிநிகர் மோர்ஜ் நிறுவனம் சார்ந்ததால் அப்பத்திரிகைக்கும் சிங்கள பொதுமக்களுக்கும் நேரடித் தொடர்புகள் இருப்பது நிச்சயம். ஆனால், கிராமப்புற, நகர்ப்புற சிங்கள பொதுமக்களின் அபிப்பிராயங்களை நேரடியாக அறிந்து அவற்றைத் தமிழ் வாசகர்களுக்குத் தெரியப் படுத்துவதில் சரிநிகர் போதியளவு கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. இத்தகைய முயற்சிக்கு யுக்திய உதவமாட்டாதா?

2. குறுகிய தமிழ் தேசிய வாதத்திற்கெதிரான விமர்சனத் தினதும் மாற்று தேசியபார்வைகளினதும் போதாமை.

இன்று தமிழ் மக்கள் மீது மேலாட்சி செலுத்தும் தேசியவாதக் கருத்தமைவு குறுகிய இனத்தேசியவாதமாகும். இது குறுகிய சிங்கள இனவாதத்தின் பிரதிபிம்பம் போலென நான் முன்னர் பல தடவை விமர்சித்துள்ளேன். பல சந்தர்ப்பங்களில் சரிநிகர் தமிழ் இனவாதத்திற்கெதிராகத் துணிந்து குரல் எழுப்பியுள்ளதென்பது உண்மை. புலிகளின் தமிழ் இனவாத செயற்பாடுகள் இடம் பெற்ற போதும் அதை எதிர்த்து எழுதியிருப்பதும் உண்மை. ஆனால், இன்று மேலாட்சி செலுத்தும் தமிழ் இனவாதத்தின் உள்ளடக்கங்களைப் பற்றியும் எப்படி இவ்வினவாதம் தமிழ் மக்களின் தனித்துவத்தை வரையறுக்கிறது. தமிழ் பேசும் வடகிழக்கு முஸ்லிம்களை எப்படி அது கருத்தமைவுரீதியில் நிரந்தரமாக வெளிப்படுத்தியுள்ளது என்பனபற்றிய விமர்சனங்களும் அவற்றின் அடிப்படையில் இன்றைய தலையாய தமிழ் தேசிய வாதம் நிராகரிக்கப்படவேண்டும் எனும் அவசியமும் பிரதான முக்கியம் பெறவேண்டும்.

வடகிழக்குத் தமிழர்கள் ஒரு தேசியம் அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு என்பது சரியானால் அந்தத் தேசியத்தின் வரைவிலக்கணம் என்ன? அதில் தமிழைப் பேசி தமிழர் போலவே வடகிழக்கை வாழிடமாகக்கொண்டுள்ள முஸ்லிம்களுக்கு உள்ள அந்தஸ்து முஸ்லிம்கள் இதுவரை அந்த தேசியவாதத்திலிருந்து வெளிவாரிப்படுத்தப்பட்டுள்ளனர். இதன் விளைவுபோல் அமைந்தது; யாழ்ப்பாணத்தைவிட்டு அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டது. இதைச் சரிநிகர் தொடர்ச்சியாக கண்டித்து வந்துள்ளது. அது அதன்கடமை. அதே போல் இத்தகைய இனவாத நடைமுறையை நியாயப்படுத்தும் தமிழ் தேசியத்தின் உள்ளடக்கத்தையும் ஆழ ஆராய்ந்து தாக்கி நிராகரித்தல் சரிநிகரின் கடமையாகும்.

வடகிழக்கு முஸ்லிம்களுக்கும் சொந்தமெனில் நாம் அந்தப்பிரதேசத்தில் ஒரு சமத்துவமான தமிழ் முஸ்லிம் அரசியல் ஒழுங்குக்காக ஒருங்கிணைந்த ஒரு உலகப்பார்வையில் ஒரு கொள்கைரீதியான உறவைத் தேட வேண்டும். இருபக்கத்திலும் இதற்குத் தடையாக இருக்கும் குறுகிய வகுப்புவாதங்களை எதிர்த்துக் குரல் எழுப்பவேண்டும். சம்பவங்களைக் கண்டிப்பதுடன் நின்றுவிடக்கூடாது.

வடகிழக்கில் ஒரு சமத்துவமான தமிழ் முஸ்லிம் ஒழுங்குதான் நமது இலட்சியமெனில் தமிழர்கள் இன்று தம்மீது குறுகிய தமிழ் தேசியவாதத்திற்குப் பதிலாக பரந்த நோக்கும் சகசீவன விழுமியம் சார்ந்ததும் பல்லின சமூகமொன்றுக்குப் பொருந்தக் கூடியதுமான ஒரு முன்னோக்கிய தனித்துவ அடையாளத்தைத் தேடவேண்டும். இதற்கு இலங்கையில் உதவக்கூடிய பிரதான ஊடகமாக சரிநிகர் வளர வேண்டும். குறுகிய தேசியவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு மக்களால் தம்மைப் பூரணமாக விடுதலைபெற்ற ஜனநாயக உரிமைகளின் பெறுமதிகளை உணர்ந்த மனிதர்களாக மாற்ற முடியாது. இந்தச் செய்தியைப் பலமாகச் சரிநிகர் கொடுக்க வேண்டும். இத்கைய அறிவுரீதியான பங்களிப்பு தமிழ் மக்கள் சார்பில் சமாதானத்திற்கும் தீர்வுக்கும் பிரதான பங்காளியாக வேண்டிய விடுதலைப் புலிகளின் அரசியல் சிந்தனைப் போக்கின் மீது சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் வகையில் கருத்துப் பரிமாற்றங்களும் விவாதங்களும் இடம் பெறுதலும் அவசியம்.

3. தேசிய இனப்பிரச்சினையின் அரசியற் பொருளாதாரப் பரிமாணங்கள் மீது கூடுதலான அக்கறை வேண்டும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தன்மை ரீதியான மாற்றங்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் பொருளாதார பரிமாணங்கள் உண்டு. சர்வதேச ரீதியில் மூலதனத்தின் இயக்கப்பாடுகள் சமீப தசாப்தங்களில் பலமுக்கிய மாற்றங்களைப் பெற்றுள்ளன. இதன் விளைவாக தேசிய அரசு, சுயநிர்ணய உரிமை, இறைமை போன்றவற்றிலும் கணிசமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. தொடர்ச்சியான பொருளாதார சர்வதேச மயமாக்கல் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தேசியங்களுக்குப் புதிய சவால்களை விடுக்கிறது. பல்லின நாடுகள் ''ஒரு தேசியம் ஒரு அரசு'' எனும் விதிக்கமையப் பிரிவதா அல்லது ஒரு தேசியம் தனி அரசாக மாறாது ஒரு பல்லின அரசிற்குள் சுயநிர்ணயத்தை அனுபவிக்கும் அரசியல் ஒழுங்கைத் தேடுவதா? இத்தகைய கேள்விகள் இன்று முக்கியமானவை. நமது நிலைமையைப் பொறுத்தவரை தென்ஆசியப் பிராந்தியப் பொருளாதார மாற்றங்களும் மிக முக்கியமானவை. துரித வளர்ச்சிபெறும் நாடுகளும் மேற்கத்திய நாடுகளும் தத்தமது பிராந்திய பொருளாதார இணைப்புக்களை உருவாக்கிவரும் இன்றைய காலகட்டத்தில் தென்ஆசியாவில் இடம் பெறும் ஈழத்தமிழர் போராட்டம் தமிழரின் தேசியத்துவம் எதிர்கால அபிவிருத்தி ஜனநாயகமயமாக்கல் போன்ற அடிப்படைக் கேள்விகளை இலங்கையில் எப்படி அணுகவேண்டும்?

இந்த விமர்சனங்களை சரிநிகர் முன்வைக்கும் போது இவற்றிற்கெல்லாம் அப்பத்திரிகையின் ஆசிரியர்கள் மட்டும் தான் பொறுப்பு என்பதாகாது. அவர்கள் இவற்றைக் கவனத்தில் எடுத்து எதிர்கால கொள்கை வேலைத் திட்டங்களை வகுக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். அதே நேரம் தமிழ் எழுத்தாளர்களும் தமது பொறுப்பினை உணர்ந்து சரிநிகரின் விருத்திக்கு உதவவேண்டும்.

மேற்கூறிய விமர்சனங்களை ஆக்கபூர்வமான நோக்கிலேயே முன்வைக்கிறேன். சரிநிகரின் செய்திப்பத்திரிகைத் தன்மை மேலோங்காது தமிழ் சமூகத்தின் அரசியல் கலாசாரத்தை விருத்திச் செய்யும் போக்கு மேலோங்க வேண்டும் என்பதே எனது விருப்பம். இத்தகைய விருத்திப்போக்கிற்கு உதவக்கூடிய ஒழுங்கினை சரிநிகர் ஆசிரியர்கள், நிர்வாகிகள் உருவாக்கவேண்டும்.

***சமுத்திரன்***
***நோர்வே.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## சந்திரிகாவுக்கு ஒரு சபாஷ்!

சில வேளைகளில் சற்றும் எதிர்பாராத விதத்தில் எதிர்பாராத இடங்களில் இருந்து அச்சொட்டான உண்மைகள் வெளிப்பட்டு விடுவதுண்டு.

இலங்கை அரசியலில் இவ்வாறு நடந்தவற்றுள் மிக அண்மைய உதாரணம் தான் இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் போது தமிழ்க் கட்சிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்தொன்று.

அவர் சொன்னார்: ''தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோரிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவுமே கிடையாது''என்று.

ஆம்! மிகவும் தெளிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும் ஜனாதிபதி அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து, சற்றும் எதிர்பார்க்காத விதத்தில் எதிர்பார்க்க முடியாத ஒருவரிடமிருந்து வந்திருந்தபோதும், ஜனாதிபதியின் அடிப்படையற்ற பல்வேறு உளறல்களுடன் ஒப்பிடும்போது இது மிகவும் அர்த்த புஷ்டிவாய்ந்த ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை!

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதற்காக தமிழ் மக்கள் சார்பில் பல்வேறு முயற்சிகள் கடந்த நான்கு தசாப்தங்களாக நடந்த வண்ணம் இருக்கின்றன. தமிழ் தலைவர்களால் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் வந்துள்ளன. அவற்றின் தொடர்ச்சியாக இறுதியாக வைக்கப்பட்ட கோரிக்கைத்தான் தமிழீழக் கோரிக்கை.

தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட பின் அந்தக் கோரிக்கை தமிழ் மக்களது ஏகோபித்த கோரிக்கை என்று காட்டுவதற்காக, 1977ல் நடந்த பாராளுமன்ற தேர்தலினை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி அதற்கு ஆதரவளிக்கவேண்டுமென மக்களைக் கோரினர். அந்தத் தேர்தலில், மக்கள் தமது பெரும்பான்மையான ஆதரவை தெரிவித்து இக்கோரிக்கையை அங்கீகரித்தனர்.

ஆனால் தமிழ் தலைவர்களோ விரைவிலேயே தமது பாராளுமன்ற ஆசனங்கள் காலியானதைத் தொடந்து இக்கோரிக்கையைக் கைவிட்டனர். த.வி.கூட்டணி இந்தியாவிற்கு ஓடிப்போய் அஞ்ஞாத வாசம் செய்தது. ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் மட்டும் இன்னமும் தமிழீழம் அல்லது ஈழம் என்று கூறியபடியே போராடி மடிந்து கொண்டிருந்தார்கள்.

1987இல், இந்தியாவின் தலையீட்டில் புதியதொரு தீர்வு கொண்டு வரப்பட்டது. 'இலங்கை - இந்திய ஒப்பந்தம்'என அழைக்கப்பட்ட இந்தத் தீர்வை இந்தியா மூலமாக இலங்கைக்கு இறக்குமதி செய்வதில் தாம் 'பெரும் பங்காற்றியதாக' பின்நாளில் த.வி.கூட்டணி மார்தட்டிக்கொண்டது.

''இந்த ஒப்பந்தம் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் பல ஆயுதமேந்திய குழுக்களையும் கூட தமிழீழத்திற்கான 'ஆயுத மேந்திய' போராட்டத்தில் இருந்து 'சமாதான நீரோட்டத்திற்கு' தள்ளிவிட்டது. 'தமிழீழ' கோரிக்கை சமன் மாகாண சபைகள் சக இந்தியாவின் பாதுகாப்பு என்ற சமன்பாட்டை நம்பி பல இயக்கங்கள் தமிழ்க் 'கட்சி'களாகின!

த.வி.கூட்டணியோ, இந்திய அரசின் ஏஜன்டாகவே மாறிவிட்டிருந்தது. ஒப்பந்தத்துடன் வந்திறங்கிய கனரக தாங்கிகளின் பல்லுச் சக்கரங்கள் யாழ் வயல் நிலங்களை இரத்தச் சேறாக்கிக் கொண்டிருக்கையில் தமிழ் மக்கள் இந்திய சமாதானப்படையை ஆதரிக்கவேண்டுமென 'தூரதர்ஷன்' மூலம் தமிழ் மக்களைக் கோரிக் கொண்டிருந்தது த.வி.கூட்டணியின் அன்றைய தலைமை.

இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அம்போ என்று போய்விட்டபின் திரும்பவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்காக இறங்கியது இன்றைய அரசு. தீர்வு ஒன்றைக் காண்பதற்காக தமது பங்குக்கு முயல்வதில் எல்லா அரசாங்கங்களும் முயற்சி எடுத்துத் தான் வந்துள்ளன. ஜே.ஆர். முதல் சந்திரிகா வரை எல்லோருமே ஏதாவது ஒரு தீர்வு முயற்சியை தொடக்கியாவது இருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களின் 'தலைவர்கள் என்பவர்களோ' தாம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இன்றைய தீர்வு எது என்பதை முன்வைத்து அதற்காக செயற்பட்டது கிடையாது. வேண்டுமானால் சில கோரிக்கைகளை முன்வைத்து விட்டு அரசாங்கம் அதற்கு எப்படி மாற்றுத் தீர்வை முன்வைக்கிறது என்று பார்ப்பதிலேயே தமது காலத்தைக் கடத்துவார்களே ஒழிய அவற்றுக்காக செயல்படுவது கிடையாது. இப்போதும் தெரிவுக்குழுமுன் தமிழ்க் கட்சிகள் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. ஆனால் அவை தெரிவுக் குழுவால் நிராகரிக்கப் பட்டால் கூட இவர்கள் அவற்றை நிறைவேற்றுவதற்காக இயங்கப் போவதில்லை.

புலிகள் மட்டுமே, தமிழீழம் என்று கூறியபடி அதற்காக - அவர்களது வழியில் - (அது சரியா தவறா என்பது இங்கு பிரதானமல்ல) போராடி வருகிறார்கள். இங்குள்ள த.வி.கூட்டணி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளோவென்றால், அரசாங்கம் முன்வைக்கப் போகின்ற மாற்றுத் தீர்வு ஒன்றிற்காகத்தான் போராடி வருகிறார்கள்.

தமது தீர்வை முன்வைத்து அதற்காகப் போராடாமல், அரசாங்கங்கள் முன்வைக்கும் தீர்வுகளை, புலிகளையும் தமிழ் மக்களையும் நாடிபிடித்துப்பார்த்துவிட்டு, குறைகூறுவது மட்டுமே தமிழ் தலைவர்கள் எனப்படுவோரது கடமை என்பதே அவர்களது நிலைப்பாடாக உள்ளது.

இந்த நிலையில் தமிழ் தலைவர்களிடம் பிரச்சினைக்கான தீர்வு எதுவுமே இல்லை என்று ஜனாதிபதி சொல்வதில் எப்படித் தப்புக் காண முடியும்?

அவர் சொல்லவது அப்பட்டமான உண்மைதானே?

ஒருவகையில் தமிழ் தலைவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தியமைக்காக தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கு கடமைப்பட்டவர்கள் என்றே கூற வேண்டும். சபாஷ் சந்திரிகா அவர்களே!

தமக்கென சொந்தமான நிலைப்பாடும், அதற்காகப் போராடும் அக்கறையும் அற்றவர்களாக தமிழ் தலைவர்கள் இருக்கும் போது, உங்களது இந்த வார்த்தைகட்கு நிச்சயம் பலம் இருக்கத்தான் செய்கிறது. 'தமக்கென ஒரு தீர்வும் இல்லை, எம்மால் வைக்கப் பட்ட தீர்வுக்கு ஆதரவு வழங்கவும் தயாரில்லை. இது ஒரு நேர்மையீனமான செயல்' என்று நீங்கள் சொல்வதை மறுத்துரைக்க யாருக்குத்தான் முடியும்?

வெறுமனே 'எமக்கு கவலையளிக்கிறது' என்று வேண்டுமானால் ஒரு பத்திரிகை அறிக்கையை வெளியிடலாம்.

ஆனால் ஜனாதிபதி அவர்களே,

மௌனமாக உள்ளவர்கள் என்பதால் தமிழ்களை புலிகளுக்கு ஆதரவளிப்பவர்கள் என்றும், தொடர்ச்சியான யுத்தம் சிங்கள உணர்வலைகளை வளர்த்து விட்டால், அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகி விடும் என்றும் நீங்கள் அச்சமூட்டி வருகிறீர்கள். ஆனால் தமிழ் தலைவர்களையோ நேர்மையற்றவர்கள் என்று அறிவிக்கிறீர்கள். இந்த நிலையில் தமிழ் மக்கள் என்னதான் செய்ய முடியும்? மௌனமாக இருப்பதைத் தவிர?

இறுதியாக மீண்டுமொருமுறை ஜனாதிபதிக்கு ஒரு சபாஷ்! தமிழ்க் கட்சிகள் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியண்மக்காக!

## தொண்டாவின் பேரனுக்கு பிரதியமைச்சர் பதவி?

மலையக தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளான 300 நாள் வேலை வழங்குவது. 8 ரூபா சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஒரு வார அடையாள வேலை நிறுத்தத்தை கூட்டுச் சேர்ந்து நடத்த முன்வருமாறு பெருந்தோட்ட தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி இ.தொ.காவை அழைத்திருந்த போது தனக்கு இப்போராட்டத்திற்கூடாக தனியான இலாபம் எதுவும் கிடைக்கப்போவதில்லை என்பதையுணர்ந்து அப்போது உடன்படாத இ.தொ.கா பின்னர் தனியாக வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளது. இதே தினத்திலேயே தாமும் போராட்டத்தை நடாத்தப் போவதாக இ.தே.தோ.கூட்டும் அறிவித்துள்ளது.

இ.தொ.கா முன்னெடுக்கும் இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் அம்மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுக்குமா அல்லது வழமை போல வேலை நிறுத்தத்துக்கு முதல் நாள் அரசுக்கும் இ.தொ.காவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமுகமாக முடிவுற்றதை அடுத்து வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. தொழிலாளர் வழமைபோல வேலைக்குச் செல்வர் என்ற அறிவிப்பு வெளிவருமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

மலையகத் தமிழ் மக்கள் மீதான இனரீதியான பாரபட்சம், அவர்களுடைய காணிகள் பறிப்பு இளைஞர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படல், விலைவாசி அதிகரிப்பு, வேலையின்மை என்று அரசிற்கு எதிராக திரண்டிருக்கின்ற அதிருப்தியை இம்முறையும் தொண்டமான தனது நலனுக்குப் பயன்படுத்தி விடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏனெனில் 94 பொதுத் தேர்தலில் பொ.ஐ.ஐ.மு மற்றும் இ.தொ.க கூட்டுச் சம்பந்தமான பேச்சுவார்த்தை நடைபெற்ற சமயம், அப்பேச்சுவார்த்தையில் பொ.ஐ.ஐ.மு சார்பில் தி.மு ஜயரத்னவும் இ.தொ.க சார்பில் தொண்டமானும் அவரது பேரன் ஆறுமுகமும் கலந்து கொண்டனர் ஆறுமுகம் தொண்டமானுக்கு பிரதியமைச்சர் பதவி தருவதாக ஒப்புக்கொண்டதாகவும் அதனை இப்போது தருமாறும் இ.தொ.கா அரசிடம் வற்புறுத்தி வந்ததாகவும் அரசு இதற்கு மறுப்பு தெரிவித்ததையடுத்து அதற்கு நெருக்கடி கொடுக்குமுகமாகவே இப்போராட்டத்தைக் கையிலெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

மலையகத் தொழிலாளர்கள் மிகவும் மோசமான நிலையில் தோட்டத்துறையினரால் சுரண்டப்பட்டு வருகின்ற இந்நிலையில் போராட்டத்தை பிழைப்புவாத ரீதியில் பேரம் பேசலுக்குப் பயன்படுத்த முனைவது மலையக மக்களுக்கு செய்யும் பெரும் துரோகத்தனம் என தொழிற்சங்கவாதிகள் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் ஏப்ரல் 22 – 27வரையான நாட்களில் இ.தொ.க வேலைநிறுத்தம் செய்ய தீர்மானித்திருந்த போது அதே தினங்களில் பெ.தொ.கூ.கமிட்டியும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்தது. இவ் அறிவித்தலுக்கெதிராக வி.பி.கணேசன் அறிக்கை விடுத்து கர்ஜித்திருந்ததும் தெரிந்ததே. வி.பி.கணேசன்மிக அண்மையில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸை கலைத்து இதொ.காவுடன் சேர்ந்தவர் என்பது நினைவிற் கொள்ளத் தக்கது.

வி.பி கணேசன் அண்மையில் கட்சி வேலையாக தொண்டமானை சந்திக்க போயிருந்த போது வி.பி.கணேசனுக்கு மத்திய மாகாண சபை உறுப்பினர் பதவி தருவதாகவும் ஐ.தொ.காவை கலைக்கும் படியும் பேரம் பேசியதன் பின்னரே வி.பி.கணேசன் அரசியற் குழுவினருடன் எந்தவித கலந்துரையாடலையும் நடத்தாது ஐ.தொ.காவை கலைத்துவிட்டிருந்தார். ஐ.தொ.கா ஒரு பிழைப்புவாத கட்சியாக இருப்பதைவிட இ.தொ.காவுடன் போய் சேருவது நல்லதே என்ற கருத்துடையோரும் உளர். ஆனால் ஐ.தொ.காவை கைப்பற்றுவதற்கான முயற்சியை இன்னுமொரு குழுவினரும் செய்து வருகின்றனர். ஐ.தொ.காவுடன் கடந்த காலங்களில் கூட்டு சேர்ந்து மாகாணசபை மற்றும் பொதுத்தேர்தல் என்பவற்றில் போட்டியிட்ட மக்கள் தமிழ் காங்கிரசைச் சேர்ந்த சண்முகநாதன் என்பவரின் தலைமையிலான குழுவே இம்முயற்சியை செய்து வருகிறது. ஐ.தொ.கா உறுப்பினரல்லாத அவர் ஐ.தொ.கா ஏற்கெனவே இவரை மேல் மாகாண அமைப்பாளராக நியமித்திருந்த கடிதத்தைப் பயன்படுத்தி தாமே .தொ.காவின் அரசியல் பிரிவு என்றும் அது கலைக்கப்படவில்லை என்றும் முறையிட்டிருப்பதாக தெரிகிறது. இவருக்கு ஆதரவாக அஸீஸின் மறைவுக்குப் பின் வி.பி.கணேசனால் பழி வாங்கப்பட்ட அஸீஸின் மகன் அஸ்ரப் அஸீஸின் தலைமையிலான அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் உதவிகளை வழங்கி வருவதாகவும் தெரிகிறது.

இதே வேளை மலையக மக்கள் முன்னணியோ கழுவுகிற நீரில் நழுவுகிற மீனாகப் இப்போராட்டத்தில் தொழிலாளர்களை நாம் கலந்து கொள்ளச் சொல்லவுமில்லை கலந்து கொள்பவர்களைத் தடுக்கவுமில்லை என்று அறிக்கை விடுத்திருக்கிறது.

இப்போராட்டத்தை எதிர்த்தால் ஏற்கனவே அரசு மீது அதிருப்தி கொண்டுள்ள மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி ஏற்படும். ஆதரித்தாலோ அரசின் கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும் ஆக கழுவுகிற நீரில் நழுவுவதைத் தவிர வேறு வழிதான் என்ன அவர்களுக்கு?.

ஆக, தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை தங்களது பிழைப்புவாதத்துக்காகவே இவர்கள் அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் அதுதான் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி எப்போது.

என்-எஸ்

## கொழும்பில் குண்டுகள் கண்டுபிடிப்பு: அரசின் புரளிகள் அம்பலம்!

கடந்த மார்ச் மாதம் 18ம் திகதி கதிரேசன் வீதியிலிருந்து புலிகளின் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட செய்தி திட்டமிட்டு செய்யப்பட்ட சதியென்ற விடயம் வெளித்தெரியவந்துள்ளது. கதிரேசன் வீதி; கன்னாரத்தெரு மற்றும் செட்டித் தெரு பகுதிகளில் அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்ற பாதாள உலக ஆயுதக்கோஷ்டியினரின் உட்சண்டையின் விளைவே இதுவென தெரியவந்துள்ளது. குறிப்பாக இப்பகுதியில் ஒரு கோஷ்டிக்கு தலைமை வகித்து வந்த கனகு என்றழைக்கப்படும் கனகரட்னம் எதிர்கோஷ்டியினரால் சில மாதங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து கனகு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எதிர் கோஷ்டியின் தலைவர் சுதுமாத்தையாவை கொலை செய்திருந்தனர். அதைத் தொடர்ந்து இப்பகுதியில் இடம்பெற்றுவரும் கோஷ்டி மோதல்களின் விளைவாகவே கனகு கோஷ்டியினரை மாட்டி வைப்பதற்காக சுது மாத்தையா கோஷ்டியினர் வைத்த ஆயுதங்களே இவை .என்றும் இவ்விடயம் பொலிஸாருக்கு கசிந்தவுடனேயே அவ்விடத்தில் மேலும் பல ஆயுதங்களை தாமே பதுக்கி வைத்துவிட்டு அதைப் புலிகள் தான் வைத்துள்ளார்கள் எனப் பிரச்சாரம் செய்திருந்தார்கள் என்கின்ற தகவல் கிடைத்துள்ளது. ஏற்கெனவே நாரஹேன்பிட்ட குண்டு கண்டுபிடிப்புச் சம்பவமும் இவ்வகையான திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்று என்பது அம்பலத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது முக்கியமானது.

## புலிகள் பற்றி விசாரிக்க இங்கிலாந்து செல்லும் குழு!

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆயுதங்கள் எங்கெங்கிருந்து வருகின்றன. ஒத்துழைப்பு வழங்கும் நாடுகள் எவை நிதி வழங்கும் நபர்கள்யார் போன்ற விடயங்களை அறிவதற்கான விசாரணைக் குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார்.

இவ்விசாரணைகளின் நிமித்தம் இலங்கை குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் அதிகாரி டி.வி.சுமணசேகர தலைமையிலான ஒரு குழு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இக்குழு உக்ரேனிலிருந்து புலிகளுக்கு வரவழைக்கப்படுகின்ற ஆயுதங்களுக்கான நிதியுதவிகளை கொழும்பிலுள்ள பிரபல தமிழ் வர்த்தகர்கள் பலர் வழங்கி வருகிறார்கள் என்பதை அடிப்படையாக வைத்தே விசாரணை செய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இக்குழுவின் விசாரணை அறிக்கை கூடிய விரைவில் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.






## ஏப்ரல் வீரர் தினம்

மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) ஏப்பிரல் வீரர் தினம் எதிர்வரும் ஏப்பிரல் 5ம் திகதி மஹரகம இளைஞர் அரங்கில் நடத்தப்படவிருக்கிறது. 1971ம் ஆண்டு ஏப்பிரல் கிளர்ச்சியில் பலியான தங்களது தோழர்களின் 25வது வருட நினைவாக இது நடத்தப்படுகிறது. இத்தினத்தில் கலந்துரையாடல், மற்றும் விரிவுரைகளும் நடத்தப்படவுள்ளதாக ம.வி.முன்னணி அறிவித்துள்ளது.

960402.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதம ஆசிரியர் : சேரன், எல்லாத் தொடர்புகட்கு [illegible] திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.